## நிறுவன ஆசிரியர் உரை



# ஊழியமே பதில்!

# EVANGELISM IS THE ANSWER!

*J.C. Choate*

ஊழியம் என்பது நற்செய்தியைப் பிரசங்கிப்பது, பாவத்திலிருந்து ஆத்துமாக்களை மனமாற்றம் அடையச் செய்வது, இரட்சிப்பைப் பரப்புவது போன்றவைகளை உள்ளடக்கியது. இப்படித்தான் கிறிஸ்து வாழ்ந்தார், இதைத்தான் போதித்தார், இதைத்தான் அவரைப் பின்பற்றினவர்களும் செய்தனர். நற்செய்தியின் முழுமையான செய்தி, முதல் முறையாக ஏறத்தாழ கி.பி. 33-ல் பிரசங்கிக்கப் பட்டது. முப்பது வருடங்களுக்குக் குறைவான காலத்திலேயே அது உலக முழுவதிற்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இது எவ்வளவு பெரிய காரியம் பாருங்கள்!.

இயேசு தம்முடைய, இப்பூமிக்குரிய ஊழியத்தின் போது ஓயாமல் அங்குமிங்கும் சென்று பிரசங்கித்தார். அவர் கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் சென்றார். அவர் திரளான கூட்டத்தாரிடமும், தனிப்பட்ட நபர்களிடமும் பேசினார். அவர் ஆவிக்குரிய பாடங்களைப் போதிக்க பூமிக்குரிய உதாரணங்களைப் பயன்படுத்தினார். இயேசுவைப்போல அதிகாரத்தோடு பேசின மனிதனோ அல்லது தம்முடைய மகத்தான கிரியைகளின் மூலம் தேவனுடைய வல்லமையைத் தெளிவாக வெளிப்படுத்தின மனிதனோ ஒருவரும் இருந்ததில்லை. மெய்யாகவே, அவர் தேவனுடைய குமாரன் தான்.

அப்போஸ்தலர்களென்று அறியப்பட்டிருக்கிற பன்னிருவரை இயேசு அழைத்து, தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய அவர்களுக்குப் போதித்துப் பயிற்றுவித்தார். அவருடைய இறுதி வார்த்தைகளில் சில இதோ, “ *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்*” (மத். 28:19,20). இயேசு பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு முன்பு, அப்போஸ்தலர்களிடம் சொன்னதென்னவென்றால், “ *பரிசுத்த ஆவி*

*உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சி களாயிருப்பீர்கள்*" (அப். 1:8) என்பதே.

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்திற்குத் திரும்பும் போது, யூதப் பண்டிகை நாளான பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாட உலக முழுவதிலுமிருந்து யூதர்கள் எருசலே முக்கு வந்திருந்ததை நாம் வாசிக்க முடியும். இது தற்செயலாக நடந்த ஒரு சம்பவமல்ல. தேவன் இவ்விதமாகத் திட்டமிட்டிருந்தார். அப்போஸ்தலர்கள் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப் பட பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டார்கள். உண்மை யில், சுவிசேஷம் முதல் முறையாக பிரசங்கிக்கப்பட்டது. அந்த முதல் நாளிலேயே சுவிசேஷம் உலக முழு வதிற்கும் எடுத்துச் செல்லப்பட ஆரம்ப மானது. ஏறக்குறைய மூவாயிரம் பேர் பேதுருவின் செய்தியைக் கேட்டு, விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந் திரும்பி, சந்தோஷமாக ஞானஸ்நானம் பெற்றார்கள், கர்த்தர் இரட்சிக்கப்பட்ட வர்களை சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.

ஆனால், இது வெறும் ஆரம்பம் மட்டுமே. சுவிசேஷம் மறுபடியும், மறுபடியும் எருசலேமிலும், யூதேயா விலும் பிரசங்கிக்கப்பட்டபோது அதே விதமான பலனைத் தந்தது. பின்பு பிலிப்பு சமாரியாவில் பிரசங்கித்தார். அங்கே ஆண்களும், பெண்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 8:12).

அப்போஸ்தலர்கள் எட்டாம் அதிகாரத்தில், பிலிப்பு எத்தியோப்பியா விலிருந்து வந்த ஒரு மனிதனுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். அதன் விளைவு அந்த மனிதன் மனமாற்ற மடைந்தார்; அவர் வீட்டிற்குத் திரும்பிப் போய் கிறிஸ்துவின் சபை ஆரம்பமாகக் காரணமாயிருந்தார் என்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை.

அப்போஸ்தலர் 8 மற்றும் 9 ஆம் அதிகாரத்தில், சவுல் என்கிற ஒரு மனித னைப் பார்க்கிறோம். அவன் சபையை மிகவும் கடுமையாகத் துன்பப்படுத்தி னான். ஆனால், அவருடைய மன மாற்றத்திற்குப் பிறகு அதே இயேசு பற்றிப் பிரசங்கிக்கும் மாபெரும் மனித ராகி விட்டார். அவர் மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டார். அதில் அநேக ஆத்துமாக்கள் மனமாற்ற மடைந்து எண்ணற்ற கர்த்தருடைய சபைகள் ஆசியா விலும், ஐரோப்பா விலும் ஸ்தாபிக்கப்பட்டன. அப்போஸ் தலர் 10 ஆம் அதிகாரத்தில் சுவிசேஷத் தைக் கேள்விப்பட்ட பிறகு புறஜாதி களான கொர்நேலியும், அவன் வீட்டா ரும் கிறிஸ்தவர்களானார்கள் என்று வேத வசனம் சொல்கிறது. உண்மை யாகவே, இரட்சிப்பின் செய்தி எல்லா மனித இனத்துக்கும் எடுத்துச் செல்லப் பட்டிருக்கிறது.

ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவர் கள் துன்பப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, பேதுருவும், யோவானும் பிரதான ஆசாரியனாலும், ஆலோசனைச் சங்கத்தாலும் தொடர்ந்து கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்கக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருந்தாலும் கூட அது அவர்களைத் தடுக்க முடியவில்லை.

ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்தார், யாக்கோபு ஏரோதினால்

கொலை செய்யப்பட்டார். ஆனால், இந்த செயல்களோ, வேறு நடவடிக்கைகளோ கிறிஸ்தவம் பரவும் வேகத்தைக் குறைக்க முடியவில்லை. மாறாக, நெருப்பு கொழுந்து விட்டு எரிய தேவைப்படும் எண்ணெய் போன்று அவர்கள் செயல்பட்டார்கள். துன்பப் படுத்தப்பட்டவர்கள் *வெளிநாடுகளில் சிதறினார்கள். ஆனால், அவர்கள் எங்குந் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:4).*

அதன் விளைவாக, முப்பது வருடங்களுக்கும் குறைவான காலத்தில் சுவிசேஷம் உலக முழுவதிற்கும் கொண்டு செல்லப்பட்டது (கொலோ. 1:23). இருப்பினும், சுவிசேஷம் அறிவிக்க அநேக தடைகள் இருந்தன. அவர்களிடம் சுவிசேஷம் இருந்தது. *ஆனால், எழுதப்பட்ட வார்த்தை அவர்களிடம் இல்லாதிருந்தது.* நம் நாட்களில் இருப்பது போல் அந்நாட்களில் போக்குவரத்தும், தகவல் தொடர்பும் இல்லாதிருந்தது. இருந்த போதிலும், தேவன் அவர்களுக்குக் கொடுத்த வேலையை அவர்கள் செய்தார்கள். *உலகம் சத்தியத்தால் நிரப்பப்பட்டது. சத்தியம் அவர்களை மாற்றியது.*

இன்று அதே பிரதான கட்டளை நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டளை உங்களுக்கும், எனக்கும் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது? நாம் அதைத் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொள்கிறோமா? அதற்குக் கீழ்ப்படியத் திட்டமிட்டிருக்கிறோமா?

இதுவரை, அநேக தனிப்பட்ட கிறிஸ்தவர்களும், பெரும்பாலான சபைகளும் நம் கர்த்தருடைய கட்டளை சம்மந்தமாக மிகக் குறைவான அளவிலேயே காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக, சபைக்கு உள்ளும், புறமும் அநேக பிரச்சனைகளை நாம் எதிர்கொள்கிறோம். அவர் நம்மை என்ன செய்யும்படியாக கேட்டுக் கொண்டிருக்கிறாரோ அதைச் செய்யாமல் தேவனைப் பிரியப்படுத்த நம்மால் எப்படி முடியும்?

நாம் ஒருபோதும் கற்றுக் கொள்ள மாட்டோமா? தீமை, தேவ பக்தியற்ற நிலை, பொருளாசை, முழுமையான அவிசுவாசம் போன்றவற்றால் நிறைந்திருக்கிற உலகத்தைப் பாருங்கள். இந்தக் காரியங்கள் ஒருவருக்கு நன்மையாக எப்படி ஆகும்? பாவத்தின் செல்வாக்கினால் உலகம் மிக மோசமாக மாறும் போது, கிறிஸ்தவர்கள் மிகப் பெரிய விளைவுகளை சந்திக்கமாட்டார்களா? நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும், சபையிலும் பிரச்சனைகளை நாம் சந்திப்பதற்கான காரணம் கர்த்தருக்கு நம்மை ஒப்புக் கொடுக்கத் தவறியதும், அவர் நமக்குக் கொடுத்த பணியை நாம் செய்யத் தவறியதும் தான்.

இந்த அவல நிலையை நாம் எப்படி மாற்ற முடியும்? மனந்திரும்ப உலக ஊழியத்தைப் பற்றி அக்கறை கொள்ளும்போது மாற்றி அமைக்க முடியும். *ஊழியம் தான் பதில். இன்றே! இப்பொழுதே செயல்படுவோம்!* ❖

நிர்வாக ஆசிரியர் உரை

# மரணத்திற்குப் பின்னே....

# After Death....

*S. Rajanayagam*

மரணத்தைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொள்வதற்கு முன். மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து கொள்வது அவசியம். மனிதன் "*தேவனுடைய சாயலாகப்*" படைக்கப்பட்டுள்ளான். "*தேவனோ ஆவியாயிருக்கிறார்*" (யோவா 4: 24). மனிதனுக்குள்ளாக இருக்கின்ற ஆவி, அழிவில்லாத தன்மையைப் பெற்றி ருக்கும் தேவனிடத்திலிருந்து வருகிறது (1 தீமோத். 1:17) மனிதனின் சரீரம் சாவுக் கேதுவானது (ரோம 8:11). தானியேல் தீர்க்கன் சொல்லும் பொழுது, "*நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன்*" என்கிறார் (தானி. 7:15). அதாவது, தேகமாகிய சரீரத்தையும், ஆவியையும் வேறுபடுத்தியே சொல்கிறார். "*ஆக, மனிதன் என்பவன், அழியாத்தன்மையுடைய ஆவியையும், அழியும் தன்மை கொண்ட சரீரத்தையும் பெற்று விளங்குகிறான்*".

மரணம் என்பது புறம்பான மனிதனைத் தான் தொடமுடியுமே தவிர, உள்ளான மனிதனை அல்ல (II தீமோ. 4:6). உள்ளான மனிதனாகிய ஆவி எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. "*ஆவியானது அழியும் தன்மை உடையது அல்ல*". (சங். 22:26, மத். 10:28).பேதுருவும் ஆத்துமாவின் அழியாத் தன்மையை அறிந்தபடியினால் தான், "...நான் என் கூடாரத்தை விட்டு போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து...." என்கிறார்.

சரீர மரணம் என்பது ஆவியும், சரீரமும் பிரிக்கப்படுகின்ற ஓர் நிலைதான். "*இருக்கின்ற ஒருவன் இல்லாமல் போவதென்பது*" இதன் பொருள் அல்ல. யாக்கோபு ஆசிரியர் சொல்லும் பொழுது, "அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது" என்கிறார். அங்கே சரீரம் இல்லாத ஆவி செத்ததென்று சொல்லவில்லையென்பதை நாம் "*கூர்ந்து கவனிப்பது*" அவசியம். ஆக, வேத வாக்கியங்களின்படி இருந்தவன், "*இனி இல்லை*" என்ற பேச்சுகே இடமில்லை.

புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகிய கிரேக்கத்தில், மரணத்தைப் பற்றி ஒரு விளக்கம் இவ்வாறாக உள்ளது. நங்கூரம் பாய்ச்சப்பட்டு, கட்டப்பட்டிருக்கிற ஒரு கப்பல், அக்கரைக்குப் போகும்படி கட்டவிழ்க்கப்படுகின்ற ஒரு செயலைக் குறிக்கிறது. இதன் மூலம் மரணம் என்பது "கடந்து போதல்" என்று தெரிகிறது. நாம் வாழும் இன்றைய காலகட்டத்தில் மரணத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களும், விளக்கங் களும் இருப்பதைப் போலவே நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் வாழ்ந்த காலத்திலும் இருக்கத்தான் செய்தது. யூத மார்க்கத்தில் பரிசேயர்களின் பக்தி

வைராக்கியத்திற்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்று கருதப்பட்ட, சதுசேய கூட்டத்தார், "*மரணம் ஒரு மனிதனின் முடிவான முடிவு*" என்றே நம்பினர். ஆகவே தான், ஏழு சகோதரர்களை ஒருவர் பின் ஒருவராக மணந்து கொண்ட ஒரு பெண்ணின் நிலை, உயிர்த்தெழுதலில் என்ன ஆகும் என்று வினா எழுப்பி நமதாண்டவரை மடக்கப் பார்த்தனர்.

ஆனால், " முட்செடிதனில் தேவன் மோசேக்குத் தரிசனமான போது நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் " என்றார் (யாத். 3:2-6) அவர், "*பிதாக்களின் தேவனாயிருந்தேன்*" என்று கடந்த காலத்தில் பேசாமல் *தேவனாயிருக்கிறேன்* " என்று நிகழ்காலத்தில் பேசுகிறார். அச்சமயத்தில் முற்பிதாக்களாகிய அவர்கள் மரித்து 300 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் வாழ்ந்து கொண்டுள்ளவர்களாகவே தேவனால் சொல்லப்படுகிறார்கள். ஏன்?

ஆக, சரீர மரணத்திற்குப் பிறகும் ஒருவனுடைய ஆத்துமா வாழ்ந்து கொண்டு தான் உள்ளது.

சரி, சரீர மரணத்திற்குப் பிறகும் ஆத்துமா வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறதென்றால், அவர்கள் உணர்வும், ஞாபகமும் உள்ளவர்களாக இருக்க முடியுமா? இந்த கேள்விக்கான பதிலைப் புரிந்து விளங்கிக் கொள்வதில் கொஞ்சம் பிரச்சனை இருந்தாலும் உணர்வும், ஞாபகமும் மரித்தவர்களுக்கு இருப்பதாகவே வேதாகமம் சொல்கிறது. "*லாசரு, ஐசுவரியவான் உவமையில் நாம் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்* " (லூக். 16:20-31) லாசரு, ஐசுவரியவான் இரண்டு பேரும் மரிக்கின்றனர். பரதீசில் இருந்த லாசரு, ஆபிரகாமின் மடியில் விடப்படுகிறான். ஐசுவரியவான், பாதாளத்தில் வேதனை நிறைந்த பகுதியில் விடப்படுகிறான். வசனம் 25-ல் ஐசுவரியவான் தண்ணீர் கேட்டபொழுது, நீ பூமியில் செய்தவைகளை "*நினைத்துக் கொள்* " அதாவது, ஞாபகப்படுத்திக்கொள் என்று சொல்லப்படுகிறான்.

அது மாத்திரமல்ல, வசனம். 27-ல் எனக்கு ஐந்து சகோதரருண்டு, அவர்களுக்கு சத்தியம் சொல்ல லாசரு அனுப்பப்பட வேண்டும் என்கிறான். பூமியில் தாங்கள் விட்டுவந்த செயல்களைக் குறித்த நினைவு இருப்பது ஆச்சரியமாக உள்ளதா? இன்னும், கீழுள்ள வசனங்களை வாசிப்போமானால் அங்கு ஓர் அருமையான உரையாடலே நடக்கிறது. உவமை தானே என்கிறீர்களா? உவமைகள் பரலோகத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தத்தானே நமதாண்டவரால் சொல்லப்பட்டன.

மேலும், இதே பகுதியில் " *லாசரு* " தேற்றப்பட்டான் என்றும், "*ஐசுவரியவான்*" வேதனைப்பட்டான் (வ. 22) என்றும் சொல்லப்படும் பொழுது, அவர்கள் "*உணர்வற்றவர்களாக இருந்திருந்தால் தேற்றப்படுதலும், வேதனைப்படுதலும் எப்படித் தெரியும்?* " இனியும் உங்களுக்குச் சந்தேகம் இருக்க வாய்ப்பில்லை என்று நம்புகிறேன். மரித்துப் போனவர்களுக்கு, தாங்கள் வாழ்ந்த காலத்தில் நடந்தவைகள் நினைவில் இருக்குமேயொழிய, " *இன்றைக்கு பூமியில் நடக்கிற காரியங்களைக்*

*குறித்து அறிந்து கொள்ள நிச்சயமாய் வாய்ப்பில்லை* ". ஏனெனில், வேதாகமம் இதைக் குறித்து எங்கும் பேசவில்லை. நாம் இதிலே குழப்பமடைய அவசியமில்லை.

மரித்துப் போனவர்கள் என்றென்றும் பாதாளத்தின் பிரிக்கப்பட்ட பகுதிகளில் இருப்பதில்லை. பின்பு உயிர்த்தெழுதல் நடக்கும். "*கிறிஸ்தவ மார்க்கத்தின் போதனைகளும் மணிமகுடமாக இருப்பது உயிர்த்தெழுதல் தான்*". தாவீது அரசன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து முன்னறிவித்த போது (சங். 16-10) "கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்தில் விடப்படுவதில்லையென்றும், அவருடைய சரீரம் அழிவைக் காண்பதில்லையென்றும்" சொல்கிறார் (அப். 2:31) அதாவது, "*அவருடைய ஆத்துமாவும், சரீரமும் பிரிகின்ற நிலைமை தற்காலிகமானதே* " என்று உணர்த்துகிறார். அது போலவே, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பொழுது அவருடைய ஆத்துமாவும், சரீரமும் ஒன்று சேர்கிறது. மூன்றாம் நாளிலே அவரை அடக்கம் பண்ணின கல்லறை திறந்து கிடந்தது என்பதை நாமறிவோம் (லூக். 24:23) "*இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று கள்வனிடத்தில் சொன்ன கிறிஸ்துவானவர், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இன்றைக்கு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம்* " (மாற். 16:19). ஆனால், அந்தக் கள்வனின் ஆவியோ இந்த மணி நேரம் வரைக்கும் பரதீசில் தான் இருக்கு முடியும்.

மீண்டும் கிறிஸ்துவானவர் வரும்பொழுது பாதாளத்தின் ஆவிகள் வெளியே வரும், " *பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்.* " பிரேதக் குழிகளில் இருந்து எழுந்திருக்கும்பொழுதே மரித்தவர்கள் " *தங்கள் கிரியைகளின் பயனுக்கேற்றவாறுதான் எழுந்திருப்பார்கள்*". அதைத்தான் யோவான் ஆசிரியர், *நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி* எழுந்திருக்கிற வர்களாகவும், "*தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி*" எழுந்திருக்கிற வர்களாகவும் புறப்படுவார்கள் என்கிறார். (யோவா. 5:28,29).

உயிர்த்தெழுதல் நடக்கும்பொழுது எப்படிப்பட்ட சரீரத்தோடு மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள்? உயிரோடு இருக்கிறவர்கள் எப்படிப்பட்ட சரீரத்தோடு நியாயத் தீர்ப்புக்குப் போவார்கள்? என்று நாம் சிந்திப்பது நியாயமே. அதைத் தான் பவுலடியார், "*மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது*" என்கிறார் (1 கொரி. 15:50). அதை மேலும் விளக்கும்பொழுது, " *இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்* " என்று சொல்கிறார். "எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று கூறுகிறார் (1 கொரி. 15:52) மறுரூபமாக்கப்படும் செயல், " ஒரு இமைப் பொழுதிலே " நடக்கும் என்று சொல்லப்படுகிறது. அது எப்படி நடக்கும் என்று நாம் நினைக்ககூடும். வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் வார்த்தையினாலே படைத்த தேவனுக்கு இது ஒன்றும் பெரிய காரியம் அல்லவே.

சரி, அடுத்தது நியாயத்தீர்ப்பு. நியாயத்தீர்ப்பு என்று சொன்னவுடனேயே நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது. "*ஏனெனில் வரப்போகும் நியாயாதிபதி நீதியுள்ளவர்*".

இந்த உலகத்திலே நீதியும், நியாயமும் தடம் புரண்டு செல்வது வாடிக்கையாகி விட்டது. ஆனால், கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு " *சகல நீதியோடும்* " விளங்கும். அங்கே, இரக்கத்திற்கு வழியில்லை. நியாயத்தீர்ப்புக்கு உண்டான சட்டப்புத்தகம் வேதாகமம் தான். சட்டங்கள் வேத வசனங்களேயொழிய வேறல்ல (யோவா 12: 48).

" *கிறிஸ்துவானவர், மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.* " அப்பொழுது பூமியின் சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடு களையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர் அவர்களைப் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார் (மத். 23:31-33).

இராஜாவாகிய கிறிஸ்து தமது வலது பக்கத்திலே நிற்பவர்களைப் பார்த்து, "*வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்* " என்பார். (மத். 25:34) அந்த ராஜ்யம், " மகா இன்ப நகரம் " அதன் பேரழகை வர்ணிக்க வார்த்தைகளில்லை.

இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு " *பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்* " என்பார் (மத். 25:41) நரகத்தின் வேதனை உலகத்தின் எந்த வேதனையோடும் ஒப்பிட முடியாதது. சிருஷ்டிப்பின் ஆரம்ப முதலே, தேவனோடு எதிர்த்து நின்ற பிசாசுடன் நாமும் சேர்ந்துகொள்ளப் போகிறோமா?

மரணம் யாருக்கு, எப்பொழுது என்று தெரியாத நிலையில் நாம் ஜீவித்துக் கொண்டுள்ளோம். "*மெய் கிறிஸ்தவர்களாக*" மாறி, சாட்சியாக வாழாத நிலையில், நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று இந்தப் பூமியில் சொல்லிக்கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. நோக்கமும், தெளிவும் இல்லாமல் வாழ்கின்ற அறிவிலி களாகவே இருப்போம்.

நண்பரே! நம்முடைய நிலை என்ன? மெய்யான வழியைப் பின்பற்ற விலை கொடுக்கத் தேவையில்லை. எளிமையான வழியைக் கிறிஸ்து இரட்சகர் காட்டியுள்ளார். இதோ இரட்சிப்பின் வழி. வசனத்தைக் கேளுங்கள் (ரோமர் 10:14). வசனத்தை விசுவாசியுங்கள் (மாற். 16:15,16) பாவத்தை விட்டு மனந்திரும்புங்கள் (அப். 17:30). இரட்சிப்புண்டாக வாயினால் கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று அறிக்கையிடுங்கள். (ரோம 9:10). பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 2:38).

" *ஆம், ஒரு தரம் பிறப்பவன் இரண்டு முறை மரிக்கிறான். இரண்டு தரம் பிறப்பவன் ஒரு முறை மரிக்கிறான்* " ❖

# உள்ளடக்கம்


நிறுவன ஆசிரியர் உரை .... 1

நிர்வாக ஆசிரியர் உரை .... 4

சிறப்பு ஆசிரியர் உரை .... 10

## தேவன்

மாபெரும் போதகர் .....13

நம் தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் .....15

வேறொரு நாமம் இல்லை .....17

## சாட்சியங்கள்

பிசாசு ஒத்துக்கொள்வதை ஒரு நாத்தீகன் மறுக்கிறான் .....21

கிறிஸ்தவம் அதன் வேகமான வளர்ச்சியால்...... .....24

பூரண ஒழுக்கம் இயேசு கிறிஸ்துவின் மாதிரியில் காணப்படுகிறது .....26

## தேவனுடைய வார்த்தை

தேவச்சித்தமும், மனிதனின் எண்ணக்கோளாறும் .....28

தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தல் .....30

நீங்கள் வேதாகமத்தை நம்ப முடியும் .....32

இது எல்லாக் காலத்திலும் இருந்தது .....34

## வாழ்வதற்கான உபதேசங்கள்

ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் .....37

## சபை

ஏதோ ஒரு பெயர் இருப்பது போதாது .....40

நான் என் சபையைக் கட்டுவேன் .....41

சபையை மீட்டமைத்தல் .....43

ஆம், பாரம்பரியத்துக்கு மதிப்பு இருக்கிறது .....44

## ஆராதனை

ஆராதனை துதியா அல்லது செயல் நிறைவேற்றலா? .....45

ஆராதனை என்பது ... .....46

எந்த ஞாயிற்றுக்கிழமையை தவற விடலாம் .....48

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

நீங்கள் ஆவிக்குரிய வகையில் உயிரோடிருக்கிறீர்களா? .....51

கிறிஸ்தவ ஒத்திசைவு .....54

கற்குவியலருகே ஒரு கூடுகை .....56

கிறிஸ்தவன் வித்தியாசமாக இருக்க வேண்டும் .....59

பிரதிபலிப்புகள் .....61

அவதூறு பேசுதல் .....63

யாருக்கு உபயோகமானது ? .....65

பாடுவதற்கு எப்படி ஒரு நேரம்.. .....68

வேலையில் அசதியாயிராமல்.. .....69

தேவனுடைய கரத்தில் வைத்து விடுங்கள் .....71


## கிறிஸ்தவ இல்லம்


ஏலியின் குமாரர்கள் .....74

ஒரு பெண்ணின் மதிப்பு .....76

தேவனில்லாமல் வளருதல் .....78


## செயலில் கிறிஸ்தவம்


சமய ஒற்றுமை சாத்தியமே .....79

அழகான பாதங்கள் .....84

ஊழியம் என்பது நம்முடைய விருப்பத்தின்படியானதல்ல ......86


## இரட்சிப்பு


வரங்கள் சில வேளைகளில் நிபந்தனைக்குட்பட்டதாயிருக்கின்றன ..... 89

பரலோகம் போவது பற்றி ..... 90


## வசனப்பகுதி பாடங்கள்


பேதுரு தண்ணீரின் மேல் நடத்தல் .... 91

நம்ப முடியாத தேவன் .... 93


## வேதாகமக் கதாபாத்திரங்கள்


எஸ்தர் .... 96

வெற்றியான தோல்வி .... 99

பிலேயாமைப் பற்றிச் சொல்லுங்கள்.... 101


## வேதாகமக் கேள்விகள்


சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வன் இரட்சிக்கப்பட்டது போல ... .... 103

உண்மையாகவே ஞானஸ்நானம் அவசியமா? .... 105

நமக்காக பரிந்து பேசுகிறது யார்? .... 106

இயேசு கிறிஸ்துவுக்குள் .... 108

கிறிஸ்து நம் ஆடையாயிருக்கிறார் .... 109

என் குடும்பத்திற்கு நான் எதைக் கொடுப்பேன்? .... 111

**சிறப்பு ஆசிரியர் உரை**

# தேவையானது : கண்களோடே உடன்படிக்கை (யோபு 31:1)

## Needed : A Covenant With Our Eyes (Job 31:1)

*Byron Nichols*

சகிப்புத்தன்மைக்கான தனது மிகப்பெரிய சோதனையின் பாதையில் ஆச்சரியமான முறையில் யோபு மகா முக்கியத்துவம் வாய்ந்த இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார் : "*என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி?*" (யோபு. 31:1). யோபு இங்கே என்ன சொல்கிறார்? தன் கண்களோடே உடன்படிக்கை பண்ணினதாக யோபு சொல்லும் போது என்ன பொருள்படும்படி அப்படிச் சொன்னார்? அவர் ஓர் ஒப்பந்தத்தை, பொருத்தனையை, உறுதிமொழியைச் செய்திருப்பதாகச் சொல்கிறார்.

வசனத்தின் இரண்டாம் பகுதியில் யோபு, ஒரு கன்னியைப் "பார்ப்பதைக்" குறித்துப் பேசுகிறார். இங்கே அவர் ஒரு கன்னியை அசாதாரணமாகப் பார்ப்பதைப் பற்றி பேசுகிறார். இங்கே "பார்ப்பது" என்பதன் பொருள் தவறான நோக்கத்தோடு, அசுத்தமான எண்ணங்களுடன், காமத்துடன் பார்க்கும் பார்வையைக் குறிக்கிறது. எனவே, இங்கே யோபு "என் கண்கள்" ஒரு பெண்ணை அளவுக்கதிகமான ஆசையுடன் பார்த்து தேவனுடைய கண்களுக்கு முன்பாக பாவம் செய்யக் காரணமாக அமைந்து விடாதபடி என் கண்களோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறேன் என்று சொல்கிறார். ஒரு பெண்ணை இச்சையுடன் பார்க்க என் கண்களை அனுமதிக்காதபடி அர்ப்பணித்திருக்கிறேன். நான் பாவம் செய்ய என் கண்கள் காரணமாக அமைய நான் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை என்று உறுதி பூண்டிருப்பதாக யோபு கூறுகிறார்.

இந்த உடன்படிக்கையை எல்லா மனித இனமும், குறிப்பாகக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மாபெரும் வார்த்தைகளால் யோபுவின் பக்தி வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. இயேசு பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு என்ன சொல்வார் என்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பேசியிருக்கிறார். மத்தேயு 5:27-30 வசனங்களில் இயேசு திரளான கூட்டத்தைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார். "*விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டு இருக்கிறீர்கள்; நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்*

*எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று*". இவ்வகையான பார்வைக்கு எதிராகத் தான் யோபு தன் கண்களோடே மிகச் சரியாக உடன்படிக்கை பண்ணினார். அவர் இப்படிச் செய்ததில் நிச்சயமாக ஞானமாக நடந்திருக்கிறார்.

ஏனென்றால், இயேசு அடுத்த வசனத்தில் தொடர்ந்து இவ்விதமாகச் சொன்னார். "*உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்*" (வசனம் 29). இந்த வசனத்தில் இயேசு சில காரியங்களை வலியுறுத்தும்படியாக இவ்விதமான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று நம்புகிறேன். நாம் எவைகளை உணர வேண்டுமென்று அவர் திட்டமிட்டிருக்கிறாரோ அது நமக்கு நித்திய நன்மையை உண்டாக்குவதாக இருக்கிறபடியில் நாம் பாவம் செய்வதைத் தவிர்க்க அது ஒன்று தான் வழியென்றால் உண்மையாகவே நம் முகத்தில் இருந்து கண்களைப் பிடுங்கிபோடுவதில் தவறில்லை.

---

" *உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்* "

---

தாவீதுக்கு அவ்வப்போது "கண் பிரச்சனை" இருந்தது (பத்சேபாள் பற்றி நினைத்துக் கொள்ளுங்கள்) ஆனால், தான் பக்குவப்பட்ட பின்னாளில் இவ்விதமாக எழுதுகிறார். "*தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்*" (சங். 101:3). "*நான் எதைப் பார்ப்பதில்லையோ அது என்னை காயப்படுத்தாது*" என்கிற வார்த்தைகளில் உண்மையாகவே ஓரளவு பொருள் இருக்கிறது. இது எல்லா சூழ்நிலைகளிலும் சரியாக இருப்பதில்லை. ஆனால், சோதனையையும், பாவத்தையும் தவிர்ப்பது என்று வரும் போது எவ்வித சந்தேகமுமின்றி அந்தச் சூழ்நிலையைப் பார்க்க நம் கண்களை அனுமதிக்காமல் இருப்பதன் மூலம் வெல்ல முடியும் என்பது உண்மையாயிருக்கிறது.

II பேதுரு 2:14 ல் பேதுரு, "*விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்*" என சிலரைப் பற்றி பேசுகிறார். நண்பர்களே, நாம் ஒவ்வொருவரும், ஆண்களும், பெண்களும் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற மக்களைப் போல அப்படிப்பட்ட பாவங்களில் சிக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அது முடியும், அப்படி நடக்கிறது. ஆனால், அது அப்படி நடக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய உதவியால் அப்படி நடக்காமால் நம்மால் தடுக்க முடியும். நம்மெல்லாருக்கும் I கொரி. 10:13 ல் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற உறுதிமொழியை நினைவில் கொள்ள வேண்டும். "*மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு*

*நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்".* நாம் மாம்சீக இச்சைகளின் சோதனையைக் கூட வெல்ல முடியும். நாம் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால், பரலோகம் போக விருப்பமுள்ளவர்களாக இருந்தால் நாம் அப்படிச் செய்ய வேண்டும்.


திருமணமான ஒவ்வொருவரும் யோபு செய்த உடன்படிக்கையைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் திருமண வாழ்க்கையில் பதற்றத்தையும், ஆத்துமாவை ஆபத்தில் தள்ளுகிற பாவத்தையும் செய்யாதபடி தங்கள் கண்கள் பிறரை தீயநோக்கத்துடன் பார்க்க அனுமதிக்காமல் ஓர் அர்ப்பணிப்புடன் வாழ்வது அவசியமாயிருக்கிறது. அதுபோல, திருமணத்திற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிற வர்கள் அப்படிப்பட்ட உறவுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பு அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, தாங்கள் திருமணம் செய்யப் போகிறவர்கள் மீது மட்டும் கண்கள் நோக்கமாயிருக்கும்படி தங்கள் கண்களோடே உடன்படிக்கை பண்ணும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

"அலைபாயும் கண்கள்" யாராவது ஒருவருடைய சரீரத்தின் பகுதியாக இருக்கலாம், ஆனால், நாம் அதை அனுமதித்தால் தான் நம்மில் ஒரு பகுதியாக அது இருக்க முடியும். யோபுவுக்கு தெரிந்து கொள்ளுதல் இருந்தது - அவரால் கட்டுப்பாடாகவும் இருந்திருக்க முடியும் அல்லது கட்டுப்பட்டிருக்கவும் முடியும். உங்களுக்கும் எனக்கும் அதே தெரிந்து கொள்ளுதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் எதைத் தெரிந்து கொள்வோம் ? நாமெல்லாரும் நம் கண்களோடே உடன்படிக்கை பண்ணுவோமா?. ❖

## கர்த்தருடைய கண்கள்

தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக் கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது ...

(II நாளா. 16:9)



# மாபெரும் போதகர்
# The Master Teacher
*Tom Kelton*

இயேசுவின் பிரதான பணி போதிப்பதாகத்தான் இருந்தது. சுவிசேஷச் செய்தியை வெளிக்கொணர எல்லா வழிகளையும் மனுஷகுமாரன் தெரிந்தெடுக்க முடிந்திருந்தாலும் கூட அவர் போதகராயிருப்பதையே தெரிந்து கொண்டார். அவர் ஒரு சுவிசேஷகராக இருந்தார் என்பது உண்மை தான். கிறிஸ்து சுகமாக்குபவராகவும், அற்புதங்களைச் செய்பவராகவும் அறியப்பட்டிருந்தார். நிச்சயமாகவே அவர் குறிப்பிடத்தக்க பிரசங்கியாக இருந்தார். ஆனால், வேதாகம சாட்சியங்களை நாம் பார்க்கும்போது இயேசுவின் வாழ்க்கை மற்றும் பணியினால் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய தாக்கம் அவருடைய போதனையினால் வந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இயேசுவின் வாழ்க்கை பற்றியும், ஊழியம் பற்றியும் விவரிக்கும் வேத வசனங்கள் அவருடைய எண்ணற்ற "போதனை நேரங்களைப்" பதிவு செய்திருக்கிறது. ஜெப ஆலயங்களில் வெளிப்படையாகவும், தேவாலயங்களிலும், திறந்த வெளியிலும் அவர் செய்த போதனைகளை வேத வாக்கியங்களில் நாம் காணலாம். உண்மையாகச் சொல்லப்போனால், சுவிசேஷப்

புத்தகங்களில் இயேசு நாற்பத்திரண்டு முறை போதகராக அழைக்கப்பட்டிருக்கிறார். நாற்பத்தேழு முறை அவர் போதிப்பது பற்றி வேத வசனம் நமக்குச் சொல்கிறது. கிறிஸ்து வெளிப்படையாகவே தம்மைப் போதகராகக் கருதினார். அவரைப் போதகர் என்று மற்றவர்கள் அழைத்த போது அவர் அதைத் தடைசெய்யவில்லை. ஆனால், வேறு மதப்பட்டங்களைத் தம்மை பின்பற்றினவர்களும், தம்மை விமர்சனம் பண்ணியவர்களும் அழைத்த போது அதற்கு அவர் தடை விதித்தார். அவர் சென்ற இடமெல்லாம் "ஆசான்" என்று அழைக்கப்பட்ட போது அவர் அதற்குப் பதிலளித்தார்.

அவரோடு ஒத்துப்போகாதவர்கள் கூட அவரை மாபெரும் போதகரென்றும், ரபீ என்றும் அங்கீகரித்தார்கள். இயேசுவை எதிர்த்த பரிசேயர்களும், சதுசேயர்களும் அவரை "போதகர்" என்றே அழைத்தார்கள்.

இயேசு ஒரு மாபெரும் போதகர் என்பதற்கு மிக வல்லமையான ஆதாரம் அநேகமாக அவரோடு சென்ற சீஷர்கள் தான். சீஷர்கள் என்றால் சொல் அர்த்த ரீதியில் " கற்றுக்கொள்பவர்கள் " இயேசுவை நினைவுகூரத்தக்க, திறன்படைத்த போதகராக மாத்திரம் பார்க்காமல் நீதியுள்ள வாழ்க்கையின் சிறந்த மாதிரியாகப் பார்த்தபடியால் அவருடைய போதனையைக் கேட்க விருப்பத்தோடு பின் சென்றார்கள். ஒரு போதகராக இயேசு கிறிஸ்து இந்த மக்களுக்கு தம்முடைய வார்த்தைகளை மட்டும் திறக்கவில்லை. அவருடைய முழு வாழ்க்கையையே திறந்து காட்டினார். ஒரு போதகருடைய வெற்றி அல்லது தோல்வி அவருடைய மாணாக்கர்கள் எதை நிறைவேற்றுகிறார்களோ அல்லது செய்து முடிக்கிறார்களோ அதை அடிப்படையாக வைத்து அளவிடப்படுகிறது. கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குப் போதித்ததினால் ஏற்பட்ட விளைவு அவரை எல்லாக் காலத்திற்கும் மாபெரும் போதகராக மாற்றி இருக்கிறது.

இயேசு மாபெரும் போதகர் என்பதை பின்வரும் சந்ததியும், விசுவாசிகளும், அவிசுவாசிகளும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றாசிரியர் "Fredrick Mayer" "கல்வி வரலாற்றில் இயேசுவின் தாக்கம் மிகப்பெரியது" என்று உறுதியாகச் சொல்கிறார். இயேசு பதித்த முத்திரையை ஒருவராலும் ஒருபோதும் அழிக்க முடியாது என்றும் அவர் சொன்னார். கிறிஸ்தவர்களல்லாதவர்களும் கூட இயேசு ஒரு மாபெரும் ஞானமுள்ள போதகர் என்பதை நம்புகிறார்கள். அநேகமாக இவ்வுலகில் வாழ்ந்தவர்களில் மனித இனத்தின் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் அவராகத்தான் இருக்க முடியும்".


இன்று கிறிஸ்தவக் கல்வியின் சூழலுக்கு கிறிஸ்துவை விட சிறந்த முன் மாதிரி யாருமில்லை. ❖

**" ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்" (யோவான் 3:2)**

# நம் தேவன் – பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்

## Our God A Consuming Fire

*Rex Banks*



"*பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்*" (எபி. 1:1) என்று நமக்கு நினைப்பூட்டி விட்டு எபிரெய நிருபத்தின் ஆசிரியர் "*இந்தக் கடைசி நாட்களில்*" அதாவது (கிறிஸ்துவின் காலத்தில்) *குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்* என்று சொல்கிறார் (எபி. 1:2). இங்கே குமாரன் மூலமாய் என்பது தீர்க்கதரிசியிடமிருந்து வேறுபட்ட குமாரன் மூலமாக புதிய வெளிப்பாடு கொடுக்கப் பட்டிருக்கிறது என்கிற கருத்தை வலியுறுத்துவதற்காக இப்படி வெளிப்படையாக எபிரெய ஆசிரியரால் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே வெளிப்பாடு என்பது குமாரனைப் பற்றிய வெளிப்பாடு தான்.

இப்போது, எபிரெய ஆசிரியர் தொடர்ந்து சொல்லும் போது, குமாரனுடைய மகத்துவத்தை வலியுறுத்தி அதன் மூலமாக அவரால் அருளப்பட்ட தெய்வீக வெளிப்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும்படியாய் ஏழு உண்மைகளை அவர் விவரிக்கிறார். முதலாவது, தேவன் "தம்முடைய குமாரனாகிய இயேசுவை *சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார்*". அதன் பொருள் பிதாவினுடையவைகள் எல்லாம் குமாரனுடையவைகள் என்பதாகும் (அப். 2:36; யோ 17:10; 16:15). அடுத்ததாக, "*குமாரன் மூலமாக தேவன் உலகங்களை உண்டாக்கினார்*" (கலா 1:15-17) யோவான் 1:3,10; கொரி 8:6) அவர் மூலமாக உலகங்கள் உண்டாக்கப்பட்டது என்பதினால் அவர் கிரியை செய்யாமல் இருக்கவில்லை. ஆனால், கிரியையில் அவர் ஒத்துழைப்புக் கொடுத்துச் செயல்பட்டிருக்கிறார். "*கிறிஸ்து தேவனுடைய மகிமையின் பிரகாசமாயிருக்கிறார்*". மனுஷரால்

காணக்கூடாத தேவனுடைய பிரகாசத்தின் வெளிப்பாடாகக் கிறிஸ்து இருக்கிறார் (யோவான் 1:18). *கிறிஸ்து தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறபடியால் " என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் " என்று அதிகாரத்தோடு சொல்ல முடியும்* (யோவான் 14:9). *சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவர் கிறிஸ்துவே.* அதுபோல, தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி *உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்* (எபேசி 4:10; பிலி. 2:9; சங். 110; லூக். 22:69; மாற் 28:18; யோவான் 17:2) புதிய ஏற்பாட்டு பக்கங்களில் தேவன் யார் மூலமாகப் பேசினாரோ அவருடைய தன்மையையும், நிலையையும் எபிரெய ஆசிரியர் பேசுகிறார்.

"தீர்க்கதரிசிகளைக்" காட்டிலும் இயேசு மேலானவர் என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், கிறிஸ்து மூலமாக யெகோவா கொடுக்கும் வெளிப்பாடு பற்றி நமக்கு என்ன பாடம் கிடைக்கிறது? "*ஏனெனில், தேவதூதன் மூலமாய்ச் சொல்லப்பட்ட* (கலா. 3:19; அப். 7:53) *வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும், கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து குமாரன் மூலமாக சுவிசேஷத்தில் வெளியாக்கப்பட்டுள்ள நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்* (எபி. 2:2,3) நிச்சயமாகவே, ஒருவர் இதை லேசாக எடுத்துக்கொண்டால் மிகப்பெரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டியதாயிருக்கும். பின்பு, எபிரெய எழுத்தாளர் யூத மதத்திற்கு மறுபடியும் திரும்பும் அபாயத்திலிருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக நினைப்பூட்டுகிறார்: " *மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு, மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே*" (எபி. 10:28) அதன் பின்னர் கேள்வி ஒன்றைக் கேட்கிறார். "*தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்*" (வசனம் 29).

கிறிஸ்துவை விட்டு விலகிச் செல்வது மரண ஆபத்தானது! "*ஏனெனில் பூமியிலே பேசினவருக்குச் செவி கொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப் போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப் போம்?*" (எபி. 12:25). எனவே விலகிச் செல்லுதல் மரணத்திற்குச் சமம். நிச்சயமாகவே, கிறிஸ்துவைக் காண்பதற்கு அன்பு தான் மிகச்சிறந்த தூண்டுகோலாக இருக்கிறது! ஆம், நிச்சயமாக பயத்தை விட நன்றியுணர்வு நம்மை விசுவாசமுள்ளவர்களாக வைக்க வேண்டும் (எபி. 12:28). ஆனால், அன்பின் வேண்டுகோளும், நன்றியுணர்வின் உந்துதலும் இதயத்தை அசைக்கத் தவறும்போது " *நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே* " என்பதை நாம் மறந்து விட வேண்டாம் (எபி. 12:29). ❖

தேவன்

# வேறொரு நாமம் இல்லை

## *There is No Other Name*

### ***B. Arjunan***

உலகத்திலே உன்னதமான நாமம் இயேசுவின் நாமமே. இந்த நாமம் உயர்வான நாமம். எப்படியெனில், "இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் " என்று பிலி. 2:10,11 வசனங்களில் படிக்கிறோம். இதை அறியாத ஜனங்கள் காணாத நாமத்தையும், செவி கொடாத நாமத்தையும் பற்றிக் கொண்டிருக் கிறார்கள். வானத்திலும் சரி, பூமியிலும் சரி ஒரே ஒரு நாமமே கொடுக்கப்பட்டுள்ளது. அது இயேசுவின் நாமம். அது மேன்மையான நாமம். எபிரெய ஆசான் சொல்லும் போது; "இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ள வரானார்" என்று சொல்லுகிறார் (எபி. 1:4).

சிலர், நாமத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கிறார்கள். இயேசு என்ற நாமம் பிதாவாகிய தேவனால் முன்னறிவிக்கப்பட்ட நாமம். தேவதூதனால் யோசேப்புக்கு சொல்லப்பட்டது; "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத். 1:21) யோசேப்பும் மரியாளும் சேர்ந்து வைத்த பெயர் அல்லது தேவ தூதன் சொன்னபடியே அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். "எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும், நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?" என எபிரெயர் புத்தகத்தில் படிக்கிறோம். எத்தனையோ தீர்க்கதரிசிகளை பிதாவாகிய தேவன் அனுப்பிக் கொண்டு வந்தார். மற்றும் தேவதூதர்கள் மூலமாகவும் ஜனங் களைச் சந்தித்துக்கொண்டு வந்தார். இவர்களுக்கு மேலாக தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படியாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அதிகாரம் கொடுத்து அவரை தம்முடைய முதற்பேறான குமாரனாக்கினார். இத்தனை பெரிய ஆசீர்வாதத்தை இயேசுவானவர் எப்படி சம்பாதித்தார் என்று நீங்கள் நினைக்கக் கூடும். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே தாழ்த்தினார்.

ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்". ஒரு மனிதனுக்கு உயர்வான இடத்தைக் கொடுத்துவிட்டு, பின்பு கீழான இடத்திற்கு போகச் சொன்னால் அந்த உயர்வான இடத்திலிருந்து என்னை போகச் சொன்னதன் காரணம் என்ன? என்று சண்டையிடுவான். ஆனால், ஆண்டவராகிய இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். ஆகையால், பிதாவாகிய தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்.

## இயேசுவின் நாமம் குணமாக்கும் நாமம்

இன்றைக்கு உலகமெங்கும் கர்த்தருடைய நாமத்தை அநேகர் பற்றிக் கொள்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் என்ன? அவருடைய நாமத்தில் அநேகர் குணமாக்கப்படுகிறார்கள். உண்மையான வைத்தியனை ஜனங்கள் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். ஆகையால், அதிகமான ஜனங்கள் தங்களுடைய வீணான மார்க்கத்தை விட்டு ஜீவனுள்ள தேவனுடைய மார்க்கத்தில் வந்து இணைகிறார்கள். ஒரு முறை பேதுரு ஒரு சப்பாணியைக் கையைப் பிடித்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று தூக்கிவிட்டான். அவன் குதித்தெழுந்து நடந்து அவர்களோடு தேவாலயத்திற்குச் சென்றான். இதைப் பார்த்த ஜனங்கள் ஆச்சரியப் பட்டார்கள். அப்பொழுது பேதுரு: "அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்றான் (அப். 3:16). இன்றைக்கு மனிதர்களை நாடி அங்குமிங்கும் ஓடுகிறார்கள். அங்கே சென்றால் சுகமாகாதா, இங்கே சென்றால் சுகமாகாதா என்று அலைந்து திரிகிறார்கள். நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் அநேகருக்கு வருகிறதில்லை. அவன் இயேசுவைப் பார்த்து ஆண்டவரே நீர் என் வீட்டுக்கு வர நான் பாத்திரனல்ல, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என் வேலைக்காரன் பிழைப்பான் என்றான். இவனுடைய விசுவாசத் தைக் கர்த்தர் கண்டு தமக்குப்பின் செல்லுகிற ஜனங்களைப் பார்த்து இஸ்ரவேலுக் குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். அவனுடைய விசுவாசம் அப்படிப்பட்டதாக இருந்தது. வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர் எங்குமிருக்கிறார். அவர் மூலமாக நாம் வேண்டிக்கொள்ளும்போது அவர் பரமபிதாவிடம் நமக்காக வேண்டிக்கொள்வது அதிக நிச்சயமல்லவா! முதல் நூற்றாண்டு சீஷர்கள், சபையார்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் மிகத் தீவிரமாக இருந்தனர். அப்பொழுது அவர்கள்-கூடி "உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும்

சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்று ஜெபித்தார்கள் " (அப். 4:30). இப்படியாக கர்த்தர் அப்போஸ்தலர்கள் மூலமாக அநேக அடையாளங்களும், அற்புதங்களும் நடக்கும்படி அநுக்கிரகஞ்செய்தார்.

இயேசுவின் நாட்களில் அவரால் குணமாக்கப்பட்டவர்கள் அநேகர். இயேசு ஒரு கிராமத்திற்கு வருகிறார் என்று கேள்விப்பட்டால் போதும் வியாதிக்காரர்கள் அநேகர் கூட ஆரம்பித்துவிடுவார்கள். அந்தப்படியாக ஒரு முறை இயேசு கெனேசரேத்து நாட்டிற்குச் சென்றார். " அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் " என்று மத். 14:35,36 வசனங்களில் படிக்கிறோம். வைத்தியரை நாடினால் அவர்கள் வைத்தியம் செய்து மருந்து மாத்திரைகள் கொடுப்பார்கள். ஆனால், இயேசுவைத் தொட்ட யாவரும் சுகமானார்கள். மேலும், அப்போஸ்தலனாகிய பேதுரு தமது பிரசங்கத்தில்; " அவர் நன்மை செய்கிறவராயும் சுற்றித் திரிந்தார் " என்று குறிப்பிடுகிறார் (அப். 10:38) இந்தப் பூமியில் வந்த ஞானவான்கள் தேவ மனிதர்கள் என்று தங்களை சொல்லிக் கொண்டவர்கள் எல்லோரும் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களுடைய முடிவு என்ன என்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தங்களுக்கு வேண்டிய சொகுசான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். கஷ்டத்தின் மத்தியில் இருக்கிற ஜனங்களைக் கண்டு கொள்ளாமல் வாழ்ந்தனர். ஆனால், ஆண்டவர் இயேசு எங்கும் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு நேயாளியைக் கண்டால் அந்த நோய் தனக்கு வந்துவிடும் என்று அச்சப்பட்டு ஒதுங்கிப் போகிற மக்கள் இருக்கிறார்கள். ஆனால், இயேசு அவர்களை நேசித்துத் தொட்டு, அவர்க ளுடைய காரியங்களை விசாரித்து நன்மை செய்கிறவராய் இருந்தார்.

## இயேசுவின் நாமம் இரட்சிக்கும் நாமம்.

அவருடைய நாமத்தில் இரட்சிப்பு உண்டு. நாமம் எப்படி இரட்சிக்கும் என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நாட்டில் போடப்படும் சட்டம் ஒரு மனிதனைக் காப்பாற்றுகிறதில்லையா?, பிதாவாகிய தேவன் மனிதர்களுக்குள்ளே இரட்சிக்கும் நாமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல் லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12). வெறிநாய் கடிக்கு ஊசி கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த ஊசியைப்போட்டால்தான் வெறிநாய் கடி பட்டவனை காப்பாற்றமுடியும். அதைப் போல ஒரு ஆத்துமாவைப் பாவத்திலிருந்து காப்பாற்ற, அதாவது இரட்சிக்க; இயேசுவின் நாமமே கட்டளையிடப்பட்டிருக்கிறது. வேறொரு நாமம் சொல்லப் படவும் இல்லை கட்டளையிடப்படவும் இல்லை. ஆனால், போலியான அநேக

நாமங்கள் தோன்றியிருக்கிறது. அவைகள் வீணானவைகள். அவைகளால் ஒரு ஆத்துமாவைக்கூட காப்பாற்ற முடியாது. அவைகள் பூமிக்குரியவைகள் வானமும், பூமியும் அழியும்போது அவைகளும், அவைகளை உண்டு பண்ணினவர்களும் அழிந்துபோவார்கள். பவுல் மனந் திரும்பும்போது, அனனியா பவுலை நோக்கி: "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடை நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றான் (அப். 22:16) உடனே அவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்பட்டான். கர்த்தருடைய நாமம் அவனை இரட்சித்தது. அதைப்போல அப்போஸ்தலனாகிய பவுல் சிறைச்சாலைக்காரனுக்கும் அவன் வீட்டில் இருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்கும்போது அவர்கள் "இராத்திரியில் அந்நேரத்திலே தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் " (அப். 16:33). இப்படி கர்த்தருடைய நாமத்தில் கீழ்ப்படிகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:47). இச்செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கிற தேவ ஜனமே வானத்திலும், பூமியிலும் ஒரே ஒரு நாமமே கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த நாமம் உயர்வானது, அந்த நாமம் குணமாக்கும் வல்லமையுள்ளது, அந்த நாமம் நம்மை இரட்சிக்க வல்லது. அந்த நாமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்.

## இயேசுவின் நாமத்திலே தான் சபையாகக் கூடி வரவேண்டும்

எந்தப் பெயரிலும் சபை கூடி வரலாம் என்று அநேகர் நினைக்கின்றனர். அது தவறு. வேதாகமம் நமக்கு அவ்விதமாகப் போதிக்கவில்லை. இயேசுவின் நாமம் பரலோகத்திருக்கிற பிதாவாகிய தேவனால் முன்னறிவிக்கப்பட்டது. அவருடைய சித்தத்தின்படியே நாம் செயல்பட வேண்டும். தீர்க்கதரிசிகளுடைய நாமத்தினாலும், அப்போஸ்தலருடைய நாமத்தினாலும் சபை அழைக்கப்படுகிறதை சிலர் விரும்பு கின்றனர். அப்போஸ்தலர்களோ தீர்க்கதரிசிகளோ நம்முடைய பாவங்களுக்காக மரிக்கவில்லை. இயேசு ஒருவரே நமக்காக மரித்தும் எழுப்பப்பட்டுமிருக்கிறார். அவருடைய நாமத்தைப் பிதாவாகிய தேவன் வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக் குள்ளே அறிவித்துமிருக்கிறார். ஆண்டவர் இயேசு சொல்லும்போது, "இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் " (மத். 18:20). அவருடைய நாமத்தில் நாம் சபையாகக் கூடிவரும்போது நம் மத்தியில் கர்த்தர் இருப்பார். பிதா வாகிய தேவனை கனம் பண்ணுகிறதுபோல இயேசுவையும் நாம் கனம் பண்ண வேண்டும். இயேசுவின் நாமத்தில் சபையாகக் கூடுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ❖

# பிசாசு ஒத்துக்கொள்வதை ஒரு நாத்திகன் மறுக்கிறான்

# An Atheist Denies That Which the Devil Admits

*Bill Dillon*

"***பி**சாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன*" என்று வேதாகமம் சொல்கிறது. (யாக். 2:19) ஆனால், ஒரு நாத்திகன் அந்த அளவுக்குக் கூடப் போவதில்லை. அவன் கால அளவை நம்புவதில்லை! நாத்திகர்களுடைய அவநம்பிக்கைக்கான அடிப்படைகள் என்ன? சிலர் இவ்விதமாகச் சொல்கிறார்கள்:

1. " **நான் தேவனை நம்புவதில்லை. ஏனென்றால், என்னால் அவரைப் பார்க்க முடிவதில்லை** ". ஆனால், நம்மால் பார்க்க முடியாத மற்ற பல காரியங்களை நாம் நம்புகிறோம்; அன்பு, வெறுப்பு, மின்சாரம் போன்றவைகளை நாம் நம்புகிறோமே.


2. " ***தேவன் இருக்கிறார் என்பதை விஞ்ஞானிகளால் நிரூபிக்க முடியாது*** ". அநேகமாக இந்த உண்மையை நிரூபிப்பதற்கு விஞ்ஞானிகளிடத்தில் மிகப்பெரிய ஆய்வுக் கூடங்களோ, தேவையான சோதனைக் குழாய்களோ இல்லாமல் இருக்கலாம்! நம் எண்ண அளவுக்குள் தேவனுக்கு நாம் ஒரு எல்லை வகுக்க வேண்டாம். கர்த்தர் சொன்னார். " *....உன்னைப் போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்* " என்று (சங். 50:21).

3. **"தேவனைப் பற்றி எல்லாவற்றையும் என்னால் புரிந்து கொள்ள முடியாது"**. தன்னால் புரிந்து கொள்ளக் கூடியதை மட்டும் நம்புகிற ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய மூளையோ அல்லது மிகச் சிறிய கொள்கையோ தான் இருக்க வேண்டும். தேவன் வேதாகமத்தில் அவரைப் பற்றியும், நம் பொறுப்புகளைப் பற்றியும் குறிப்பிட்ட தகவல்களைக் கொடுத்திருக்கிறார் (அப். 27:22-31; 22:16; ரோமர் 12).

உலகத்திற்கு விடப்படும் வேண்டுகோளே தேவனுடைய சாட்சியத்தைக் காண நமக்கு உதவுகிறது. ஒரு கலைஞன் இல்லாமல் சித்திர வேலைகள் இருக்க முடியுமா? வடிவமைப்பாளர் இல்லாமல் வடிவம் கிடைக்குமா? காரணம் இல்லாமல் விளைவு ஏற்படுமா? தேவனுடைய ஞானமும், வல்லமையும் இயற்கையில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. எனவே, " *தேவன் இல்லையென்று மதிகெட்டவன் மட்டுமே தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ள முடியும்* " (சங். 14:1). ஒரு வீட்டிற்கு எப்படி அதைக் கட்டினவர் இருக்கிறாரோ, அதுபோல்தான், இப்பிரபஞ்சத்திற்கு அதை உண்டாக்கின வரும் உண்டு (எபி. 3:4).

தேவன் இருக்கிறார் என்பதற்கான நிச்சயம் அவரைத் தொடர்ச்சியாக மறுப்பதினால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை. நம் தேவன், உயிரோடிருக்கிறார்! ❖

# ஆதியாகமம் 1ல் வரும் நாட்கள் இருபத்தி நான்கு மணி நேரக் கால அளவைக் கொண்டதா?



## *Were The Days in Genesis I-24 Hour Periods?*

**Gilenn Colley**

ஆதியாகமத்தில் இடம் பெற்றுள்ள சிருஷ்டிப்பின் அழகான விவரிப்பைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்ட பரிணாமக் கொள்கைகாரர்கள் அவதூறு பேசி ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள நாட்கள் சொல் அர்த்த ரீதியில் இல்லாமல், அதாவது 24 மணி நேர கால அளவைக் கொண்டுள்ள தல்ல என்று வாதிடுகிறார்கள். ஆதியாக மத்தில் சொல்லப்படும் நாட்கள் நீண்ட தும், கூடுதலான மணி நேரத்தைக் கொண்ட நாட்களென்றும் சொல்கிறார் கள். சமீபத்தில் யாரோ ஒருவர் இப்படி யாகச் சொன்னார். "கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்று" (II பேதுரு 3:8) இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்த நபர் சொல்லும் போது, ஆதியாகமத்தில் உள்ள நாட்கள் ஒவ்வொன்றும் குறைந்த பட்சம் ஆயிரம் ஆண்டுகளை உள்ளடக் கியது என்று. இந்த கருத்துக்களெல் லாம் வேதாகம உண்மைகளுக்குப் புறம்பானதாக இருக்கிறது.

ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத் தில் இடம் பெற்றுள்ள நாட்கள் இருபத்தி நான்கு மணி நேரகால அளவை உடைய நாட்கள் தான் என்பதை நான்

நம்புவதற்கான மூன்று காரணங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

**I ஏனென்றால்; மற்ற வசனப் பகுதிகள் 24 மணி நேர கால அளவை உள்ளடக்கிய ஒரு நாளாகத் தான் சிருஷ்டிப்பின் நாட்களை ஒப்பிடுகின்றன.**

*“ யாத் 20:8,11 ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் ”.*

*யாத். 31:16,17 “ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறை தோறும் ஓய்வு நாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள், அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறு நாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும், பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்” என்றார்.*

தேவன் ஆயிரம் வருட கால அளவைக் கொண்ட “ நாளோடு ” இருபத்தி நான்கு மணி நேர நாளை ஒப்பிட்டிருந்தால், இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை ஏன் தேவன் குறிப்பிட வில்லை?.

**II ஏனென்றால், வேதாகமம் சிருஷ்டிப்பின் நாட்களை 24 மணி நேரக் கால அளவை உடைய நாட்களாகத் தான் விவரிக்கிறது.** “ *சாயங்காலமும், விடியற்காலமுமாகி முதலாம் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் ஆயிற்று* ” என்று (ஆதி. 1:5,8,13).

இங்கே எண்கள் பயன்படுத்தப் பட்டிருப்பது இருபத்தி நான்கு மணி நேரக்கால அளவைத் தான் உண்மை என நிரூபிக்கிறது.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட மோசே தான், இதைத் திரும்ப திரும்ப எழுதியது. (அதாவது, படைப்பின் ஆறு நாட்களும் “*சாயங்காலமும், விடியற்காலமுமாகிய முதல் நாள், இரண்டாம் நாள்....*” என்று).

தேவன் ஒரு நாளுக்கான கால அளவு எவ்வளவு என்பது பற்றிய கேள்வி எழும் என்று எதிர்பார்த்து, இப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

**III தேவனுடைய சிருஷ்டிப்பின் வல்லமை ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் நீடித்திருக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளும் ஒருவர், அதே அற்புத வல்லமை சிருஷ்டிப்பை ஆறு நாட்களில் முடித்திருக்கிறது என்பதை ஏற்க மறுப்பது நியாயமற்றது.**

இப்பிரபஞ்சத்தை எந்த ஒரு கால அளவிலும் உருவாக்கும் வல்லமையுடையவராக தேவன் இருந்தால், அவர் 24 மணி நேர கால அளவில் எல்லாவற்றையும் படைத்தார் என்று அவருடைய வார்த்தை சொல்வதை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

நாம் வேதாகமத்தை நம்புகிற மக்களாக இருப்போம். ❖

# கிறிஸ்தவம் அதன் வேகமான வளர்ச்சியால் உண்மையென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

## Christianity Is Proven True by the Nature of Its Rapid Growth

*Roger E. Dickson*

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், லூக்கா கிறிஸ்தவ மார்க்கம் குறித்து எழுதும்போது, முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தின் அசாதாரண வளர்ச்சி பற்றிப் பதிவு செய்திருக்கிறார். அதில் அவருடைய வாதம் என்னவென்றால், மனிதனால் உண்டாக்கப்பட்ட மதங்கள் இப்படிப்பட்ட அபரிதமான வளர்ச்சி பெறுவதில்லை என்பது தான். ரோமர்களுக்குப் பரிச்சயமான, மனிதனால் உண்டாக்கப்பட்ட மதங்கள் மெதுவாகத்தான் வளர்ந்தது. அதற்கு மாறாக, கிறிஸ்தவம் எருசலேமிலிருந்து எரிமலை வேகத்தில் வெடித்துச் சிதறியது. ஒரு முப்பது வருட காலத்திலேயே ரோம சாம்ராஜ்யம் முழுவதும் பரவியது. இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை இடைபட்டாலொழிய இத்தகைய அசாதாரண வளர்ச்சியை நம்மால் எப்படி விளக்க முடியும் என்று லூக்கா வாதாடுகிறார். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமை அந்த வளர்ச்சியில் ஈடுபடுமானால், அம்மார்க்கத்தை விசுவாசித்தவர்களை மனுஷருடைய வஞ்சனையால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள் என்று குற்றஞ் சொல்ல முடியாது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் லூக்கா கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆரம்பத்திலேயே சபையில் ஏற்பட்ட அசாதாரண வளர்ச்சியைப் பதிவு செய்திருக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் *பேதுருவின் வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் என்று (அப். 2:14). இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2:47). கிறிஸ்தவம் விரிவடைந்தது. "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" (4:4). திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (5:14). அவர்கள் தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் (5:42). வேத வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்* (6:7).

அந்நாட்களில் கிறிஸ்தவர்கள் எங்கும் சிதறிப்போனார்கள் (8:4). *சமாரியாவில் பிலிப்புவால் "அவர்கள் பெருகினார்கள்" (9:31)* சொல்லப்பட்ட வார்த்தைகளை

*அநேகர் ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்* (அப். 8:6). *யோப்பாப் பட்டணத்தில் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்* (9:42). *ஏரோது மரித்த பிறகு, "தேவனுடைய வார்த்தை வளர்ந்து பெருகிற்று"* (12:24). *பிசிதியா அந்தியோகியாவைச் சுற்றிலும், "கர்த்தருடைய வசனம் பிரசித்தமாயிற்று"* (அப். 13:48). *பவுல் மற்றும் பர்னபாவின் முதல் நற்செய்திப் பயணத்திற்குப் பிறகு, "பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் சஞ்சரித்து, வேறே அநேகரோடுங் கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள்"* (அப். 15:35).

தெசலோனிக்கேயாவில், "...*பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும், சீலாவையும் சேர்த்து கொண்டார்கள்*" (அப். 17:4) கொரிந்துவில், "*அநேகர் வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்*" (அப். 18:8). எபேசுவிலிருந்து, "....*கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது*" (அப். 19:20).

லூக்காவின் வாதம் தெளிவாகவும், கேள்விக்கிடமற்றதாகவும் உள்ளது. தேவ மறுப்பாளர்கள் கிறிஸ்தவத்தின் இந்த அசுர வளர்ச்சியை, ஆமை வேகத்தில் நகரும் ஏனைய மதங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து என்ன பதிலைக் கொடுப்பார்கள்? மனிதர்களால் உண்டாக்கப்பட்ட மதங்களின் வளர்ச்சியோடு கிறிஸ்தவத்தின் வளர்ச்சியை ஒப்பிட்டு நாம் விளக்கம் கொடுக்க முடியாது. ஆகையால், தெய்வீக இடைப்படுதல் இல்லாமல் கிறிஸ்தவம் இந்தளவுக்கான வளர்ச்சியைப் பெற்றிருக்க முடியாது என்பதே லூக்கா போன்ற ஆசிரியர்களின் வாதமாக உள்ளது. ❖

## அன்பு என்றால் என்ன?

அன்பு என்பது ஒரு மனப்பான்மை
அன்பு என்பது துக்கத்திலிருக்கும் ஆத்துமாவுக்கும்,
நம்பிக்கையற்ற நிலையிலிருக்கும்
இருதயத்திற்குமான ஜெபமாயிருக்கிறது.

அன்பானது பிறர் லாபத்திற்கான நல்வாழ்த்துக்களாயிருக்கிறது
அன்பானது சகோதரனுடைய தவறில் நீடிய பொறுமையாயிருக்கிறது.

அன்பானது வற்றிப்போன பாத்திரத்திற்கு தண்ணீர் கொடுக்கிறது,
அன்பு கீழான இடத்திற்கும் போய்ச் சேருகிறது
அன்பு மேலான இடத்திற்கும் போய்ச் சேருகிறது
பிறருடைய செலவில் தன்னுடையதைத் தேடாது

அன்பு ஒரு சகோதரனிடத்தில் போய்ச் சேரும் போது
அது தேவனிடத்தில் போய்ச் சேருகிறது.

# பூரண ஒழுக்கம் இயேசு கிறிஸ்துவின் மாதிரியில் காணப்படுகிறது

# Perfect Morality Found in the Example of Jesus Christ

*Coleman K. Allmond*

**இ**த்தகைய ஒரு பாடத்தை சுமந்து கொண்டு நம் தலையை மண்ணில் மறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இன்று நம் சமுதாயத்தில் காணப்படும் ஒவ்வொருப் பிரச்சனையின் மையத்திலும் மனித் இனத்தின் இருதயத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனை இருக்கிறது. வேதாகமம் சொல்லும் இருதயம் மனம், அறிவு, உணர்வுகள், மனித இனத்தின் விருப்பம் போன்றவைகளோடு சம்மந்தப்பட்டிருக்கிறது.

இருதயம் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதைக் கேளுங்கள். "*மனிதனுடைய இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்*" (நீதி. 23:7). "*எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்*" (நீதி. 4:23) "*இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்*" (மத். 12:34) "*எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? (எரே. 17:9) இந்த வசனங்களும் இன்னும் அநேக வசனங்களும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இவ்விதமாகச் சொல்ல வைத்திருக்கிறது*". "*எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும் இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்*" (மத். 15: 19,20).

ஆகவே, நம் பேச்சும், நடக்கைகளுந்தான் நாம் ஒழுக்க ரீதியாக சரியாக இருக்கிறோமா அல்லது தவறு செய்கிறோமா என்பதை நிர்ணயிக்கிறது. தவறு எப்போதுமே தவறாயிருக்கிறது. தவறான ஒன்றைச் செய்வதற்கு சரியான வழி என்று எதுவுமே இல்லை.

ஒழுக்க நெறியானது நடத்தை அல்லது வாழ்க்கை முறையில் சரியான அல்லது தவறான வழிமுறைகளை சம்மந்தப்படுத்துகிறது. ஒழுக்க நெறி என்பது ஒழுக்க உபதேசங்களை உள்ளடக்கியது என்று பொருள்படும். மனித குடும்பத்திற்கு ஒழக்க நெறிகள் சம்பந்தமாக இயேசு கொடுத்தவைகளை சற்று சிந்திப்போம். இயேசு கிறிஸ்து பாவமே செய்யாதபடியால்; அவர் தான் மிகச் சிறந்த மாதிரியாக இருக்கிறார் (1 பேதுரு 2:21-25).

கிறிஸ்துவின் ஒழுக்க நெறியின் பண்புகள் வேத வாக்கியங்களில் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

எல்லாத் தேவைகளையும் சந்திக்கிற, எல்லா தேசத்துக்கும் ஏற்ற எல்லாக் காலத்துக்கும் பொருந்துகிற ஒரு நடத்தை விதியை மனிதன் கொடுக்க முடியாதவனாயிருக்கிறான் (எரே. 10: 23). இயேசு கிறிஸ்துவால் வெளிப்படுத் தப்பட்டிருக்கிற ஒழுக்க விதிகளுக்கு அருகில் கூட மனித வரலாற்றில் எதுவும் வராது! ஜான் லாக் (John Locke) என்பவர் சரியாகச் சொன்னார்: “உண்மையான ஒழுக்க நெறி பற்றிய முழுமையான அறிவை ஒரு மனித னுக்குக் கொடுக்க வேண்டு மென்றால் அவனைப் புதிய ஏற்பாடு அல்லாமல் வேறொரு புத்தகத்திற்கு நான் அனுப்ப மாட்டேன் என்று ”.

கிறிஸ்துவில் ஒழுக்க முறைமை எல்லோரையும் கிறிஸ்துவைப் போலவும், பரமபிதாவைப் போலவும் இருக்கும்படி அழைக்கிறது. மாபெரும் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்து வைப் பின்பற்றும்படி நமக்கு சவால் விடுகிறார் (1 கொரி. 11:1). அவருடைய ஒழுக்க நெறிகள் தேவ பக்தி, பரிசுத்தம், தூய்மை போன்றவற்றை எதிர்பார்க் கிறது (தீத்து. 2:12; 1 பேதுரு 1:15,16; 1 யோவ 3:3; மத். 5:8). தேவனுடைய சந்ததியா யிருந்து, அவருடைய சாயலிலும் அவரு டைய ரூபத்தின்படியேயும் உண்டாக் கப்பட்டிருக்கிற நாம் பொதுவான ஆரம்பத்தை உடையவர்களாக இருக்கிறோம், நாம் ஒரே விதமான பிரச்சனைகளை எதிர் கொள்கிறோம், நம்மெல்லோருக்கும் பொதுவான முடிவு தான் இருக்கும், அதில் நாம் அனைவரும் ஒரே அளவுகோலால் நியாயம் தீர்க்கப்படுவோம்; ஆகவே, அவருடைய ஒழுக்க நெறி உலக முழுவதிற்குமானது, எல்லாக் காலத் திற்குமானது.

கிறிஸ்துவின் ஒழுக்க விதி இரண்டு மாபெரும் அடிப்படைகளைக் கொண்டது. (1) *தேவனிடத்தில் அன்பு கூருதல் (2) உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்தில் அன்பு கூருதல்* (லூக்கா 10:27). இந்த ஒழுக்க நெறியானது என்னைப் பற்றி மட்டும் நான் நினைக்காமல், என் நடக்கை மற்றவர்களை எப்படிப் பாதிக்கிறது என்பது பற்றி நான் யோசிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இது நாம் செய்யும் எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்தக் காரணமாயிருக் கிறது. அத்தோடு, தவறுகள் எல்லாம் சரி செய்யப்படும் அந்த இறுதி நியாயத்தீர்ப்பு நாளை அறிவிக்கிறதாக இருக்கிறது. அந்நாளில் இப்பூமியில் எவைகளை விதைத்தோமோ அவைகளை நாம் அறுப்போம் (கலா. 6:7; 2 கொரி. 5:10) இறுதியாக, அங்கே நமக்கு பலன் அளிக்கப்படும் (யாக். 1:12).

இயேசு கிறிஸ்துவின் ஒழுக்க நெறிகள் சோதனை காலங்களையும் தாண்டி நின்றது. அதன் மகிமையை எல்லா தேசங்களிலுள்ள, எல்லா நிலை களிலுள்ள மனிதர்களும் மெச்சியிருக் கிறார்கள். மனித இனத்தையும், தேசங்களையும் சீர்திருத்தவும், உயர்த்தவும் கிறிஸ்துவின் ஒழுக்க நெறிக்கு நிகரானது எதுவுமே இல்லை. அது முதலில் கொடுக்கப்பட்ட போது எப்படி சம்மந்தமுள்ளதாக இருந்ததோ அப்படியே இன்றும் சம்மந்தமுடைய தாக இருக்கிறது. ஏனென்றால், அது பரலோகத்திலிருந்து வந்தது. மனிதர் களிடத்திலிருந்து வரவில்லை. அதன் பரலோக ஆதாரம், இந்த ஒழுக்க நெறிகளை உருவாக்கியவர் அளவற்ற ஞானத்தையும், நியாயம் மற்றும் செம்மையைத் தன்னகத்தே கொண்டி ருக்கிறவராகத்தான் இருக்க வேண்டும் என்பது முன் கூட்டியே யூகிக்கப்படு கிறது. ❖

# தேவச் சித்தமும், மனிதனின் எண்ணக் கோளாறும்

## *God's Will and Man's Whims*

*Coleman K. Allmond*

தேவனுடைய வார்த்தையும், மனிதனுடைய எண்ணங்களும் எப்போதும் ஒரே விதமாக ஒத்துப் போவதில்லை.

மனிதன் சொல்கிறான், "தேவனிடத்தில் அன்பு கூருவதுதான் முக்கியமானது, பிரமாணங்களைக் கைக் கொள்வதல்ல என்று. தேவன் 1 யோவான் 5:3ல்; இவ்விதமாகப் போதிக்கிறார், "*நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்* ". மறுபடியும் இயேசு, "*நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்* " என்று தெளிவுபடுத்தினார் (யோவான் 14:15).

மனிதன், "எல்லா சபைகளும் ஒன்றுதான்" என்று சொல்கிறான். எனவே, உங்கள் விருப்பப்படி எந்த சபையில் வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளுங்கள். ஆனால், தேவன் தம்முடைய குமாரன் மூலமாக ஒரு சபையைக் கட்டுவதாகத்தான் வாக்குத் தத்தம் செய்தார் (மத். 16:18). தேவனுடைய வார்த்தை இந்தச் சபையை கிறிஸ்துவின் சரீரம் என்று சொல்கிறது (எபே. 1:22,23) மேலும், " *ஒரே சரீரம் தான் உண்டு* " என்பதை உறுதியாகச் சொல்கிறது (எபே. 4:4).

மனிதன், "ஞானஸ்நானம் முக்கியமானதாக இருக்கலாம், ஆனால், இரட்சிப்பிற்கும் அதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்று சொல்கிறான். "*ஆனால், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்*" என்று வேத வசனம் தெளிவாக வெளிப்படுத்துகிறது (மாற்கு 16:16). "*ஞானஸ்நானம் நம்மையும் இரட்சிக்கிறது* " என்று 1 பேதுரு 3:21-ல் வாசிக்கிறோம்.

மனிதன் சொல்கிறான், "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்புள்ள தேவன் ஒருவரும் இழந்து போக அனுமதிக்கமாட்டார் " என்று. தேவன் மக்கள் மீதான தம்முடைய அன்பை உறுதிபடக் கூறுகிறார் (1 யோவான் 4:16; யோவான் 3:16), ஆனால், அதே நேரத்தில் தேவன் இவ்விதமாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். " *தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு*

*தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்* " என்று. (1 தெச. 1:7,8).

மனிதன், "நாம் தேவனை ஆராதிப்பது என்பது நம் தனிப்பட்ட விஷயம். நாம் இப்போது ஆராதிப்பது போல நமக்கு வேதாகம அதிகார மெல்லாம் தேவையில்லை" என்று சொல்கிறான். இருதயத்தில் ஒருவன் உண்மையாக இருக்கும் வரை எல்லா ஆராதனையுமே ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதுதான் என்று. ஆனால், தேவனுடைய வார்த்தை இவ்வித மாகப் போதிக்கிறது. " *உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப் பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக் கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிற வர்கள் ஆவியோடும், உண்மை யோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்* " (யோவான் 4:23,24) சத்தியம் என்றால் என்ன? இயேசு, பிதாவினிடத்தில் ஜெபிக்கும் போது இவ்விதமாகச் சொன்னார். " *உம்மு டைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்* " (யோவான் 17:17).

என்னுடைய கேள்வி இதுதான்: மனிதனுடைய எண்ணக் கோளாறு களுக்கு நாம் அடிபணிவோமா? அல்லது தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போமா? ❖

## தேவ சித்தம்

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். *(1 தீமோ. 2:4)*

# தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தல்

## *Killing The Prophets*

*Jack W. Carter*

எரேமியா தீர்க்கதரிசியைப் பற்றி நாம் வாசிக்கும் போது, உண்மையாகவே இது வேதாகம வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டம் என்பதை அறிகிறோம். அது யூதா ஜனங்களுக்கானதாக இருந்தது. அத்தோடு, அது பின்வரும் தேவனுடைய ஜனங்களுக்கும் முக்கிய செய்தியைக் கொடுக்கிறதாக உள்ளது.

எரேமியா ஒரு விருப்பமில்லாத தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் புலம்பல் தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் ஒரு கோபக்கார தீர்க்கதரிசியாக மாறி, மக்கள் தேவனுடைய செய்திக்கு எதிர்த்து நிற்கத் தீர்மானம் பண்ணி, தேவச் செய்தியாளரைக் கொலை செய்யுமளவுக்குச் சென்றதால், தேவன் மக்களைத் தண்டிக்கும்படி எரேமியா தேவனிடம் வலியுறுத்தினார்.

இந்த காரியம் சம்மந்தமாக நாம் பார்க்கும் போது, மனிதத் தன்மை இடைபடுவதை நாம் காண முடியும். பல நூற்றாண்டுகளாக தேவன் மனிதனோடு இடைபடும் போது தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்த தம்முடைய தீர்க்கதரிசிகளைப் பயன்படுத்தினார். அநேக வேளைகளில் தேவனிடத்திலிருந்து வந்த செய்தியை மக்கள் விரும்பவில்லை. அதினிமித்தம் அவர்கள் தேவனுடைய செய்தியைக் கொண்டு வந்தவர்களைக் கொல்ல நாடியிருக்கிறார்கள். ஏன் அப்படி? செய்தியைக் கொண்டு வருபவரைக் கொலை செய்வதன் மூலம் செய்தியை ஒன்றுமில்லாமல் செய்துவிட முடியுமா? அது செய்தியின் வேகத்தை மாற்றி விடுமா? தேவச் செய்தியாளரைக் கொலை செய்வதினால் ஏதாவது நன்மை ஏற்படும் என்று கற்பனைச் செய்து பார்க்க முடியுமா?

இக்கேள்விகளுக்காக என்னாலே கண்டுபிடிக்க முடிந்த பதிலுக்கு இரண்டு பகுதிகள் உண்டு.

முதலாவது, செய்தி யானது மக்கள் கேட்க விரும்பாத ஒன்றாக இருந்தால், அந்தச் செய்தி தேவனிடத்திலிருந்து வரவில்லை என்று தங்களுக்குத் தாமே திருப்திபட்டுக் கொள்வார்கள். எரேமியா மற்றும் அநேக தீர்க்கதரிசிகளின் நாட்களில் இருந்தது போல

மக்கள் தேவனுக்காகத் தாங்கள் பேசுவதாக சொல்லிக் கொண்ட தீர்க்கதரிசிகளை நாடினார்கள். இது ஒருபோதும் மாறவில்லை.

இரண்டாவது, இவை களை அவர்கள் செய்து கொண்டிருக் கும் போது கூட, அவர்களில் அநேக ருக்கு தாங்கள் இருதயங்களில் எது உண்மையான செய்தி என்பதை அறிந்திருந்தார்கள். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அந்த உண்மையான செய்தி மறுபடியும் சொல்லப்பட அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் அப்போது தேவனை எதிர்த்து நின்று விட்டு பின்பு விளைவுகளுக்குத் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள்.

தேவ செய்தியாளர்களைக் கொலை செய்வதென்பது எவ்விதத்திலும் புத்திசாலித்தனமான செயல் அல்ல. அது உண்மையான எந்த நோக்கத்தையும் நிறைவேற்றுவதாக இருக்காது. அதனால் யாருக்கும் எந்த நன்மையும் ஏற்படப் போவதுமில்லை. தேவச் செய்தியாளரை ஏற்படுத்துவதென்பது தேவன் தம்முடைய ஜனங்களோடு பேசுவதற்கு ஏற்படுத்தும் ஒரு தற்செயலான செயலாகும். எப்போதுமே தேவனுடைய செய்திதான் நம் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும்.


செய்தியைக் கொண்டு வருபவர்க்கு என்ன நடக்கிறது என்பது காரியமல்ல, செய்தி ஒரு போதும் மாறுவதில்லை. பல பல தேவ செய்தியாளர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். *ஆனால், செய்தி ஒரு போதும் மரிப்பதில்லை. அது கடைசி நாளில் நம்மை நியாயந் தீர்க்கும்.*

❖

## எச்சரிக்கையாயிருப்போம்

இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும் மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை; அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(எரே. 23:32)



# நீங்கள் வேதாகமத்தை நம்ப முடியும்

# YOU CAN TRUST THE BIBLE

*Salvador B. Cariaga*

நாம் இன்று வைத்திருக்கும் வேதாகமத்தை நம்ப முடியுமா என்று ஆச்சரியத்தோடு கேட்கும் மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள், " சிலர் நீண்ட காலத்திற்கு முன்பே அதைத் திரும்ப எழுதியிருக்கமாட்டார்கள் அல்லது மாற்றியிருக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? " என்று கேட்கிறார்கள். ஒரு வேளை நீங்களும் இதே மாதிரி சந்தேகப்படலாம். இந்தச் சிறிய கட்டுரையில், வேதாகமம் நம்பத்தகுந்தது தான் என்பதை மறு நிச்சயப்படுத்த விரும்புகிறோம்.

முதலாவது, வேதாகமம் தன்னை தேவனுடைய வார்த்தையாக சொல்லிக் கொள்கிறது. மத சம்மந்தமான ஜனங்கள் இதை உருவாக்கவில்லை. மாபெரும் அப்போஸ்தலனாகிய பவுல், "*வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது*" என்று அறிவிக்கிறார் (2 தீமோத். 3:16). இயேசு, "*பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்*" என்று தம்முடைய சீஷர்களிடம் உறுதிப்படுத்தினார் (மத். 10:20). பேதுரு "*தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்*" (2 பேதுரு 1:21) எனக் கூறுகிறார்.

இரண்டாவது, மூன்றாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட தோல் சுருள்கள் இன்று வரை ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. அவைகளில் சில எழுத்துப் பிழைகள் உண்டு. மேலும், சில வார்த்தைகள், சில வாக்கியங்கள் காணவில்லை என்பதும் உண்மைதான். ஆயினும், அவைகள் சிறிய அளவில் தான் இருக்கின்றன. அவைகள் வேதாகமத்தின் இரட்சிப்பின் செய்தியை எவ்விதத்திலும் மாற்றவில்லை. இன்று, இன்னும் 5000 கிரேக்க தோல்சுருள்கள் இருக்கின்றன.

இது ஒரு நம்ப முடியாத எண். இதை வைத்தே வேதாகமம் எவ்வளவு பழைமை யானது என்றும், எத்தகைய உபத்திரவங்களை அது கடந்து வந்திருக்கிறதென்றும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

வேதாகமத்தை நம்புவதற்கான மூன்றாவது காரணம், அதன் பக்கங்களில் இருக்கும் வாழ்க்கையை மாற்றும் செய்தி தான். அது நம்பிக்கையை, விசுவாசத்தை, சந்தோஷத்தை, இரட்சிப்பை அளிக்கிறது. அது வாழ்க்கையில் புயல் அடிக்கும் நேரத்தில் அடைக்கலமாகவும், களைப்படையும் போது பலத்தையும், இருளில் இருப்போர்க்கு வெளிச்சத்தையும் கொடுக்கிறது. வேதாகமம் பல நூற்றாண்டுகளாக, சந்ததி சந்ததிகளாக லட்சக்கணக்கான மக்களுக்கு சேவை செய்திருக்கிறது. வேதாகமம் துன்பங்களை, சோதனைகளை, உபத்திரவங்களை மேற்கொள்ள உதவி செய்திருக்கிறது. அது அநேகர் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ வழி வகுத்திருக்கிறது.

நீங்களும் கூட வேதாகமத்திலிருந்து வல்லமை, பெலன் மற்றும் ஞானத்தை எடுத்துக் கொள்ளலாம். எனவே வேதாகமத்தை வாசியுங்கள், படியுங்கள், அதைத் தியானியுங்கள்.

❖

## உங்கள் வேதாகமம்

நீங்கள் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது
தேவன் உங்கள் இருதயத்தில் பேசும்படி அதைத் திறவுங்கள்;
அவர் நாளைக்கான நம்பிக்கையை உங்களுக்குத் தருவார்
அந்த நம்பிக்கை உங்களை விட்டு ஒருபோதும் விலகிச் செல்லாது.

நீங்கள் சந்தோஷத்தில் மூழ்கியிருக்கும் போது
உங்கள் நாள் மகிழ்ச்சியான நாளாக இருக்கும் போது அதைத் திறவுங்கள்;
நீங்கள் விலகிச் செல்ல சோதிக்கப்பட்டால்
உங்கள் மகிழ்ச்சி துக்கமாக மாறிவிடும்.

உங்கள் வாலிபத்தில் அதைத் திறவுங்கள்
உங்கள் சோதனை வேளையில் அது உதவியாயிருக்கும்
தேவனுடைய அற்புதமான சத்தியத்தை அறிந்து கொள்வதற்கும்
சாத்தான் உங்கள் மனதை கொள்ளை கொள்ளாமலிருக்க அது உதவியாயிருக்கும்.


நீங்கள் தாங்கொண்ணா பாரங்களால் தவிக்கையில்
அதைத் திறக்கும் போது
நீங்கள் தனியாக இல்லை
உங்கள் பாரத்தைப் பகிர்ந்து கொள்ள தேவன் இருக்கிறார் என்பதை அறிவீர்கள்.

உங்கள் முதிர்வயதில்
நீங்கள் கர்த்தரோடு இருக்க ஏங்கும் போது
வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கத்திலும்
நித்திய பலனுக்கான நம்பிக்கை இருப்பதைக் காண்பீர்கள்.

# இது எல்லாக் காலத்திலும் இருந்தது

## IT WAS THERE ALL THE TIME !

*Frances Parr*



**உ**ண்டாக்கப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் அற்புதமான, வல்லமையுள்ள நம் தேவன் உண்டாக்கினார். முடிவில்லாத விண்வெளியைப் பற்றியும், பூமிக்குள் என்ன இருக்கிறது என்பது பற்றியும், எது காற்றை வீசச் செய்கிறது, ஒரு சிறிய கருவிலிருந்து மனித உடல் எப்படி வளர்ந்து ஒரு மனிதனாக, மனுஷியாக உருப்பெறுகிறது என்பதும் அவருக்குத் தெரியும். மேலும், ஆரம்பத்திலிருந்தே நாம் குழப்பமடைவோம் என்றும், எப்போதும் புரிந்து கொள்ளாதவர்களாக இருப்போம் என்பதும் அவருக்குத் தெரியும். நாம் அறிந்திருக்க வேண்டுமென்று அவர் விரும்பிய குறிப்பிட்ட காரியங்களை விளக்குவதற்கு புத்தகங்களை எழுதுவதற்கு சில விசேஷித்த மக்களை அவர் ஏவினார். அந்த எழுத்துக்களெல்லாம் ஒரே புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளது - அந்தப் புத்தகம் தான் வேதாகமம்.

வேதாகமம் தனித்துவம் வாய்ந்த புத்தகமாகும். அதை ஜாக்கிரதையாக வாசிப்பதன் மூலம் அநேக காரியங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும். வேதாகமத்தை வாசித்து, தேவன் நம்மை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதைக் காண்பது மிகவும் முக்கியம். தேவன் நம்மில் அதிகமாக அன்பு கூர்ந்தபடியால் தான் நாம் பரலோகம் செல்வதற்கான வழியை ஆயத்தப்படுத்துவதற்கு தம்முடைய குமாரனாகிய இயேசுவை நமக்காக அனுப்பினார்.

வேதாகமத்தைப் படித்த பிறகு கூட, தேவனைப் பற்றியும், அவருடைய சிருஷ்டிப்பு பற்றியும் நம்மால் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியாது. ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவும் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று (2 பேதுரு 1:3) நமக்குச் சொல்கிறது. அதன் பொருள் நாம் கிறிஸ்தவர்களாவதற்கும், பரலோகம் போவதற்கும் அறிந்து கொள்ள வேண்டியவைகள் எல்லாம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டு வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

வேதாகமம் வாசிப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். சில வேளைகளில் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள சம்பவங்களை நாம் திரும்ப

திரும்ப வாசித்திருப்போம் மற்றும் திரும்ப திரும்ப கேட்டிருப்போம். அதனால் அவைகளைப் பற்றி நமக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்து வருகிறோம். அதன் பிறகு, ஒரு நாள் அதே சம்பவத்தை நாம் மறுபடியும் வாசிக்கும் போது இதற்கு முன் கண்டிராத சிலவற்றை நாம் அதில் காண்போம்! ஏனென்றால், நாம் தேவனுடைய அறிவிலும், நம்முடைய புரிந்து கொள்ளுதலிலும் வளர்ந்திருக் கிறோம் என்பதைத் தான் அது காட்டு கிறது. *அந்த வார்த்தைகளெல்லாம் எப்போதுமே அங்கே இருந்து வருகிறது. ஆனால், நாம் தான் அவைகளைப் புரிந்து கொள்ளவில்லை!*

நீண்ட காலத்திற்கு முன்பு பூமி தட்டையாயிருந்தது என்று மக்கள் நினைத்ததாக வரலாறு கூறுகிறது. ஒருவர் ஜாக்கிரதையாக இல்லையென் றால், தொடர்ந்து விழுந்து கொண்டே இருப்பார் என்று அநேகர் நினைத்தார் கள் (சங். 98:3) *பூமியின் எல்லைக ளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப் பைக் கண்டது என்று வாசிக்கிறோம். மேலும், அவர் பூமியின் கடையாந் தரங்களிலிருந்து மேகங்களை எழும்பப் பண்ணுகிறார் என்று* (சங். 135:7) ல் வாசிக்கிறோம். ஒருவர் இதை ஒத்துக் கொள்வார். ஆயினும், ஏசாயா 40:22 இப்பூமியை வித்தியாசமான விதத்தில் விவரிக்கிறது. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் எடுத்த புகைப் படங்கள் வேதாகம விவரிப்பு மிகச் சரியானது என்பதை நிரூபிக்கிறது. ஏசாயா தேவனைப் பற்றிச் சொல்லும் போது *பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர் என்று சொல்கிறார்.*

ஆரம்ப காலத்தில் மாலுமிகள் குறிப்பிட்ட திசையை நோக்கி செல்லும் ராட்சத ஆறுகளைப் போலொத்த மின்சாரத்தை கண்டுபிடித்தார்கள். அவைகளின் வழியாக கப்பல் சென்றால் குறைந்த எரிபொருளுடன் அல்லது குறைந்த காற்றுடன் செல்ல முடியும். தாவீது ஏற்கனவே *கடல் வழியில்* நீந்து கின்ற மச்சத்தைப் பற்றிப் பேசியிருக் கிறார் (சங். 8:8).

சில ஆண்டுகளுக்கு முன்பு யாரோ ஒருவர் தென் அமெரிக்காவின் கிழக்கு முனை ஆப்பிரிக்காவின் தென்மேற்குப் பகுதியோடு நன்றாகப் பொருந்துவதைப் பார்த்திருக்கிறார். அதன் பிறகு, அநேக மைல்கள் தூரத்தி லுள்ள நிலப்பரப்பு ஒன்றோடொன்று ஒரு காலத்தில் இணைந்திருந்தது என்று கண்டறியப்பட்டது. ஆதியாகமம் 1:9 ல், சிருஷ்டிப்பின் போது வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்று தேவன் கட்டளையிட்டார்.

இஸ்ரவேலர்கள் தேவனுடைய விசேஷித்த ஜனங்களாயிருந்தார்கள். அவர்களுடைய தேவைகள் தேவனால் சந்திக்கப்பட்டது. சில வேளைகளில் அவர்கள் தேவன் தங்களை விட்டுப் போய்விட்டார் என்றும் தங்கள் தேவை களை அறியத்தக்கதாக தேவன் அவர்கள் அருகில் இல்லை என்றும் கவலைப்பட்டார்கள். ஏசாயா தன்னு டைய புத்தகத்தில் ஜனங்களிடம் *தேவனைக் காணும்படி* சொல்கிறார். ஏசாயா 40 ஆம் அதிகாரத்தில் தேவனைப் பற்றி ஏசாயா எவ்விதமாக விவரிக்கிறார் என்பதைக் கவனியுங்கள்.


பழைய ஏற்பாட்டில் நாம் தாவீது பற்றி வாசிக்கிறோம். அவர் தேவனை அதிகமாக நேசித்து அவரை நோக்கி துதிபாடல்களை ஏறெடுத்தார். அவர்

தேவனுடைய அற்புதம் மற்றும் வல்லமை பற்றி அநேகப் பாடல்களை எழுதினார். நாம் சங்கீதப் புத்தகத்தில் தாவீதின் பாடல்களை வாசிக்க முடியும். அதில் உங்களுக்குப் பிடித்தமான சங்கீதங்களைத் தேர்ந்தெடுங்கள் அல்லது சங்கீதம் 100 மற்றும் சங்கீதம் 104 யை வாசியுங்கள். தேவனுடைய மகத்துவத்தை வாசித்த பிறகு, குடும்பத் தோடு நடைபயணத்தை மேற்கொள் ளுங்கள். இவ்வுலகில் மக்கள் பார்த்து ரசிக்கும்படியாக வைத்திருக்கும் அழகான காட்சிகளைக் கவனித்துக் கொண்டே செல்லுங்கள். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் விசேஷ மானது எதுவோ அதைப் பட்டிய லிடுங்கள்.

நீங்கள் வீட்டுக்கு மறுபடியும் வரும் போது, வீட்டில் உள்ளவர்களிடம் நீங்கள் கண்டவைகளை பகிர்ந்து கொண்டு பாடல் பாடி ஜெபித்து முடித்துக் கொள்ளுங்கள். தேவனுடைய என்றும் மாறாத அற்புதங்களை எப்போதும் கவனிக்க முயற்சி செய்யுங்கள். தேவன் நம்முடைய தேவைகளை மட்டும் சந்திப்பதில்லை. நாம் மகிழும்படியாக அழகான அநேக காரியங்களையும் அவர் நம் வாழ்க்கையில் சேர்த்து வைத்திருக்கிறார்.

தேவனுடைய புத்தகமாகிய வேதாகமத்தை வாசிப்பதற்கு ஒரு போதும் அலுப்புத்தட்டாது. வேதத்தில் இடம் பெற்றுள்ள சம்பவங்களெல்லாம் தேவ ஆவியினால் எழுதப்பட்ட எழுத்தா ளர்கள் முதலில் எழுதும்போது எப்படி பசுமையாக இருந்ததோ அப்படியே இன்றும் பசுமையாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவன் வளரும் போது கண்டு பிடிக்கப்பட வேண்டிய, ஆராயப்பட வேண்டிய காரியங்கள் முடிவில்லாத வைகளாக இருக்கின்றன.

உண்மையாகவே, நம் தேவன் எல்லாவற்றையும் செய்ய வல்லவராக, எல்லாவற்றையும் காண்கிறவராக, எல்லாம் அறிந்தவராக, அற்புதமான வராக இருக்கிறார்! வேதாகமம் நமக்கு அப்படித்தான் சொல்லுகிறது. ❖




## கர்த்தருடைய வேதம்

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. (சங். 19:7)

## வாழ்வதற்கான உபதேசம்

# ஒழுக்க ரீதியிலான பிரச்சனைகள்

# MORAL ISSUES

*David Pharr*

ஒழுக்க ரீதியிலான பிரச்சனைகளுக்கு தீர்வு உலகத்தின் மனப்பான்மையை அடிப்படையாக வைத்து எடுக்கப்படாமல், தேவனுடைய வார்த்தையின் உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட வேண்டும். இந்த உலகம் ஏற்றுக் கொள்ள முற்படுகிற காரியங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகள் வேதாகம ஒழுக்க நெறிக்கும், வேதாகம மார்க்கத்திற்கும் எதிரானவைகள்.

**கருக்கலைப்பு** தவறானது ஏனென்றால், அது ஓர் உயிரை எடுக்கும் செயலாகும். கருக்கலைப்புக்கு ஆதரவாகப் பேசும் மக்கள் கர்ப்பிணியாயிருக்கும் தாய்க்கு கருவைக் கலைப்பதற்கு உரிமை இருக்கிறது. ஏனென்றால், அது அவளுடைய சரீரமாயிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இது உண்மை அல்ல. அவளுக்குள் இருக்கும் குழந்தை வேறொரு உயிராயிருக்கிறது. அதை அழிப்பதற்கு அவளுக்கு உரிமை இல்லை. சட்டப்பூர்வமாக கருக்கலைப்பு அனுமதிக்கப்படலாம், ஆனாலும், தேவன், "*கொலை செய்யாதிருப்பாயாக*" என்று சொல்கிறார்.

**போதை மருந்துகள்** மன மகிழ்ச்சிக்காக பயன்படுத்தப்படுவது. போதை தரும் பானங்கள் எந்த விதிகளால் கண்டிக்கப்படுகிறதோ அதே விதிகளால் இதுவும் கண்டிக்கப்படுகிறது கஞ்சா, அபின் போன்ற போதை பொருள்கள் அநேக நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கிறது. அவற்றை பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். அவைகளைப் பயன்படுத்த சட்டப்படி அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அது தவறுதான். ஏனென்றால், மதுபானம் அருந்துவது தவறாகும்.

**சூதாட்டம்** சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம், ஆனால், அது அநேக வேதாகமச் சட்டங்களால் கண்டிக்கப்படுகிறது. இந்த சூதாட்டத்திற்கு பின்னால் இருப்பது பொருளாசை ஆவியாகும் (லூக். 12:15). ஒருவர் மற்றவருடைய செலவில் தான் லாபத்தை ஈட்ட முடியும். இந்த சூதாட்டத்தில் தோற்கிறவர்கள் தங்கள் குடும்பங்களை பாழாக்குகிறார்கள். கிறிஸ்தவர்களாக நாம் தங்கச் சட்டத்தின்படி வாழ்ந்து, மற்றவர்களுக்குத் தீங்கிழைக்காமல் அவர்களுடைய நலனை நாடுகிறோம் (மத். 7:12).

ஆபாச புத்தகங்கள் பத்திரிக்கைகளில், திரைப்படங்களில் வெளிவரும் ஆபாசங்கள் வேத வசனங்களில் தடை

செய்யப்பட்டிருக்கின்றன (மத். 5:28; 1 பேதுரு 2:11; கொலோ. 3:5) காம உணர்வுகளைத் தூண்டும் வார்த்தைகளோ அல்லது படங்களோ தவறானவைகள் தான். பாலியல் சம்மந்தமான காரியங்களை வெளிப்படுத்தும் காட்சிகளும், மொழி நடையும் தொலைக் காட்சிகளில் எல்லோரும் பார்க்கும் நேரத்தில் காட்டப்படுவது அதிகரித்திருப்பது கவலையளிப்பதாக இருக்கிறது.

தகாத வார்த்தைகளைப் பேசாதபடி கிறிஸ்தவர்கள் தங்கள் பேச்சுகளில் உலகத் தன்மையை அகற்ற வேண்டும், தவிர்க்க வேண்டும். தேவனுடைய நாமத்தை, கிறிஸ்துவின் நாமத்தை வீணாய் வழங்குவது பாவமாகும் (யாத். 20:7). (மத். 5:33-37) வசனங்களில் இயேசு பொய்யாணை இடுவதைக் குறித்து கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். தேவனுடைய நாமத்தைத் தூஷிக்காத வார்த்தைகளும் இருக்கத் தான் செய்கின்றன. ஆனாலும், அவைகள் ஆபாசமானவைகளாகவும், புண்படுத்தக் கூடியவைகளாகவும், மரியாதையுள்ள மக்களுக்குக் காணப்படுகிறது (எபே. 4:29).

நடனம் ஒரு பிரபலமான சமூக பழக்கமாயிருக்கிறது அதற்கு பல்வேறு முறைகள் இருக்கின்றன. ஆனால், பெரும்பாலான நடனங்கள் காமத்தைத் தூண்டும் விதத்திலேயே அமைக்கப் படுகிறது. திருமணமாகாத ஒரு ஆணும், பெண்ணும் இது போன்ற நடனத்தில் ஈடுபடும் போது அசுத்தமான எண்ணங்கள் வராமல் இருக்காது. அதேப்போல இச்சைகளைத் தூண்டும் நடன அசைவுகள் இன்று மலிந்து கிடக்கின்றன.

ஓரினச் சேர்க்கை வெளிப்படையாகவே கண்டிக்கப்பட்டிருக்கிறது (1 கொரி. 6:9; ரோமர் 1:24,27; லேவி 18:22). நவீன உலகம் வழக்கத்திற்கு மாறான இந்த துன்மார்க்கமான உடலுறவை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக முயற்சி செய்து வருவது துக்கப்பட வேண்டிய ஒன்று.

விடுதிகளும், சமூகக் கூடங்களும் அநேகமுண்டு. அவைகள் செயல்பாட்டில் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. இத்தகைய சில அமைப்புகள் கள்ளங்கபடமில்லாமல் இருக்கலாம். ஆயினும், அநேக அமைப்புகள் குடி, சூதாட்டம் போன்ற பாவமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இயற்கையாகவே, பக்தியான அமைப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவர்களுடைய உபதேசங்களில் சில சடங்காச்சாரங்களும் இடம் பெற்றுள்ளன. இதற்கு வேதாகம ஆதாரம் இருப்பதாக இவர்கள் சொல்லிக்கொண்டாலும், அவைகளுக்கு வேதாகம அதிகாரமில்லை. சிலர் அவைகளை சபைக்குப் போதுமான மாற்றாகக் கருதுகிறார்கள். இரகசிய ஆணைகளை, மதச் சடங்குகளை செய்யச் சொல்லி ஆவிக்குரிய அல்லது நித்திய நன்மைகளை வாக்களிக்கும் அமைப்புகளிலிருந்து ஒருவர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ❖

# 1 பேதுரு 3:20,21 பற்றிய துரித வியாக்கியானம்

தேவன் எல்லோரும்
மனந்திரும்ப வேண்டுமென்று
விரும்பி, நம்மேல் நீடிய
பொறுமையுள்ளவராயிருக்கிறார்
(2 பேதுரு 3:9)

காக்கப்பட்டவர்கள்
பேழைக்குள் இருந்தார்கள். இன்று
இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லோரும்
சபைக்குள் இருக்கிறார்கள்.
(அப். 2:47)

நோவாவின் நாட்களில் பேழை
ஆயத்தமாக்கப்பட்டுக்
கொண்டிருந்தபோது, தேவன்
நீடிய பொறுமையோடு
காத்திருந்தபோது, அந்தப்
பேழையிலே சிலராகிய
எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து
ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.
அதற்கு ஒப்பனையான
ஞானஸ்நானமானது நம்மையும்
இரட்சிக்கிறது

தேவனுடைய
வார்த்தைக்குக்
கீழ்ப்படிகிற சிலரே
இரட்சிக்கப்படுவார்கள்
(மத். 7:14)

தேவன்
அவிசுவாசிகளை
அழிப்பதற்கு எதைப்
பயன்படுத்தினாரோ
அதைக் கொண்டே
தம்முடைய
வார்த்தையை
விசுவாசிப்பவர்களை
இரட்சிப்பதற்கும்
பயன்படுத்துகிறார்.

இப்போதும்,
தேவன்
முன்புபோலவே,
கீழ்ப்படியாதவர்களை
இரட்சித்து, கலகக்காரர்களை
நியாயந்தீர்க்கிறார்

தேவனை
விசுவாசித்தவர்கள்
பாதுகாப்புக்காக
ஒரே பேழையில்
பிரவேசித்தது போலவே,
ஞானஸ்நானம் பெற்ற
விசுவாசிகள்
கிறிஸ்துவின்
சபையில் சேர்க்கப்
படுகிறார்கள்
(அப். 2:38,47;
20:28)

தண்ணீரில்
மூழ்க, கிறிஸ்துவின்
வார்த்தையை
விசுவாசித்தல்
(மாற்கு 16:16;
ரோம 6:4)

-Feater Northem

# ஏதோ ஒரு பெயர் இருப்பது போதாது
## Just Any Name Wont Do
*Brian W. Jones*

வேதாகமத்தில் காணப்படுகின்ற பெயரை உடைய சபையைச் சார்ந்தவனாயிருக்கவே நான் விரும்புகிறேன். கிறிஸ்துவின் உபதேசங்களைப் பின்பற்றுகிற சபையைச் சார்ந்தவனாகவும் இருக்க விரும்புகிறேன். ஏதோ ஒரு பெயர் என்பது போதாது!.

அநேக மக்கள் சபையின் பெயர் ஒரு பொருட்டல்ல என்று சொல்லுகிறார்கள். ஆயினும், ஒரு சபை வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற சபையாக இருக்க வேண்டுமென்றால், அது சரியான பெயரைத் தரித்திருக்க வேண்டும், தேவனுடைய முழு ஆலோசனையைப் போதிக்க வேண்டும்.

சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது (வெளி. 21:2). மணவாட்டி மணவாளனுடைய பெயரைத்தான் தரித்துக் கொள்ள வேண்டும். நாம் ஞானஸ்நானத்தின் போது தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாகிறோம் (1 தீமோ. 3:15). அவருடைய குடும்பம் அவருடைய பெயரைத் தரித்துக் கொள்ளக் கூடாதா? சபையை வாங்கினவர் கிறிஸ்து (அப். 20:28). சபையாகிய சரீரத்தை வாங்கினவருக்கு அதற்கு பெயரிடும் உரிமை இல்லையா?

வேதாகமம் அநேக அழகிய வார்த்தைகளால் சபையை விவரிக்கிறது. "*தேவனுடைய சபை*" (1 கொரி. 1:2): "*முதற்பேறானவருடைய சபை*" (எபி. 12:23): *கிறிஸ்துவின் சபை* (ரோமர் 16:16): *கிறிஸ்துவின் சரீரம்* (கொலோ. 1:24): *கிறிஸ்துவின் மணவாட்டி* (வெளி. 21:2): *தேவனுடைய வீடு* (1 தீமோ. 3:15). இந்தப் பெயர்களில் தேவனுடைய நாமமும், கிறிஸ்துவின் நாமமும் மகிமைப்படுத்தப்படுகிறது. இவைகள் தேவன் தம்முடைய சபைக்காகத் தெரிந்தெடுத்த சில பெயர்கள்.


எனவே, அடுத்த முறை யாராவது, உங்களிடம் - "பெயர் என்ன வித்தியாசத்தை" ஏற்படுத்துகிறது? என்று கேட்டால் உங்கள் பெயரைக் கொண்டு கையெழுத்திடாமல் காசோலை ஒன்றைத் தருவதாகச் சொல்லுங்கள். அங்கீகரிக்கப்பட்ட பெயரில்லாமல் அந்த காசோலை செல்லாது. அதுபோலவே சரியான பெயரில்லாத சபையும் செல்லாது என்பது உண்மையல்லவா? முறையான கையெழுத்திருந்தும் போதுமான வங்கி கையிருப்பு இல்லையென்றால் அந்த காசோலை மதிப்பற்றதாகிவிடும். அதே போலவே, ஒரு சபை சரியான பெயரைத் தரித்திருந்தும், வேதத்திற்கு புறம்பான போதனைகளைப் போதித்தால் அதுவும் மதிப்பதற்றதாகவே காணப்படும் என்பது உண்மை தானே?

இந்தக் காரியங்களைக் குறித்து தயவு செய்து சிந்தியுங்கள். ❖

# நான் என் சபையைக் கட்டுவேன்

## I Will Build My Chruch

*Ray Hawk*




"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"
(மத்தேயு 16:16)

இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதாக வாக்குதத்தம் பண்ணினாரா? மத்தேயு 16:18ன் படி அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். அந்த சபை (அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்) இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகும், அவர் பரமேறிய பிறகும் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கப்பட்டதா? ஆம் (அப். 2:1,47). அழைக்கப்பட்டவர்களின் கூட்டத்தைப் பற்றிய வேதாகம விவரத்தைக் கவனியுங்கள்.

1. அது கிறிஸ்துவின் சரீரமாயிருந்தது (1 கொரி. 12:27)
2. கிறிஸ்து அதன் தலைவர் (கொலோ. 1:18)
3. கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு சரீரம் தான் இருந்தது (எபே. 1:22,23)
4. கிறிஸ்துவை விசுவாசித்து தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி அவருடைய நாமத்தை அறிக்கை ... முழுக்கு ஞானஸ்நானம் பெற்றவர்கள் அதில் பிரவேசித்தார்கள் (கலா. 3:27).
5. *சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளையாக மாறுவதற்கு ஜனங்கள் என்ன செய்யும்படியாகக் கட்டளையிடப்பட்டார்களோ அதைச் செய்தபோது, கர்த்தர் தம்முடைய குமாரனுடைய சரீரத்தில் அவர்களைச் சேர்த்தார்* (அப். 2:47).
6. பவுலும் மற்றவர்களும் வெளியே சென்று பிரசங்கித்த போது, அதற்கு ஜனங்கள் தங்கள் கீழ்ப்படிதலினால், பதிலளித்தபோது அவர்கள் அந்த சபையில் தான் இருந்தார்கள் (1 கொரி. 1:10).
7. மனிதர்கள் அந்த சபையை பிரிக்க முயற்சித்த போது, பவுல் அதைக் கண்டித்தார். அதற்கு எதிராக கிறிஸ்து ஜெபித்தார் (யோவான் 17,20,21; 1 கொரி. 1:10,13).
8. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் அதன் அங்கத்தினர்களாயிருந்தார்கள் (எபே. 2:20).

9. பிலிப்பும், அவர் யாருக்கெல்லாம் பிரசங்கம்பண்ணி, யாருக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுத்தாரோ அவர்கள் அதன் அங்கத்தினர் களாயிருந்தார்கள் (அப். 8:12).

10. கொரிந்து பட்டணத்து பரிசுத்த வான்கள் அதன் அங்கத்தினர் களாயிருந்தார்கள் (1 கொரி. 1:2).

11. ரோமர்கள், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர் போன்றோர் அதில் அங்கம் வகித்தார்கள் (ரோமர் 16:16; கலா. 1:2; எபே. 1:1; பிலிப். 1:1).

12. இந்த சபையானது சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்பட்டு, விசுவாசிக்கப்பட்டு, கீழ்ப்படியப் பட்டதோ அங்கெல்லாம் காணப் பட்டது (மத். 28: 19,20).

13. இந்த சபை கத்தோலிக்க சபையும் அல்ல, ப்ராடஸ்டன்ட் சபையும் அல்ல (மத். 28:19,20).

14. அதற்கு இயேசு கிறிஸ்து மாத்திரமே தலையாயிருக்கிறார் (எபே. 1:22, 23).

15. அதில் அங்கம் வகிக்காமல் வெளி யில் இருந்தவர்கள் இழந்து போனவர் களாயிருந்தார்கள் (எபே. 2:12).

16. இந்த சரீரத்திற்குள் தான் இரட்சிக் கப்பட்டவர்கள் இருந்தார்கள் (அப். 2:47; 2கொரி. 5:17)

17. இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனு டைய பிள்ளைகளாக இருந்தார் கள் (கலா. 3:22,23).

18. அவர்கள் மறுபடியும் பிறந்தவர்கள் (யோவான் 3:1 5; 1 பேதுரு 1:22,23)

19. அவர்கள் தேவனுடைய புதிய ஆவிக்குரிய மாளிகையாகவும், பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருந்தார் கள் (1 பேதுரு 2:5,9).

20. அவர்கள் கிறிஸ்துவின் மண வாட்டிகளாக இருந்தார்கள் (ரோமர் 7:4).

இயேசு கட்டின இந்த சபையில், அங்கம் வகிப்பது முதல் நூற்றாண்டில் சாத்தியமாக இருக்கிறதென்றால் இன்று ஏன் சாத்தியமில்லை? மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தில் இல்லாம லேயே கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சாதாரணக் கிறிஸ்தவ னாயிருப்பது சாத்தியமா? இதற்கான வேதாகமப் பதில் "ஆம்" என்பதாகும்.

## ஏன் ?

*Betty Burton Choate*

பாவமும், வேதனையும், மரணமும் நிறைந்த
இந்நிலத்தின் வழியாக பயணிக்கும்போது, என்னைச்
சுற்றிலும் இருக்கும் ஜனங்கள், கிடைக்காத பொருள்களுக்காக,
பாடுபடுவதை என்னால் காண முடிகிறது.
அப்போது நான் கிறிஸ்துவால் நீண்ட காலத்திற்கு முன்பாக
கேட்கப்பட்ட கேள்வியை நினைத்துப் பார்த்தேன்
" மனுஷன் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன

# சபையை மீட்டமைத்தல்

## Restoring The Church

***Bobby Dockery***



வெகு காலத்திற்கு முன்பு பிரான்ஸ் நாட்டில் ஒரு விவசாயி தன்னுடைய வயல்வெளியில் புதைந்து இருந்த ஒரு மரத்தூணால் தடுக்கி விழுந்தார். அந்த மரத்தூணை தோண்டி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது மண்ணில் புதைந்திருந்த ஏதோ ஒன்றோடு அது உறுதியாக இணைக்கப்பட்டிருந்ததை அவர் கண்டுபிடித்தார். அவருக்கு உதவிச் செய்ய வந்தவர்கள் அந்த மரத்தூண் புதைந்து போன சபைக் கட்டிடத்தின் கோபுரமாயிருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். பல நூற்றாண்டுகளாக, இயற்கையின் சீற்றங்களும், போரினால் ஏற்பட்ட சிதைவுகளும் அந்த ஆலயத்தை மூடிப் போட்ட படியினால், அது முற்றிலுமாக மறக்கப்பட்டு போய் விட்டது. கடைசியாக, அந்த முழு கட்டிடமும் கண்டுபிடிக்கப்பட்டு, பயன்படுத்தத்தக்க பழைய நிலைக்கு வந்தது.

இந்தச் சம்பவம் நவீன மத உலகின் மிகப்பெரியத் தேவையை அடையாளப்படுத்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து தம்முடைய சபையை ஸ்தாபிக்கும்படி மரித்தார் (அப். 20:28; மத். 16:18). நூற்றாண்டுகளாக கிறிஸ்து கட்டின சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட பாரம்பரியம், புதுமை, அபிப்பிராயம் போன்ற குப்பைகளால் இடர்பாடுகளால் மூடப்பட்டிருக்கிறது, மறைக்கப்பட்டிருக்கிறது (1 தீமோ. 4:1-7).

இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில், கிறிஸ்தவம் புதிய ஏற்பாட்டுக்கும், முதல் நூற்றாண்டு சபைக்கும் திரும்பினால் தான் முன்னே செல்ல முடியும். பிரிந்து கிடக்கின்ற, பாரம்பரிய பாரத்தால் நிறைந்திருக்கிற மத உலகம் நவீன மார்க்கப் பிரிவினை என்கிற குப்பையை நீக்கிப் பார்த்தால் தான் கிறிஸ்து கட்டின சபையை மறுபடியும் கண்டுபிடிக்க முடியும். நாம் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மறுபடியும் மீட்டமைக்க வேண்டும். அதற்கு நாம் வேதாகமத்திற்குத் திரும்ப வேண்டும்.

❖

# ஆம், பாரம்பரியத்துக்கு மதிப்பு இருக்கிறது

## *Yes, Tradition Has Value*

***Hollis Miller***

வேத வசனங்களில் நன்கு பரிச்சயமுள்ள மனித பாரம்பரியம் தெய்வீக ஏவுதலினாலானது என்பதை நம்பமாட்டார்கள். ஆனால், அதன் பொருள் பாரம்பரியத்துக்கு மதிப்பே இல்லை என்பதல்ல. சில வேளைகளில், அதற்கு மாபெரும் மதிப்பு இருக்கிறது.

பிள்ளைகள் முதிர் வயதுள்ளவர்களுக்குக் கொடுக்கும் மரியாதை "ஆமாங்க ஐயா", "ஆமாங்க அம்மா" என்று வெளிப்படையாகத் தெரியும் போது அது பாரம்பரியத்தின் மதிப்பை வெளிப்படுத்துகிறது. (லேவி. 19:32) அதுபோல, ஆண்கள், பெண்கள் செல்வதற்குக் கதவைத் திறந்து கொடுக்கும் போதும், எழுந்து நின்று பெண்கள் உட்காருவதற்கு இடங்கொடுக்கும் போதும் அதே ஒழுக்க நெறிகள் வெளிப்படுத்தப்படுகிறது. இத்தகைய பாரம்பரியங்களை ஒருவர் அவமதிக்கும் போது, அந்த பாரம்பரியங்கள் வெளிப்படுத்துகிற ஒழுக்க நெறிகள் அவமதிக்கப் படுகிறது.

ஆனால், சபையில் நிலைமை எப்படி இருக்கிறது? பாரம்பரியத்துக்கு மதிப்பு இருக்கிறதா? சபையில் ஒரு வேளை, பாரம்பரியம் என்பது சாதாரணப் புரிந்து கொள்ளுதலின்படி, தெய்வீக வெளிப்பாடாக இல்லாமலிருக்கலாம், ஆனால், அது "பொது அறிவின்" வெளிப்பாடாக உள்ளது. நாம் காரியங்களைச் செய்யும் விதம் மிகப் பெரும்பாலும் சோதனை மற்றும் பிழையின் விளைவல்ல. உதாரணமாக, பாடல் குழுவினர் பாடல்களில் வழிநடத்தும் போது சபையாருக்கு முன்பாக நின்று பாடல்களில் வழிநடத்தும்படியாக தேவனால் கட்டளையிடப்படவில்லை. ஆனால், அது செய்யப்படும் போது பலகாலமாக அப்படிச் செய்யப்படுகிறபடியால் மதிப்புள்ளதாகவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, காணிக்கை போடுவது சம்பந்தமாக உள்ளூர் சபைகளில், பல காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சிறந்த ஒழுங்குகள். இன்னும், சபையில் பிரசங்கியார் ஒரு பெஞ்சில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு பிரசங் கிப்பதை விட, பாரம்பரியமாக பிரசங்க மேடையில் நின்று பேசுவது சிறந்ததாகும். ஆராதனை நேரத்தை எல்லோருக்கும் ஏற்ற விதத்தில் குறித்துக்கொள்வது, வாரத்தோறும் ஒன்று கூடி அடுத்த வாரம் ஆராதனை நேரத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என தீர்மானிப்பதை விட சிறந்தாகும்.

உள்ளூர் சபையில், இது சிறந்ததாக இருக்குமென்று ஒருவர் சொல்லும் புதுக்கருத்தை ஏற்று, காலங்காலமாக வளர்ந்தோங்கி நிற்கும் செயல்பாட்டை தளர்த்துவதற்கு முன், வழக்கமான காரியங்களை ஆழமாக உற்றுப் பார்த்துத் தீர்மானிப்பது நல்லது. ❖

# ஆராதனை : துதியா அல்லது செயல் நிறைவேற்றலா?

# Worship : Praise or Performance?

***Jimmy Jividen***



உண்மையான ஆராதனை என்பது மனிதர்களைப் பிரியப்படுத்தும் படியான ஒரு செயல் அல்ல. ஆனால், தேவனை மகிமைப்படுத்தும்படியான துதியாக இருக்கிறது. அநேகர் இந்த உண்மையை மறந்து விட்டது போல் தெரிகிறது. சபைகள் தங்கள் நிகழ்ச்சிகளில், இசை விருந்துகளில், நாடகங்களில் ஒன்றை விட ஒன்று சிறப்பாகச் செய்ய முயற்சிக்கின்றன. அவைகளின் நோக்கம் தேவனைத் துதிப்பதை விட மனிதனைப் பிரியப்படுத்துவதாக இருப்பது போல் தெரிகிறது.

தேவன் இந்த பூமிக்குரிய ஆலயங்களில் வாசம் செய்வதில்லை. மனிதனுடைய பக்தி நிகழ்ச்சிகள் எவ்வளவு அழகாக, பரவசமூட்டுவதாக அல்லது தூண்டுதல் உண்டாக்குவதாக இருந்தாலும் சரி அதன் மூலம் தேவன் ஆராதிக்கப்படுவதில்லை. தேவன் தேவனாயிருக்கிறார். அவர் இப்பூமிக்குரிய வெற்றுச் சடங்குகளை அல்ல, ஆவிக்குரிய ஆராதனையையே விரும்புகிறார். ஆராதனையானது மனிதனை நோக்கி அல்ல தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும்.

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை; எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (அப். 17: 24,25).

உண்மையான ஆராதனை உள்ளார்ந்த மனிதனை ஈடுபடுத்துகிறது. அதாவது, விருப்பமுள்ள ஆவியை, புரிந்து கொள்ளுகிற மனதை, உணர்கிற இருதயத்தை அது ஈடுபடுத்துகிறது. உண்மையான ஆராதனைக்கு மனிதனுடைய புதுமைச் செயல்களோ அல்லது மனிதத் தூண்டுதலோ மாற்றாக அமையாது. இயேசு இவ்விதமாகச் சொன்னார். *அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* (மத். 6:5). ❖

# ஆராதனை என்பது...
## Worship Is...
*Ron Bryant*



ஆராதனை என்பது ஓர் உயர்வைத் தேடுவதல்ல; அது உயர்வானதுதான். அது தாழ்மையாயிருக்கத் தேடுவதல்ல; அது தாழ்மையாக இருப்பது தான். அது தேவனைப் போற்றத் தேடுவதல்ல; அது போற்றுதல் தான். அதுபோல, ஆராதனை என்பது துதிக்கத் தேடுவதல்ல அது துதிப்பது தான்.

ஆராதனை என்பது தேவனைத் தேடி கண்டுகொள்வதாகும். ஆராதனை என்பது முழங்காற்படியிட்டு, உயரப் பார்ப்பதாயிருக்கிறது. ஆராதனை என்பது இருதயத்தை ஊற்றுவதாகவும், அதே நேரத்தில் நிரப்பப்படுவதாகவும் இருக்கிறது. அது தேவனுக்குள் களிகூருவது, தேவனை கனப்படுத்துவது, தேவனைத் துதிப்பது, தேவனைப் போற்றுவது போன்றவைகளாயிருக்கிறது. ஆராதனை என்பது மனிதனை மையப்படுத்துகிறதாயிராமல் தேவனை மையப்படுத்துகிறதாயிருக்க வேண்டும்.

அது கிறிஸ்தவர்களாக நாம் இருப்பதால் நமக்குக் கிடைக்கும் சிலாக்கியமாக இருக்கிறது. அது கிறிஸ்தவர்களுடைய கடமையாகவும் இருக்கிறது.

ஆராதனை என்பது வாழ்க்கையோடு பின்னிப்பிணையப்பட்டிருக்கிறது. எனவே, ஒரு கிறிஸ்தவனால் இரண்டையும் ஒன்றாக எண்ணிப் பார்க்க முடியும். வாழ்க்கையில் தேவனைக் கனப்படுத்த ஊக்கமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். ஆராதனை வாழ்க்கையிலிருந்து ஒருபோதும் பிரியாத ஒன்றாக இருந்து, வாழ்க்கையின் மையமாக இருக்கிறது. பரிசுத்த அழகுடனே நாம் தேவனை ஆராதிக்க வேண்டும். மரியாதை தேவனுக்கு மாத்திரம் செலுத்தப்பட வேண்டும்.

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஆராதனை என்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. அது உயர்வானதும், பரிசுத்தமானதுமாயிருக்கிறது. இவை எல்லாவற்றிலும் ஒரு விசுவாசி தன்னுடைய வாழ்க்கை முழுவதும் தேவனையும், அவருடைய மகிமையையும் தேடுகிறார். இவைகள் எல்லாவற்றிலும் தேவனுடைய அன்பு, இரக்கம் கிருபை போன்றவைகள் தான் நம்மைக் கட்டுப்படுத்துகிறது.

ஆராதனை என்பது, மனிதனில் அன்பு கொண்டு, அவனுக்காகக் கிறிஸ்துவை மரிக்கக் கொடுத்து, அவனை ஏற்றுக் கொண்ட தேவனுக்கு மனிதன் பிரதிபலனாகச் செலுத்தும் ஒன்றாக உள்ளது. ❖

# அம்மா

நான் சிறு குழந்தையாயிருந்த போது, என் அம்மா தான் அணிந்து பெரிதாகிப் போன அந்த பெரிய வெள்ளை "சாக்ஸ்" யை அணிந்து கொள்ளும்படி செய்தார். அவைகள் தொளதொளவென இருந்தபடியால் அதை இறுக்கமாக்குவதற்கு ரப்பர் பேண்ட்களை போட வேண்டியதாயிருந்தது. ஒரு நாள் நான் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது மழை பெய்யத் தொடங்கியது. அப்போது அந்த "சாக்ஸ்" நன்றாக நனைந்து விட்டது அந்த ரப்பர் பேண்ட்களால் கூட அவைகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவைகள் தண்ணீரில் மூழ்கி என் உடைகளை சொதப்பலாக்கி கனமாக்கி விட்டது. மற்ற குழந்தைகள் என்னைப் பார்த்து சிரித்தார்கள், நான் அழத் தொடங்கி விட்டேன்.

எங்கிருந்தோ ஒரு பெரிய குடை என்னை முழுவதுமாக மூடியது. மென்மையான கரங்கள் என் தோள்களின் மீது விழுந்தன. ஒரு மெல்லிய குரல் என்னிடம், "தன்னைப் பார்த்தும் மக்கள் முன்பு சிரித்ததாகவும் ", நான் அவர்கள் மீது கவனம் செலுத்தக் கூடாதென்றும் சொன்னது. மேலும், அந்த குரல் என்னிடம் நான் அணிந்து கொண்ட "சாக்ஸோ" (Socks) அல்லது மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தார்கள் என்பதோ ஒரு பொருட்டல்ல என்றும், உள்ளே நான் யார் என்பது தான் முக்கியம் என்றும் சொன்னது. அந்த அம்மாவின் அனல்மூட்டும் வார்த்தைகளையும், தொடுதலையும் களைப்பான என் சிறு உடலில் ஊறவிட்டேன். மேலே பார்க்க அதிக வெட்கப்பட்டு, நான் பார்த்ததெல்லாம் அந்த பூட்ஸின் மேலே அவர்களுடைய கருப்பானகால் தான். மழைக்காலங்களில் தளர்ந்து போன "Socks" ளுடனும், உடைந்த இருதயத்துடனும் நேரம் எடுத்து இந்த வெள்ளை குழந்தையிடம் அன்பு காட்டிய

அந்த கறுப்பின அம்மாவை நினைத்துப் பார்க்கிறேன்.

**ஆராதனை**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| ~~5~~ | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| ~~19~~ | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| ~~26~~ | 27 | 28 | 29 | 30 | 31 | |
| | | | | | | |

# எந்த ஞாயிற்றுக்கிழமையை தவற விடலாம் என்பதைத் தீர்மானித்தல்

## Deciding Which Sundays to Miss

***Ancil Jenkins***

**த**ன்னுடைய சுயசரிதையில் டாக்டர். C. எவரெட் கூப் என்பவர், தன் குடும்பம் இளமைப்பருவத்தில் இருந்த போது, அவர் எடுத்த தீர்மானம் பற்றி எழுதியிருக்கிறார். அவர் பரபரப்பான அலுவலில் இருந்தாலும், தன் குடும்பம் வாரந் தோறும் சபை கூடிவரும் எனத் தீர்மானித்திருந்தார். " எந்த ஞாயிற்றுக்கிழமையில் சபைக்குப் போகாமல் இருக்கலாம் என்று தீர்மானிப்பதை விட வாரந்தோறும் ஆராதிக்க சபை கூடுவது எளிதானது என்று அவர் ஒருமுறை சொன்னார் ".

சபை கூடி வருதலைப் பற்றி உணர்வுப் பூர்வமாகக் குழப்பமடைவது இயற்கையானது தான். நாம் ஒருவர் தேவனிடத்தில் உண்மையாயிருப்பதற்குத் தேவையான தகுதியம்சங்களை ஏற்படுத்திவிடுகிறோம். யாரோ உண்மைத் தன்மைக்கு இவ்விதமாக விளக்கம் அளிக்கிறார்.

" .....*மெய்யாகவே விசுவாசமாயிருப்பவர்கள்* " என்றால், அவர்கள் ஒருபோதும் தவறுவதில்லை.

" ..... *ஓரளவு விசுவாசமுள்ளவர்கள்* " வராமலிருப்பதைவிட வருவது அதிகமாயிருக்கும்.

" ..... *அதிக விசுவாசமில்லாதவர்கள்*" வருவதை விட வராமலிருப்பது அதிகமாயிருக்கும்.

" ..... *விசுவாசமே இல்லாதவர்கள்*" என்றால் சபை கூடி வருவதே இல்லை. தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள், நிச்சயமாகவே தேவனிடத்தில் விசுவாசமாயிருப் பதற்கும், சபை கூடி வருவதலுக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. ஒருவர் சபை கூடி வருவதனால் மாத்திரம் அவர் விசுவாசமுள்ளவர் என்று பொருள்படாது. ஒருவர் ஆராதனையில் கலந்து கொள்வது மாத்திரம் அவருக்குப் பரலோக பயணத்திற்கான சீட்டைப் பெற்றுத்தராது, அதுபோலவே, ஆராதனையில் கலந்து கொள்வது மாத்திரம் ஒருவருக்கு பரலோக உத்திரவாதத்தைப் பெற்றுத்தராது. ஆனாலும், ஓர் உண்மையுள்ள நபர் தேவனைத் தவறாமல் ஆராதிப்பார்.

ஒருவருக்குச் சரியான நோக்கம் இருக்கும்போது, எந்த ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்குப் போகாமலிருப்பது என்கிற பிரச்சனையே இருக்காது. முடிந்த வரை எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் அவர் பங்கு பெறுவார். ஒருவேளை சபை எதற்காகக் கூடி வருகிறது அதன் நோக்கம் என்ன? என்பதைப் பற்றிய தெளிவான விவரத்தை நாம் காணாமல் இருக்கலாம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில்; பொதுவான ஆராதனைக்கான சில காரணங்களைக் கொடுக்கிறார். கொரிந்து சபை கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் நோக்கத்தில் கூடியது. பவுல் இதை வெளிப் படையாகச் சொல்லாவிட்டாலும் கூட, அவர்களுடைய ஆராதனை ஒழுங்கில்லாமல் இருந்ததாகவும், கர்த்தருடைய பந்தியில் அவர்களால் ஒழுங்காகப் பங்கு பெற முடிய வில்லையென்றும் பவுல் கூறுகிறார், அதுதான் அவர்கள் நோக்கமாயிருந்தது என்று உட்பொருளோடு சொல்கிறார் (1 கொரி. 11:20). கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறத் தவறுவது, கிறிஸ்துவின் ஐக்கியத்தோடும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தோடும், பங்கு இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளிவிடும் (1 கொரி. 10:16). கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கு பெறுவது அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பிப்பதை அடையாளப்படுத்துகிறது. பந்தியில் பங்கு பெறும் வேளையானது நம்மைப் பற்றியும் நம் வருங்காலத்தைப் பற்றியும் அவரோடும், நம் சகோதரர்களோடும் நாம் கொண்டிருக்கும் உறவு பற்றியும் ஆழமாக சிந்திக்கும் வேளையாக இருக்க வேண்டும். இதை நாம் தவறவிட்டோமானால் ஆவிக்குரிய வளர்ச்சிக்கான அருமையான வாய்ப்பைத் தவற விட்டு விடுவோம்.

நாம் சபையாகக் கூடிவரும் வேளை பக்திவிருத்திக்கேதுவாக இருக்க வேண்டும் (1 கொரி. 14:26) ஆராதனை என்பது பாடல் மற்றும் ஜெபவேளையாக வேண்டும் (1 கொரி. 14:15). ஆராதனை ஒழுங்காகவும் புரிந்து கொள்ளத்தக்கதாகவும், அவிசுவாசிகளைக் கூட கவரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். (1 கொரி. 14: 23,24). நாம் ஆராதனைக்குப் பார்வையாளர்களாக அல்ல. பங்கேற்பவர்களாக வரவேண்டும்.

எப்போது ஆராதனையில் பங்கு பெறலாம் என முடிவெடுக்கும் பிரச்சனைக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். யாருக்காக வாழ நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்? உள்ளார்ந்த மனிதனுக்காகவா அல்லது புறம்பான மனிதனுக்காகவா? உள்ளார்ந்த மனிதன் சபையுடன் இருக்க விரும்புவான்.

ஆராதனை நம்மைப் பக்திவிருத்தி அடையச் செய்கிறது. அதனால் நாம் பிறரை பக்திவிருத்தி அடையச் செய்கிறோம். ஆராதனையை இவ்விதமாக பலனளிக்கக்கூடிய ஒன்றாக நாம் பார்க்கும் போது, ஒரு ஞாயிற்றுக்கிழமை கூட நாம் ஆராதனையில் கலந்து கொள்ளாமல் இருக்கமாட்டோம். ❖

## கர்த்தர் ஏற்கனவே அழைத்துவிட்டார்

**ஞா**யிற்றுக்கிழமை காலையில் ஓர் அழைப்பு வந்தது. “காலையில் அம்மாவை ஆராதனைக்குப் போக வேண்டாம் என்று சொல்; நாங்கள் வருகிறோம் ”. ஆனால், அந்த அம்மா வேத பாட வகுப்புக்கும், ஆராதனைக்கும் சென்று விட்டார். அந்த அம்மாவின் மகள் வீட்டிற்கு வந்த போது அவரை வரவேற்க வீட்டில் யாருமில்லை, அதனால் அவள் கடுங் கோபமடைந்தாள். தாய் வீட்டிற்கு வந்த போது மகள் தாயைப் பார்த்து “*நான் உங்களைத் தொலைபேசியில் அழைத்து வருவதாகச் சொன்னேன் அல்லவா ஆனால், நீங்கள் ஆராதனைக்குச் சென்று விட்டீர்கள்* ” என்று கோபங் கொண்டாள். அதற்கு அந்த தாய், “ நான் வருந்துகிறேன் பிரியமே, *ஆனால், கர்த்தர் உனக்கு முன்பாகவே என்னை அழைத்து விட்டாரே*” என்று பதிலளித்தார்.

# நீங்கள் ஆவிக்குரிய வகையில் உயிரோடிருக்கிறீர்களா? அல்லது மரித்துக் கொண்டிருக்கிறீர்களா?

## *Are You Spiritually alive or dying?*

**P.C. Philemonrajah**

பிரியமானவர்களே! நாம் இந்த பூமியில் வாழ்ந்தாலும் நாம் இந்த பூமிக்கு உரியவர்கள் அல்ல, மாறாக, ஆவிக்குரியவர்கள் என்று வேதாகமம் நம்மை அடிக்கடி ஞாபகப்படுத்துகிறது.

பவுல் இவ்வாறாக சொல்கிறார், மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாய்ப் போராடிக் கொண்டேயி ருக்கிறது என்று. காரணம் என்ன வெனில், தேவன் ஆவியை நமக்கு மாம்சத்திற்குள் வைத்திருக்கிறார். ஆனாலும், பல வேளைகளில் மாம்சம் இந்த ஆவியை மேற்கொள்கிறது. இந்த ஆவிக்காகத்தான் மாம்சம் இருக்கிறது என்பதை நாம் மறந்து போய் விடுகி றோம் அல்லது மறக்க வைத்து விடுகி றோம்.

தேவன் ஆவியாயிருக்கிறார். நாம் அவருடைய சாயலில் படைக்கப் பட்டோம். தேவன் நமக்குக் கொடுத்த [illegible] வாகளாகிய நாம், [illegible]க்குரியவைகளிலிருந்து விழுந்து போய்விட்டோம். மறுபடியும் நாம் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்ததினாலே, மீண்டும் ஆவிக்குரிய வர்களாக மறுபடியும் அந்த ஆசீர்வாதத் தைப் பெற்றிருக்கிறோம்.

இவ்வாறாக, நாம் ஆவிக்குரிய வர்களாக ஆவிக்குரிய காரியங்களைச் செய்ய முயற்சிக்கும் போது, ஆவிக்குரிய வைகளை ஆவிக்குரியவைகளோடு சிந்திக்காமல், மாம்சத்திற்குரியவைக ளோடு சிந்திக்கும்போது, மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று போராடு கிறது. தேவனுக்கு முதலிடமா? என்று வரும்பொழுது, தேவன் தான் எல்லாம் என்று சொல்லிவிட்டு, தேவன் தானே இவை எல்லாம் கொடுத்தார் என்று நமக்கு நாமே நம்மை சமாதானப் படுத்திக் கொண்டு, தேவனுடைய காரியங்களை ஒதுக்கிவிட்டு, உலகத்தின் காரியங்களைச் செய்கிறோம்.

நாம ஆவிக்குரியவர்களா? [illegible] ஆவியானவரால் வழி நடத்தப் படுகிறோமா? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்கிறதா? அப்படியிருக்கிறது என்றால், சிலுவை பற்றிய செய்தியைக் கேட்டதும், இதுவரையில் நான் வாழ்ந்த

வாழ்க்கையை விட்டுவிட்டு, என் மீது அன்பு கொண்டு எனக்காக மரித்த இயேசுவிற்காக நான் வாழப்போகிறேன் என்ற எண்ணம் வருகிறதா?. சில காரியங்களை இயேசுவிற்குப் பிடிக்காது. ஆகையால், என்னை மாற்றிக் கொள்ளப் போகிறேன் என்ற எண்ணம் வருகிறதா? அல்லது இன்னும் அப்படியே இருக்கிறதா? சிந்தித்துப் பார்ப்போம்.

1 கொரி. 1:18, *சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பையத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது.* சிலுவைச் செய்தி நம்மை பெலப்படுத்த வேண்டும். நம்மை மாற்ற வேண்டும். சிலுவைச் செய்தியினாலே மாறாத ஒரு நபரின் வாழ்க்கை பரிதாபத்திற்குரியது. ஆனால், அப்படி மாற்றப்பட்ட ஒருவரால் நிச்சயமாகவே, ஆராதனையையோ, திருவிருந்தையோ தவறவிட முடியாது. எனக்கு இந்த வாரம் முக்கியமான வேலை இருக்கிறது, அடுத்த வாரம் வருகிறேன் என்று சொல்லவும் முடியாது. சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குத் தான் பைத்தியமாகத் தோன்றும். சிலர் தாங்கள் ஆயத்தமில்லை எனக் கூறி திருவிருந்தை தவறவிடுகின்றனர். அப்படி நாம் தவறவிட்டால் ஆவியில் நாம் செத்துக்[illegible]

வெளி. 2:4. *ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு.* பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்துவால் அவருடைய சபையிலே அங்கமாக சேர்க்கப்பட்டு, பரிசுத்த ஆவியான வரையே வரமாகப் பெற்ற, அன்று நாம் ஆனந்தமாக இருந்தோம் அல்லவா? வேதம் படிப்பது, ஜெபிப்பது, கொடுப்பது, ஊழியங்களில் பங்கு பெறுவது என்று இருந்தோம் அல்லவா. பின்பு, நாளடைவில் குடும்பம், வேலை என்று நமக்குள் உலகம் நிறைந்துவிட்டது. ஆதியில் இருந்த அன்பை நாம் விட்டுவிட்டோம். அப்படி விட்டுவிட்ட நாம் ஆவியில் செத்துக் கொண்டிருக்கிறோம் என்ற மாபெரும் சிந்தை நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

சங். 122:1, *கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.* சபையாகக் கூடி ஒரு கூட்டம் வைப்பதை பற்றி பேசும் போது, அடுத்த மாதம் அதே தேதிகளில் ஒரு முக்கியமான காரியம் இருக்கிறது என்று நாம் சிந்திக்கிறோம் என்றால், ஆவிக்குரிய காரியங்களில் நமக்கு நாட்டம் குறைகிறது. ஆவிக்குரிய காரியத்தில் பங்கு பெறச் சொன்னால் சந்தோஷம் வருகிறதா? அல்லது காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறோமோ? ஊழியத்தில் பங்கு பெறுங்கள் என்றால், பணம் தந்து ஒதுங்கிக் கொள்கிறோமா. தெருத் தெருவாக அலைந்து ஊழியம் செய்த இயேசுவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து பின்பற்றி வரும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆவிக்[illegible]யை [illegible] ரீதியில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரோமர் 1:14,15, *கிரேக்கருக்[illegible] மற்ற அந்நியர்களுக்கும், [illegible]*

*மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால், ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்;* ஊழியத்திற்கு வரும்படி தேவன் கட்டாயப்படுத்தவில்லை. அப்படி வந்தால் தேவன் சந்தோஷப்படுவார். ஆகையால், வாருங்கள் என்று தேவன் சார்பாக உங்களை அழைக்கிறேன். ஏனெனில், அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், விருப்பம் இருந்தால் வாருங்கள். அதிகம் செய்ய முடியாவிட்டாலும், பவுல் சொல்வதை போன்று இயன்ற அளவாயினும் செய்யுங்கள். தினமும் 10 நிமிடமாவது ஆண்டவரைப் பற்றிச் சொல்ல ஒதுக்குங்கள். நாளடைவில் 30 நிமிடங்களாகவோ அல்லது ஒரு மணி நேரமாகவோ, வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்குத் தினந்தோறும் ஊழியம் செய்யுங்கள்.

2 தீமோ. 4:10 *ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான். கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்.* சமீபத்தில் ஒரு நல்ல தம்பதியினிடத்தில் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் இருவரும் வெளி நாட்டில் வேலை செய்கிறார்கள். குறைந்த நாட்கள் அவர்கள் இங்கு வந்து இருந்தனர். ஆனால், அதற்குள் அவர்கள் வீட்டில் 3 கூட்டங்கள் ஒழுங்கு செய்து நடத்தினார்கள். ஒரு வேத வகுப்பில் செய்தி கொடுக்க நான் சென்றிருந்தேன். ஆவிக்குரிய காரியத்தில் இவ்வளவு ஆவர்மாக இருக்கிறீர்கள், மிக்க மகிழ்ச்சி. நீங்கள் வேலை பார்க்கும் இடத்தில் வாரந்தோறும் ஆராதனைக்கு செல்கிறீர்களா என்று கேட்டேன். அவர்கள் சொன்னது என்ன தெரியுமா? நாங்கள் ஆராதனைக்குச் செல்வதில்லை என்றார்கள். உலகத்தின் மீது ஆசை வைத்து தேவனை விட்டுப் போகிற நிலைமை மிகவும் அபாயகரமானது. ஆராதனையைத் தவறவிடுவது ஆபத்தானது. நான் சொல்வது சத்தியம்! அப்படி தவறவிட்டால் நீங்கள் ஆவிக்குள்ளாக செத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

மத். 25:24,30ல், ஒரு தாலந்தை வாங்கினவன் கொண்ட தவறான எண்ணத்தை நம்மால் பார்க்க முடிகிறது. ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன், இதோ, உம்முடையதை வாங்கிக் கொள்ளும் என்றான். தேவன் கொடுத்ததே விருத்தியாக்குவதற்குத் தான். தேவன் மீது தவறான எண்ணம் கொண்டிருந்தால், ஆவிக்குள்ளாக செத்துக் கொண்டிருக்கிறோம்.

பிரியமானவர்களே! ஆவிக்குரியவர்களாகிய நாம் ஆவிக்குள்ளாக உயிரோடிருக்கிறோமா? அல்லது செத்துக் கொண்டிருக்கிறோமா? இன்றே நம்மைச் சரி செய்து, பரிசுத்த ஆவியின் துணை கொண்டு கிறிஸ்துவின் உபதேசத்தின்படி வாழ்வோம். தேவன் தாமே உதவி செய்வாராக!. ❖

# கிறிஸ்தவ ஒத்திசைவு

## Christian Symmetry

*Kenneth Tipton*

| | |
|---|---|
| ஆவி | சத்தியம் |
| உணர்வு | விவேகம் |
| விசுவாசம் | கிரியைகள் |
| உபதேசம் | செயல்பாடு |
| அன்பு | பயம் |
| நம்பிக்கை | ஞானஸ்நானம் |

" **உ**ங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை ஒத்திசைவுடன் இருக்கிறதா? கலை மற்றும் கணிதத்தில் இதன் பொருள் மையபுள்ளியின் இருபுறங்களும் சமமான அளவு கொண்டதாக இருக்கும் என்பது. கீழ்க்காணும் மூன்று காரியங்களை நாம் சுருக்கமாக இங்கே ஆராய்வோம். ஆராதனை, சேவை மற்றும் இரட்சிப்பு இவைகளை நாம் ஆராயும் போது இந்தப் பகுதிகளில் நாம் எவ்விதமாக இசைந்த தன்மையைப் பெற்றிருக்க வேண்டுமென்று பொருத்திப் பார்க்க முடியும்.

முதலாவதாக, நீங்கள் *ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கிறீர்களா?* இயேசு கிறிஸ்து கிணற்றருகே அந்த சமாரிய ஸ்திரீயிடம் உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், என்று சொன்னார் (யோவான் 4:23,24). சரியான *உபதேச மில்லாமல்* நல்ல *மனப்பான்மையை* மாத்திரம் பெற்றிருப்பது போதுமானதல்ல. மறுமுனையில் பவுலும் நாம் *ஆவியோடும், கருத்தோடும்* பாட வேண்டும் என்று சொல்கிறார் (1 கொரி. 4:15). இசைக்கும், சுரங்களுக்கும் நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்தால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லத்தக்கதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வேதகாம வரிகளைச் சமச்சீராக வைப்பதினால் அங்கே ஒருங்கமைவு ஏற்படும் (கொலோ. 3:16). உங்கள் ஆராதனை யில் உணர்வும், அறிவும் சமச்சீராக ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதா? உங்கள் இருதயங் களில் உணர்வுகளால் மட்டும் தொடப்படுகிறீர்களா அல்லது தேவனுடைய வார்த்தையின் ஆழங்களை சிந்தித்து உங்கள் மனதும் சமமான அளவில் தூண்டப்பட வேண்டும் என்பதை நாடுகிறீர்களா?

வேதாகம ஒத்திசைவின் இரண்டாவது பகுதி *விசுவாசமும், கிரியையும்.* கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்று யாக்கோபு சொன்னார் (யாக். 2:17). இந்த கருத்தை அவர் அடுத்த வசனத்தில் தெளிவுபடுத்தி கிரியைகள் இல்லாமல் நம் விசுவாசத்தைக் காட்டும்படியாக நமக்குச் சவால் விடுகிறார். அவர் கிரியைகளினாலே தனது விசுவாசத்தைக் காட்டுவதாகச் சொல்கிறார். ஒருவர் அதிகமான விசுவாசத்தை மாத்திரம் உடையவராகவோ அல்லது அதிகமான கிரியையை மாத்திரம் உடையவராகவோ இருந்தால் அவர் சமச்சீரான தன்மையிலிருந்து வெளியே இருப்பார். மத். 7:21-23 வசனங்களில் இயேசு கிறிஸ்து இதை வலியுறுத்துகிறார். நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை என்று தன் கிரியைகளைக் குறித்து பெருமை பாராட்டுகிறவர்களைப் பார்த்துச் சொல்வார்.

உங்கள் *உபதேசமும், வாழ்க்கையும்* சமமாக இருக்கிறதா? ஞாயிற்றுக்கிழமையில் ஒருவகையான நபராகவும், வேறு நாட்களில் மற்றொரு நபராகவும் நீங்கள் இருக்கிறீர்களா? பவுல், பாவம் உங்களுக்குள்ளிலிருந்தால், நீங்கள் செய்ய விரும்புகிறதைச் செய்யாமல், செய்ய விரும்பாததவைகளையே செய்வீர்கள் என்று சொல்வதன் மூலமாக பாவத்தின் தன்மையைப் பற்றிப் பேசுகிறார் (ரோமர் 7:15-19). உங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் அன்பு மற்றும் பயம் ஆகிய இரு உணர்வுகளும் கட்டளைகளோடு பின்னிப் பிணையப்பட்டிருக்கிறது. இதில் ஒரு பகுதியை அதாவது பயத்தை பிரசங்கி 12:13ல் நாம் காணலாம். *காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த* கடமை இதுவே!!.. *இயேசு மற்றொரு உணர்வு பூர்வமான பகுதி பற்றி இவ்விதமாகச் சொல்கிறார். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்!!* என்று. (யோ. 14:15). தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதைப் பற்றிய பயம் நிறைந்த புரிந்து கொள்ளுதல் இருக்கிறதா, அதை எப்படி சமமாக சமாளிக்கிறீர்கள்?

அடுத்து, மூன்றாவது முக்கியமான பகுதி பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலைக்குக் கடந்து செல்கின்ற நிலை. இந்தக் கருத்தை மாற்கு 16:16ல் கிறிஸ்து விளக்குகிறார். *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்* என்று சொல்கிறார். இவைகள் இரண்டையும் நாம் பெற்றிருக்கவில்லையென்றால் நாம் சமச்சீராக இல்லை (ரோமர் 6:4). அதே நேரத்தில் நாம் விசுவாசத்தைத் தவிர்த்து ஞானஸ்நானத்தை மாத்திரம் வலியுறுத்தினால் சமச்சீரற்றவர்களாக காணப்படுவோம்.

மேற்சொல்லப்பட்ட சம்பவங்களில் ஒரு பக்கத்தில் நாம் எவைகளைப் பெற்றிருக்கிறோமோ அவைகளை நாம் மறுபக்கத்திலும் பெற்றிருந்தால் தான் முழுமையான கிறிஸ்தவ ஒத்திசைவைப் பெற்றிருப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையானது தேவனை நோக்கி ஏறெடுக்கக்கூடிய செங்குத்தான பகுதிகளையும், நமக்கான பகுதிகளை உள்ளடக்கிய அடிக்கோட்டையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ ஒற்றுமையை நாம் பெற்றுக் கொள்ள ஒரு வழி, சிலுவைப் பற்றி, குறிப்பாக சிலுவையில் மரித்த இயேசுவைப் பற்றி சிந்திப்பது. அவருடைய மரணத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஒருங்கமைவுள்ள சமச்சீரான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ நமக்கு ஆவலையும், ஊக்கத்தையும் ஏற்படுத்த உதவும். ❖

# கற்குவியலருகே ஒரு கூடுகை

## A Meeting At The Rock Pile

*Michael L. King*



இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானானுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக யோர்தான் நதிக்கு வந்தடைந்தார்கள். தேவன் இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒவ்வொருவராக பன்னிரண்டு பேர் தேவனாகிய கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகக் கடந்து போக வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். யோர்தானின் மத்தியில் ஒவ்வொருவரும், அவர்களுக்குள்ளே ஓர் அடையாளமாயிருக்கும்படிக்கு இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் இலக்கத்திற்குச் சரியாக ஒவ்வொருவன் ஒவ்வொரு கல்லைத் தன் தோளின் மேல் எடுத்துக் கொண்டு அவைகளைத் தங்களோடே கூட அக்கரைக்குக் கொண்டு போய், தாங்கள் தங்கின இடத்தில் வைத்தார்கள். அந்தக் கற்களின் முக்கியத்துவம் என்னவென்றால், இஸ்ரவேலர்களின் சந்ததியார் அக்கற்குவியலைப் பற்றிக் கேட்கும் போது, தங்கள் முன்னோர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பட்டதையும் அவர்களுக்காக செங்கடல் பிளக்கப்பட்டு வனாந்தரத்தில் நடந்து பாலும், தேனும் ஓடின கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க, வெட்டாந்தரை வழியாய் இந்த யோர்தானைக் கடந்தார்கள் என்பதையும் நினைவு கூருவார்கள். அந்த நினைவுச் சின்னம் மற்றும் அந்த சம்பவத்தைத் திரும்பச் சொல்வதன் நோக்கம் என்னவென்றால், *பூமியின் சகல ஜனங்களும், கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும்படிக்கும், நீங்கள் சகல நாளும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப் பட வேண்டுமென்பதே* (யோசு. 4:24).

பின்வரும் சந்ததியாருக்கான தேவனுடைய மகத்துவம், மற்றும் இரக்கத்திற்கு ஆதாரமாக விளங்கும் கல் நினைவிடம் பின்வரும் சந்ததியார்

தேவனிடத்தில் அன்பு, மரியாதை, பாராட்டு போன்றவைகளை வெளிப் படுத்தவும், அவரை நோக்கி ஆராத னையை ஏறெடுக்கவும் ஏதுவாயிருக் கும். நாம் சபைத் தலைவர்களாக உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக, பெற்றோர்களாக, தேவனுடைய நன்மையின் நினைவுகளாக, நாம் நம் தேசத்திற்கும், குடும்பத்திற்கும், சபைக் கும் எவைகளை விட்டுச் செல்கிறோம்? உறவினர்களை உள்ளடக்கிய நம் குடும்பமானது தேவன் பேரில் நாம் கொண்டிருக்கும் மிகுந்த மரியாதை யைக் கருத்தில் கொண்டு தேவனை அறிந்து கொள்ள முன் வருமா? வரப் போகிற சந்ததியாரின் வாழ்வை ஆவிக் குரிய ரீதியில் சுவையாக்கும்படியான ஒரு வாழ்வை நாம் நடத்துகிறோமா? நம் "கற்குவியல்" நம் நம்பிக்கைக்கும், அர்ப்பணிப்புக்கும் ஆதாரமாயிருக் கிறதா? தேவ வல்லமை நம்மில் கிரியை நடப்பிப்பது பிறர் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு இருக்கிறதா?.

உங்கள் "கல்" எதுவாகவும் இருக்கலாம். ஆனால், அது சந்தோஷம், மகிழ்ச்சி, வெற்றி, நன்றியறிதல், சர்வ வல்லவருக்கான மரியாதை போன்ற வைகளின் அடையாளமாக இருக்க வேண்டும். இஸ்ரவேலர்களுக்கான இந்த சம்பவம் நேர்மறையானதும், சந்தோஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. இதுவே ஒரு கிறிஸ்தவன் இப்பூமியில் வாழும் நாட்களில் ஒட்டுமொத்தத் தன்மையாயிருக்க வேண்டும்.

இஸ்ரவேலர்களின் வாழ்வில் மற்றுமொரு கற்குவியல் இருக்கிறது. அது எச்சரிப்பின், தோல்வியின் நினை வாய் இஸ்ரவேல் மத்தியில் இருந்தது. ஆகான் என்பவன் போரில் கொள்ளை யிடப்பட்ட பொருட்களைத் தன் கூடாரத்தின் கீழ் ஒளித்து வைத்ததினால் இஸ்ரவேல் சாபத்திற்குள்ளானது. அவர் களுடைய இராணுவத் திறமை மங்கிப் போனது, வல்லமை மிகுந்த தேவனு டைய மக்களை உள்ளடக்கிய தேசத்தில் எங்கும் தோல்வி பரவியது. மாபெரும் தலைவனாகிய யோசுவா *பாளையத்தில் பாவம் இருந்ததை* அறிந்து, அதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க விசாரிப்பதெனத் தீர்மானித்தான். பிறகு, ஆகானுடைய குற்றம் கண்டுபிடிக்கப் பட்டதால் நீ எங்களை கலங்கப் பண்ணினதென்ன என்று கடிந்து கொள்ளப்பட்டான். நீ எங்களைக் கலங்கப்பண்ணின தென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப் பண்ணு வார் என்றான். (யோவான் 7:25). இது மற்றுமொரு கற்குவியலைக் கட்டுவ தற்கு ஆரம்பமாய் இருந்தது. *அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி; அவன் மேல் இந்நாள் வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இப்படியே கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டு மாறினார்; ஆகையால் அவ்விடம் இந்நாள் வரைக்கும் ஆகோர் பள்ளத்தாக்கு என்னப்படும்* (யோவான் 7:25,26).

மேற்சொல்லப்பட்ட கற்குவியல் களில் எது நம் வாழ்க்கையை சிறப்பாக விளக்குகிறது? தேவன் நம்மீது காட்டின நன்மைக்கு அவருக்கு நாம் செலுத்தும் கனம் மற்றும் மரியாதையின் மூலமாக நம் வாழ்க்கை மற்றவர்களுக்கு விசுவாசத்தைக் கட்டி எழுப்புவதாக இருக்கிறதா? மனித இனத்திற்கு அப்படிச் செய்கிறதா? தேவன் நம் இருதயங் களில் வாசமாயிருந்து, நம்மால்

போற்றப்படுகிறார் என்பதைக் காட்டு கிறதா? நம் வாழ்க்கை தேவனுடைய மகிமைக்காக நன்மை செய்யவும், சேவை செய்யவும் வாய்ப்புகள் நிறைந்த நினைவிடமாகக் காட்டப்படுகிறதாக இருக்கிறதா? நம் வாழ்க்கை என்னும் நினைவகத்தைப்பார்த்து கடந்து செல்லும் மக்கள், இவர் என்னவெல்லாம் செய்திருக்கக்கூடும் என்று உணர்ந்து சோகத்தில் தங்கள் தலைகளை அசைப்பார்களா அல்லது அவர்கள் நம்மில் பார்த்தவைகளினால் தேவனுடைய மகத்துவங்களைப் போற்றுவார்களா? பிரியமான நண்பரே, உங்கள் வாழ்க்கையின் நோக்கம், மதிக்கப்படத்தக்க ஒன்றாக இருக்க வேண்டும், பிரச்சனைக்குரியதாக இருக்கக்கூடாது; அது ஒரு ஈவாக இருக்க வேண்டும்; கல்லறையாக இருக்கக் கூடாது. அது போல, இரக்கத்தை தவறாகப் பயன்படுத்தியதாக இல்லாமல் வல்லமையின் நினைவிடமாக இருக்க வேண்டும். ❖

## வசனம் தரும் ஆறுதல்

**நீங்கள்** ஆவிக்குரிய போராட்டம் கடுமையாக இருக்கிறதே என்று நினைத்தால் **சங்கீதம் 27** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** ஆவிக்குரிய காரியங்களில் குறைவுள்ளவர்கள் என உணர்ந்தால் **ரோமர் 8** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** மற்றவர்களிடத்தில் காட்டும் அன்பிலும், தேவனிடத்தில் காட்டும் அன்பிலும் பெலவீனமாக இருந்தால் **I கொரி. 13** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** தேவனுடைய பிரமாணத்தைப் பற்றிய அறிவில் குறைவுள்ளவர்களாக இருந்தால் **யாத்திராகமம் 20; மத். 23:34–40** பகுதிகளைத் தியானியுங்கள்.

**நீங்கள்** மன்னிக்க சிரமப்பட்டாலோ அல்லது மன்னிப்பைத் தேட சிரமப்பட்டாலோ **(சங். 32:51; மத்தேயு 18** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** நித்திய ஜீவனில் நாட்டம் கொண்டால் **யோவான் 3:1–18** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** பரலோக தரிசனத்தை வாஞ்சிக்கிறவர்களாக இருந்தால் வெளி. 21,22 அதிகாரங்களைத் தியானியுங்கள்.

**நீங்கள்** உற்சாகம் இழக்கும் போது, **ஏசாயா 40** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** சந்தேகத்தில் இருக்கும் போது அல்லது விசுவாசக் குறைச்சலில் இருக்கும்போது **எபி. 11,12** ஐ தியானியுங்கள்.

**நீங்கள்** உங்கள் எதிராளிகளால் களைப்படையும் போது **சங். 37:1–7** ஐ தியானியுங்கள்.

# கிறிஸ்தவன் வித்தியாசமாக இருக்க வேண்டும்

# The Christian Is To Be Different

*Max Patterson*

நம் பிரசங்கியார்களும், போதர்களும் கிறிஸ்தவர்கள் உலகத்தின் மக்களிடமிருந்து வித்தியாசப்பட வேண்டும் என வலியுறுத்தி ஒரு காலத்தில் போதித்து வந்தார்கள். அதற்காக, அநேக வசனப் பகுதிகள், 2 கொரி. 6:14,18 வசனங்கள் உட்பட, மேற்கோள்காட்டப்பட்டன; *ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்* என்று கர்த்தர் சொல்லுகிறார்....

இன்று சபையில் ஒரு சாரார் நாம் வித்தியாசமாயிருக்க வேண்டியதில்லை, நாம் மக்களோடு கலந்திருக்க வேண்டும், நம் நோக்கத்திலோ, செயல்பாட்டிலோ வேறுபட்டிருக்க வேண்டியதில்லை என்று சொல்கிறார்கள். இது முற்றிலும் தவறானதென்றும், வேதாகமம் போதிக்கிறவைகளுக்கெல்லாம் நேர் எதிரானது என்றும் நான் நம்புகிறேன். கீழ்க்காணும் காரியங்களைச் சிந்தியுங்கள்.

## நம் மொழி

இவ்வுலகமானது கர்த்தருடைய நாமத்தை வீணில் வழங்கி அசிங்கமான காமக்கதைகளையும், வம்பளப்புகளையும், அவதூறான காரியங்களையும் பேசும்போது, ஒரு கிறிஸ்தவன் இவை எல்லாவற்றிலுமிருந்தும் விலகி தன்னுடைய நாவை தேவனை மகிமைப்படுத்துவதற்கென்றும், மக்களை பக்தி விருத்தி அடையச் செய்வதற்கென்றும் பயன்படுத்த வேண்டும் (மத். 12:36,37; ரோ. 1:29, 30; 1 தீமோ. 4:12).

## நாம் எங்கே போகிறோம்

இவ்வுலகமானது மதுபானக் கடையிலும், நடனக் கூடத்திலும், சூதாட்ட மையங்களிலும், விலைமாதுகள் இருக்குமிடத்திலும் இருக்கும் போது, (இந்நாட்களில் இவைகள் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது). ஒரு கிறிஸ்தவன் நல்மாதிரி பற்றியும், நல்லொழுக்கம் பற்றியும் அக்கறை உடையவனாக இருக்க வேண்டும். (1தீமோ. 4:12; 5:24; 6:11,12).

## நாம் எப்படி உடை உடுத்துகிறோம்

இவ்வுலகமானது எவ்வளவு குறைவான ஆடைகளை உடுத்த முடியும் என்று பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒரு கிறிஸ்தவன் எல்லா வேளையிலும் தகுதியான வஸ்திரத்தைப் பற்றி அக்கறை உடையவனாகவும், இச்சை மற்றும் நிர்வாணத்தின் அவமானத்தைப் பற்றி வேதாகமம் எவைகளை வலியுறுத்துகிறது

என்பதையும் அறிந்திருக்க வேண்டும் (1தீமோ. 2:9,10; வெளி. 3:18).

## வாழ்க்கையின் தூய்மை பற்றி

உலகமானது தன் பாவங்களை மறைக்க பல சம்பவங்களில் கருக் கலைப்பை நாடுகிறது. ஒரு கிறிஸ்தவன் கொலைக்கு விரோதமாகவும், இயற்கையான பாசம் மற்றும் தூய்மை யான வாழ்க்கைக்காகவும் நிற்க வேண்டும் (2 தீமோ. 3:1-5; 1 கொரி. 6:19,20; ரோமர் 13:9).

## நம் சிந்தை

உலகமானது தன் மனதை இச்சை, விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம் போன்றவைகளால் நிரப்பும் போது, கிறிஸ்தவன் ஒழுக்கமுள்ள வைகள் எவைகளோ, நீதியுள்ளவை களெவைகளோ, கற்புள்ளவைகளெ வைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்க முயற்சிக்க வேண்டும். (பிலி. 4:8).

## எது அதிக முக்கியமானது

உலகமானது சுயத்தை முக்கிய மாகக் கருதி, அது திருப்தியானால் போது மென்று கருதும் வேளையில், ஒரு கிறிஸ்தவன் முதலாவது கிறிஸ்துவின் ராஜ்யத்தையும், அவருடைய நீதியை யும் தேட முயற்சிக்க வேண்டும். (மத். 6:33).

## நம் இல்லங்கள்

உலகமானது வீட்டைத் தாக்கு தலுக்குள்ளாக்கி அதை இடித்துப்போடு வதற்கு கற்பனை செய்யக்கூடிய அழுத்தத்தை அதன் மேல் கொண்டு வந்தாலும், கிறிஸ்தவர்கள் அதை தெய்வீக அமைப்பாகவும், மனிதனு டைய சந்தோஷத்திற்காக, மனிதனு டைய தேவையை சந்திப்பதற்கான தேவனுடைய திட்டத்தின் அங்கமாக வும் வைத்துக்கொள்ள வேண்டும். (மத். 19:1-9; எபே. 5:23-28).

## நம் நற்கிரியை

உலகமானது தன்னைப் பற்றி யே சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, கிறிஸ்தவர்கள் மற்றவர்களின் தேவை பற்றியும் அக்கறை உடையவர்களாக இருக்கவேண்டும். (யாக். 1:26, 27).

## நம் ஆராதனை

உலகமானது இவ்வுலகக் கவர்ச்சியாலும், இவ்வுலகக் கடவுள் களாலும், ஈர்க்கப்பட்டிருக்கும் போது கிறிஸ்தவர்கள் மெய்யான தேவனை ஆராதிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (யோவான் 4:24; மத். 4:8,11).

கிறிஸ்தவர்கள் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்கிற கருத்தை நிரூபிக்க வேறு ஏதாவது சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறதா? நாம் கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கிற கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய தன்மையின் ஆழமின்மையைக் காட்டுகிறார்கள். வெட்கப்படாத கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அவர்களுக்குப் போதுமான விசுவாசமில்லை. பவுல் இவ்விதமாக வெளிப்படுத்தினார். *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் என்று* (ரோமர் 1:16).

நாம் வித்தியாசமாயிருக்கத் துணிவோம்! இயேசு கிறிஸ்து எதற்காக மரித்தாரோ அதற்காக நாம் வித்தியாச மாயிருக்கத் துணிவோம். ❖



# பிரதிபலிப்புகள்

# REFLECTIONS

*Joe C. Magee*

*உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரதத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச்*

*செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லி யிருக்கிறார்கள் (அப். 17:24.28).*

நம் வருங்கால நலனையும், பின்வரும் சந்ததியாரின் வருங்காலத் தையும் அச்சுறுத்துகிற அபாயம் ஒன்று இருக்கிறது. அது இன வேறுபாட்டு உணர்வாகும். இன வேறுபாடு என்பது சமுதாயத்தில் உண்மையாயிருக் கிறது. அதை நம்மால் மாற்ற முடியாது இந்த உண்மையைக் குறித்து உணர் வுள்ளவர்களாயிருந்தால் நாம் மற்றவர் களைப் புண்படுத்தாதபடி இன வேறு பாடுகளைக் களைந்து ஒரு பலமான ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்ட ஏதுவாயிருக்கும்.

சமீபத்தில் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது. அதில் கலப்பு இனத்தினால் உண்டாகும் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அங்கே விவாதித்த வர்களில் சிலர் ஒருவருடைய இரத்த நாளங்களில் ஒரு சொட்டு கருநிற இரத்தம் இருந்தாலும் கூட அவர் தன்னை கறுப்பு இனத்தைச் சேர்ந்த வராக எண்ணிக் கொண்டு அதைக் குறித்து பெருமைப்பட வேண்டும். இன்னும் சிலர், தங்கள் கலப்பின பின்னணியை மறைக்கும் முயற்சியில் வேறு வழியில்லாமல் தாங்கள் முற்றி லும் வெள்ளை இனத்தவர்கள் போல் பாசாங்கு செய்தார்கள். அந்த விவாதத் தில் ஓர் இளைஞன் மற்றெல்லாரையும் விட ஞானமாக நடந்து கொண்டான். ஏனென்றால், இன அடிப்படையில் தான் யார் என்பது முக்கியமல்ல என்று அவன் பதிலளித்தான்.

இன உணர்வு, ஜாதி உணர்வு சம்மந்தமான இந்த மனப்பான்மை கர்த்தருடைய சபையிலும் நிலவுகிறது என்பது வேதனையான, வெட்கக் கேடான உண்மை. இதை எப்பாடு பட்டாவது கிறிஸ்தவர்கள் மத்தியிலி ருந்து நீக்கப்பட வேண்டும். *தேவன், நம்மை வெவ்வேறு இனத்தவராக உண்டாக்கின போதும்* நாமெல் லோரும் அவருடைய சிருஷ்டிகளாய் இருந்து அவருடைய பிரமாணங் களுக்குக் கட்டுப்பட்டு, அவருடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளுகிறவர் களாயிருக்கிறோம் என்கிற உண்மை யை நாம் எப்போது உணர்ந்து கொள்ளப்போகிறோம்? நாம் ஒருவரை எவ்விதத் தீர்மானமுமின்றி அவருடைய தோல் நிறத்தை வைத்தோ, கண்களின் தோற்றத்தை வைத்தோ, பேச்சு வழக்கை வைத்தோ முடிவெடுக் கக்கூடாது. அவ்விதமாகப் பார்க்கவும் கூடாது. அப்படி நாம் பார்க்கும் போது தேவன் அந்த நபரைப் பார்ப்பது போல நாம் பார்க்கவில்லை என்றே பொருள் படும். ஜாதியின் காரணமாக, நாம் பாதுகாப்பு மனப்பான்மையை கை யாளும் போது, அது எதுவாக இருந்தா லும் சரி, தேவன் நம்மைப் பார்ப்பது போல் நாம் நம்மைப் பார்ப்பதில்லை.

*கிறிஸ்தவர்கள் தேவனுடைய மனதைப் பிரதிபலிக்கும் ஒரு பகுதி இருக்கிறதென்றால், அது நிச்சயமாக இன உணர்வுப் பகுதிதான். அநேகர் தேவனுக்கு முன்பாகத் தங்கள் தவறை நியாயப்படுத்துவதற்கு உறுதியில்லாத சாக்குபோக்குகளைச் சொல்வார்களோ என நான் பயப்படுகிறேன்.* ❖



# அவதூறு பேசுதல்

## Slander

*Royce Frederick*

*" என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள்". சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.... நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; " உங்களை நிந்திக்கிறவர்களுக்காக வும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் "* (மத். 5:11,12,44).

### ஒருபோதும் மற்றவர்களை அவதூறு செய்யாதிருப்போம்

அவதூறு என்பது பிசாசின் கருவியாயிருக்கிறது (வெளி. 12:10). கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான் (நீதி. 16:28; 17:19). அது தேவனுடைய கோபத்தை வருவிக்கிறது நீதி. 6:19. அது இரண்டு ஏற்பாடுகளிலும் பாவமாக முத்திரையிடப்பட்டிருக்கிறது (யாக். 21:3; லேவி. 19:16; ரோமர் 1:29,30; யாக். 4:11). இதை நம் வாழ்க்கையிலிருந்து களைந்து போட வேண்டும் (எபே. 4:31). *நாம் ஒருவரையும் தூஷிக்கக்கூடாது என்று வாசிக்கிறோம்* (தீத்து. 3:2). நாம் பேசும் வார்த்தைகளைக் குறித்து நாமெல்லாரும் கணக்கொப்புவிக்க வேண்டும் (மத். 12:36). நாம் அவசர கோலத்தில் எந்த முடிவையும் எடுக்கக்கூடாது. அதுபோல நமக்கு நிச்சயமில்லாத காரியங்களைக் குறித்து நாம் எதையும் சொல்லக்கூடாது.

### நாம் நம் நாவுகளை ஜாக்கிரதையுடன் வழி நடத்த வேண்டும்

நாம் பேசுவதற்கு முன்பு நமக்கு நாமே இவ்விதமாக கேட்டுக் கொள்ள வேண்டும்; அது உண்மையா? அது உதவியாயிருக்கிறதா? அது தேவையா? நாம்

எல்லாவற்றிலும் தங்க விதியைப் பின்பற்ற வேண்டும். மற்றவர்கள் என்னைப் பற்றி இவ்விதமாகப் பேசுவதை நான் விரும்புவேனா? *ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்* (மத். 7:12). *நம் சகோதரன் நமக்கு விரோதமாகப் பாவம் செய்தால் அவரை இரட்சிக்கும்படியாக அவரிடம் தனியாகப் போய் பேசலாம். அந்தப் பேச்சு அவரை அவமானப்படுத்துவதற் காக இருக்கக்கூடாது* (மத். 18:15,17).

## நாம் அவதூறுக்குச் செவி சாய்க்காதிருப்போம்

தீயகதைகள் பசியுள்ள காதுகளைத் தேடுகிறது. *விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள் சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்* (நீதி. 26:20). *அவதூறு செய்கிறவர்கள் அவதூறைப் பரப்புவதற்கு நம் காதுகளையும், நாவு களையும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது. மற்றவர்கள் செய்யும் பாவங் களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்* (1 தீமோ. 5:22). அன்பு சகோதரர்களை ஆதரித்து அவர்களுடைய நடக்கைகள் குறித்து சிறந்த தையே நம்புகிறது (1 கொரி. 13:47). *எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்* (2பேதுரு 4:8).

## அவதூறு காரணமாக நாம் சோர்வடையாதிருப்போம்

நாம் நன்மை செய்ய முயற்சிக்கும்வரை உலகமானது நம்மை வினோத மானவர்கள் என்றெண்ணி நம்மைப் பற்றி தீமையான காரியங்களைப் பேசும் (1பேதுரு 4:4; யோ. 15:18:20; 2 தீமோ. 3:12). ஒருவர் உங்களுக்கு விரோதமாகப் பேசினால், நீங்கள் யோபு, யோசேப்பு, மோசே, எரேமியா, ஸ்தேவான் மற்றும் பவுல் போன்றோரிடம் நீங்கள் சரியான உறவு வைத்துக் கொள்கிறீர்கள் என்று பொருள் (யோபு 1:9,11:4:3; ஆதி. 39:14,18; எண். 16:3,13). எரே 18:18, யோ. 5:18; 8:48,50; 10:20; அப். 6:11,13; ரோ. 3:8; 2 கொரி. 6:8).

நாம் அவதூறு செய்பவர்களை நேசித்து, அவர்களுக்காக ஜெபித்து, அவர் களுக்கு நன்மை செய்து அவர்களை மன்னிக்க வேண்டும் (மத். 5:44; மத். 18-15; ரோமர் 18:14, 17-21; 1 கொரி. 4:10,13) அவர்களுக்கும் ஆத்துமா இருக்கிறது. கர்த்தர் நிமித்தம் நாம் தவறான குற்றச்சாட்டுகளைச் சகித்தால் பரலோகத்தில் நமக்குப் பலன் காத்திருக்கிறது என்பதை நினைவுகூருங்கள் (மத். 5:11,10; 1 பேதுரு 4:14).

*நாம் சரியான வாழ்க்கை வாழ்ந்தால்* மற்றவர்கள் நம்மைப் பற்றிய அவதூறை நம்பமாட்டார்கள். *நாம் விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண் டாக்க வேண்டாம்* (1 தீமோத். 5:14). *கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயி ருங்கள்* (2 பேதுரு 3:16). *பிரியமானவர்களே, அந்நியர்களும், பரதேசிகளுமாயிருக் கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள்.* ❖



# யாருக்கு உபயோகமானது?

## *Useful To Whom?*

*Jeril (Polly) Cline*

உபயோகமாயிருக்க வேண்டுமென்னும் ஆசை உலகளாவியது. சிறுபிள்ளை முதல் எண்பது வயது முதியவர் வரை நேர் விகிதாச்சாரத்தில் ஒவ்வொருவரும் பயன்பட வேண்டும் என்பது வாழ்க்கையின் அர்த்தமாயிருக்கிறது. இது இப்படியிருக்கிறபடியால், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், கறுப்பாக இருந்தாலும், வெள்ளையாக இருந்தாலும் அல்லது இளமைக்கும், முதுமைக்கும் இடைப்பட்ட வயதினராக இருந்தாலும், நாம் அதிகமாக உபயோகப்பட வழிகளைத் தேடுகிறோம்.

நம் பயன்பாடு புதிய தொழிலைக் கற்றுக் கொள்ளுதல், நம் உணவு முறையில் கவனம் செலுத்துதல், இரவு நேரப் பணியை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவைகளில் வருகிறதாக உள்ளது. இப்படி அது எந்த வழியிலே வருகிறதாக இருந்தாலும், ஒவ்வொன்றும் ஏதோ ஒருவகையில் நாம் தேறுகிறோம் என்பதையும், மதிப்புள்ள ஒன்றுக்காக முயற்சிக்கிறோம் என்பதையும், நமக்கு மட்டுமல்ல, பிறருக்கும் பிரயோசனமுண்டாக மாறுகிறோம் என்று எண்ண வைக்கிறது.

நமக்கு இன்னது தேவை என்பது தேவனுக்குத் தெரியும். அதை அவர் நமக்குத் தந்திருக்கிறார். அதை எப்படி நமக்கு முழுமையாகத் தர முடியுமென்று அவருக்குத் தெரியும். ஆனால், நாம் சரியாக நடந்தால் மட்டுமே, நான் எப்படி உபயோகமாக இருக்கமுடியுமென்று கேட்க முடியும்.

தேவன் இவ்விதமாக பதிலளிக்கலாம், நீங்கள் உண்மையாகவே எனக்கு உபயோகமாயிருக்க விருப்பமா? இக்கேள்விக்கு உண்மையான இருதயம் நிச்சயமாக "ஆம்" என்று பதில் சொல்லும்.

இப்படிப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்டு தீமோத்தேயுவிற்கு, தேவன் பவுலைக் கொண்டு எழுதச் சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள்.

*"ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது. ஒரு பெரிய வீட்டிலே பொன்னும், வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவை களில் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால், ஒருவன் இவைகளை விட்டுத் தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக் கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்த மாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்"* (II தீமோத். 2:19, 21).

எஜமானுக்கு உபயோகப்படுவது சுத்திகரிப்புக்கு நேரடியாக தொடர்பு படுத்தப்படுகிறது. நாம் செய்ய வேண்டிய பங்கொன்று இருக்கிறது. பேதுரு சொன்னது போல *ஒருவர் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலக வேண்டும்* (II பேதுரு 2:11). இதை நான் உங்களுக் காகச் செய்ய முடியாது. இதை எனக்காக நீங்கள் சாதிக்க முடியாது. இதற்கு தனிப்பட்ட பொறுப்பு அவசியப்படுகிறது. யாக்கோபு இவ்விதமாகச் சொன்னார். *திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளு கிறதுமே, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியா யிருக்கிறது* (யாக். 1:27). உபயோகத்திற்கு முன்பாக சுத்திகரிப்பு வருகிறது.

தேவனுடைய சொந்த ஜனங்களை சுத்திகரிப்பது தான் இயேசு வந்ததின் மையமாக இருக்கிறது. நாம் தேவனால் உபயோகப்படுவதற்கான ஒரே வழி சுத்தி கரிப்புத்தான். கர்த்தர் இதற்காக தம்முடைய ஜீவனையே கொடுக்க வேண்டிய தாயிற்று. அவர் நம்மைச் சுத்திகரிப்பதற்கு முன்பாக நாம் நம்மை சுத்திகரிக்க வேண்டும்; *அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்* (தீத்து. 2:14).

சுத்திகரிப்பும் ஆயத்தமும் ஒன்றுக்கொன்று இருக்கும்படி கை கோர்த்துச் செல்கிறது. அவைகள் பிரிக்க முடியாதது. தேவன் என்றென்றுமாய் அவைகளை இணைத்தார்.

இவ்வுலகமானது அதிகமாக உபயோகப்படக்கூடிய இந்த முறையைப் பற்றி விளம்பரப்படுத்தப் போவதில்லை. அப்படிச் செய்து விட்டால் உலகமானது தன்னுடைய வழிமுறையைக் கொண்டு எதிர்பார்த்ததைக் கொண்டு வர முடியு வில்லையென்பதை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். உலகமானது புறம்பான மனிதனைப் பற்றித் தான் அதிகமாக அக்கறைப்படுகிறது. ஆனால், தேவனுடைய அக்கறை இருதயத்தை வெளிக்காட்டுவதற்கு ஊடுருவிச் செல்கிறது. இது ஜீவன் மற்றும் மரணம் சம்மந்தமான பிரச்சனை. நமக்கு ஜீவன் கொடுக்க அவர் மரித்தார்.

எஜமானுக்கு உபயோகமான கனமான பாத்திரமாக மாறுவதற்கு முதலில் சுத்திகரிப்பு இருக்க வேண்டும். பழைய பிரமாணத்தின் கீழ், தேவனுடைய சேவைக்கு ஒன்று கொண்டு செல்வதற்கு முன்பாக எல்லாமே சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும். யாத். 29,32 மற்றும் லேவி. 14,16 மற்றும் 18 ஆம் அதிகாரங்கள் எப்படி பலிபீடம், பலிகள், கூடாரம், ஆகாரம், உடைகள், தூபம், கடைசியாக தேவனு டைய சொந்த ஆசாரியர்கள் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது.

*"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான, ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் "* (1 பேதுரு 2:9). இங்கே புதிய உடன்படிக்கையின் கீழிருக்கும் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்று மாத்திரம் சொல்லப்படவில்லை, நமக்காக என்ன உபயோகமான வேலையை அவர் வைத்திருக்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அவர் நமக்காக செய்திருக்கும் மாபெரும் வேலையை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும், அறிவிக்க வேண்டும். இது கல்லறைகளுக்கு அடிக்கடி சென்று வந்த பிசாசுப் பிடித்திருந்த மனுஷனிடம் இயேசு சொன்ன வார்த்தைகளோடு ஒத்திருக்கிறது. இயேசு அந்த லேகியோனிடமிருந்து பிசாசுகளைத் துரத்தி இரண்டாயிரம் பன்றி களுக்குள் துரத்தி விட்டார். அதன் பின்பு, அந்த மனிதன் இயேசுவைப் பின்பற்ற விரும்பி அவரிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டான். அவனுக்கு இவ்விதமாகச் சொல்லப்பட்டது. *நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இறங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.* (மாற்கு. 5:19).

நம்முடைய சூழ்நிலை ஒருகாலத்தில் இப்படித்தான் இருந்தது. நாம் அழுக்கானவர்களாக, பரிசுத்தமில்லாதவர்களாக அந்நியர்களாக தேவனற்றவர் களாக, நம்மை நாமே சுத்திகரித்துக் கொள்ளப் பெலனற்றவர்களாக இருந்தோம் (எபே. 2:12; ரோமர் 5:6-11). ஆனால், தேவன் எல்லாவற்றையும் அறிந்திருந்தபடியால் தேவையான எல்லாவற்றையும் தந்தார்; *நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு (உபயோகமாவதற்கு) உங்கள் மனச் சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!* (எபி. 9:14).

நான் அவருக்காக, அவருடைய மகிமைக்காக வேலைச் செய்யும்படி தேவத் துவத்திலுள்ள மூவரும் எனக்காக கிரியை செய்து கொண்டிருக்கிறார்கள்! நான் ஒரு கனமுள்ள பாத்திரமாக சுத்திகரிக்கப்பட்டு எஜமானுக்கு உபயோகமுள்ள பாத்திரமாக வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறேன்! என்னை சுத்திகரிக்கும்படியாக அவர் மரித்தார். என்னுடைய பரிசுத்தத்தைத் தக்க வைத்துக் கொள்ளும்படியாக அவர் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் (தீத்து. 2:14; எபி. 7:25; 1 யோ. 1:7,9).

இப்போது, நான் எப்படி உபயோகமுள்ளவனாயிருக்கிறேன்? உண்மை யாகவே, நான் எப்படி பயன்பட விரும்புகிறேன்? நான் உலகத்தின் வழியில் உபயோகமுள்ளவனாயிருக்க முயற்சிக்கிறேனா? அல்லது தேவனுடைய வழியைக் கொண்டு அதிக உபயோகமுள்ளவனாயிருக்க முயற்சிக்கிறேனா? ❖

# பாடுவதற்கு எப்படி ஒரு நேரம்

# What a Time for a Song

***Shan Jackson***

பாடுவதற்கு எப்படி ஒரு நேரம்! *நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்* (அப். 16:25). நடுராத்திரியில் அந்த ரோம சிறைச் சாலையில், அவர்களுடைய கால்கள் தொழு மரத்தில் மாட்டி வைக்கப்பட்டிருந்தது. *அவர்கள் அநேக அடிகள் பட்டபடியால், உடல்கள் வேதனையில் தவித்தது* (வசனம் 23). இந்தக் கிறிஸ்துவின் போர்ச் சேவகர்கள் அன்புள்ள தேவனிடத்தில் தாங்கள் வைத்திருந்த விசுவாசத்தைக் காட்டினார்கள். விடிந்தால் என்ன நடக்கும் என்பதை அறியாமல் அவர்களுடைய ஊழியம் காத்திருப்பில் இருந்தது. அவர்கள் தங்கள் உதடுகளில் ஜெபத்துடனும், இருதயங்களில் பாடல்களுடனும் காணப்பட்டார்கள், *சிறையில் இருந்தவர்கள் அதைக் கேட்டார்கள்.*

பாடனுபவித்த அந்த கிறிஸ்தவர்கள் ஜெபத்தில் ஆழமாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதில் பெரிய ஆச்சரியம் ஒன்றுமில்லை. அநேக வேளைகளில் எல்லாமே நம்பிக்கையற்றதாகத் தெரியும்போது, நம் கடைசி எண்ணம் ஜெபமாயிருக்கிறது. ஆனால், பவுலும், சீலாவும் தங்கள் கடைசி எண்ணத்தின் மூலமாக வியாகுலப் படவில்லை. அப்போதும் அவர்களுடைய இருதயங்கள் *சொல்ல முடியாத மகிழ்ச்சி யினாலும், மகிமையினாலும் நிறைந்து காணப்பட்டது* (1 பேதுரு 1:8). அங்கே ஆச்சரியம் என்னவென்றால், அவர்கள் ஜெபிப்பதோடு நின்றுவிடாமல் தேவனைத் துதித்துப் பாடவும் செய்தார்கள்.

நாமும் நம் வாழ்க்கையில் உடனோ அல்லது பின்னரோ நடுராத்திரி வேளைக்கு வருகிறோம். அந்த வேளை எல்லாமே இருளாக இருக்கும்போது, எண்ணற்ற பிரச்சினைகள் நம் பாதையில் வந்து வாட்டும் போது, இருள் நம்மை பயமுறுத்தும் போது, நம் இருதயங்கள் கதறும் போது வருகிறது. அப்போது இருளும், அதைத் தொடர்ந்து வரும் விடியலும் எதைக் கொண்டு வருமோ என நாம் அச்சப் படுகிறோம். மிகுந்த வியாகுலத்தில் நாம் ஜெபிக்கிறோம். ஆனால், அப்படிப்பட்ட நேரங்களில் பாடுவதற்கு நமக்கு விசுவாசம் இருக்கிறதா?.

அவர்கள் பாடல் பாடுவதின் இரகசியம் நமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது. ஆம், தாங்கள் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிந்திருந்தார்கள். அதுமாத்திரமல்ல, தாங்கள் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயத்துமிருந் தார்கள் (2 தீமோத். 1:12). ❖



# வேலையில் அசதியாயிராமல்

# NOT SLOTHFUL IN BUSINESS

*Darrell Ramsey*

"*அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கார்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்*" (ரோமர் 12:11) இங்கே, பவுல் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு கனத்தைக் கொண்டு வரத்தக்கதான வாழ்க்கை வாழத் தேவையான சில பொதுவான புத்திமதிகளை வழங்குகிறார். கிறிஸ்தவர்களாக நாம் இந்த உலகத்திற்கு சிறந்த முன் உதாரணமாகத் திகழ வேண்டும். அதாவது, "*மலை மேலுள்ள பட்டணமாக*" விளங்க வேண்டும். நம் அனுதின நடக்கை நிந்தைக்கு நீங்கலாயிருக்க வேண்டும்.

வியாபார உலகில் கிறிஸ்தவர்கள் நேர்மையாக நடந்து கொள்வது மிக முக்கியமானது. அவர்கள் லஞ்சத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது, வருமான வரி காரியங்களில் உண்மையாயிருக்க வேண்டும், அது போல தங்கள் முதலாளிகளிடத்தில் நேர்மையாக வேலை செய்ய வேண்டும். ஓர் உண்மையான கிறிஸ்தவன் வேலையில் ஒருபோதும் சோம்பலாயிருக்க மாட்டான். கிறிஸ்தவன் நேர்மையாயிருப்பதற்கென்று சரியானதைச் செய்வதில்லை, ஆனால், அவர் நேர்மையாயிருக்கிறபடியால் சரியானதைச் செய்கிறார்!

ஒரு வேதாகமம் இவ்விதமாக மொழியாக்கம் செய்கிறது. "*களைப்படையாத ஆற்றலினால், உற்சாகமான ஆவியினால், கார்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்*". இதை நம் தினசரி மொழிநடையில் சொன்னால், சோம்பலாயிராதேயுங்கள். சோம்பேறியான வேலைக்காரன் தன் முதலாளியை ஏமாற்றுகிறான். சோம்பலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதைப் புறக்கணிக்கிறார்கள்; சோம்பலுள்ள நிலக்கிழார்கள் சொத்துக்களை நல்ல நிலையில் வைத்திருக்க அலட்சியப்படுத்துகிறார்கள். உண்மையில், சோம்பேறிகள் நல்ல கிறிஸ்தவர்களாவதில்லை, ஆனால், தங்களுக்கு வாழ்க்கை அலுத்துவிட்டதாகவும், வைராக்கியம் இல்லையென்றும், தங்களுக்கு அதைப் பற்றிக் கவலை இல்லையென்றும் உலகத்திற்குச் சொல்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிக்க வேண்டியிருப்பதால், சோம்பேறிகள் உடனிருப்பவர்களை அதிக வேலை வாங்கி விடுகிறார்கள்.

" களைப்படையாத ஆற்றலி னால், உற்சாகமான ஆவியினால், கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள் " இது பொறுப்பை ஏற்க மறுப்பவர்களிடத் தில் நேரடியாகப் பேசப்பட்ட வார்த்தை. இதை நாம் அடிக்கடி சபைகளில் காணலாம். ஒருவேளை திறமை மிக்க வேதாகம ஆசிரியர் ஒருவர் நேரம், முயற்சி ஆகியவைகளை மனதில் கொண்டு போதிக்க மறுக்கலாம். வேலைக்கு ஆயத்தமாவதை விட அதைத் தட்டிக் கழிப்பது சுலபமாகும். சோம்பேறித்தனத்தை நாம் மற்றவர் களிடத்தில் காணும் போது அது நமக்கு வெறுப்பாயிருக்கிறது. ஆனால், அதே குற்ற உணர்வு நமக்குள் இருக்கிறதா?.


சோம்பேறித்தனம் கிறிஸ்துவின் ஆவியோடு பொருத்தமில்லாத ஒன்று. பேதுரு, இயேசு நாம் பின்பற்றும்படி மாதிரியை வைத்துப் போயிருக்கிறார் என்று சொன்னார் (1 பேதுரு 2:21). கிறிஸ்து எப்போதாவது, எந்த காரணத் திற்காவது, சோம்பலாக இருந்தார் என்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இவ்விதமாகச் சொன்னார். *பகற்கால மாயிருக்கும் மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது* (யோவான் 9:4). அவர் இவ்விதமாக வும் சொன்னார். *என் பிதா இது வரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன் என்று* (யோ. 5:17).

மக்கள் சோம்பேறிகள் அல்லது சோம்பலுள்ளவர்கள் என முத்திரை குத்தப்பட அநேக குணாதிசயங்கள் உண்டு. அவர்கள் பெரும்பாலும் வருகையிலும், விருப்பத்திலும், கொடுத் தலிலும் ஒழுங்கற்றவர்களாயிருக்கி றார்கள். ஏனென்றால், தங்கள் அயலகத் தாரிடத்தில் கிறிஸ்துவைப் பற்றி சொல்வ தற்கு அதிக ஆற்றல் அவசியப்படுகிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தை யைப் படிப்பதில் குறைவான நேரத்தை யே செலவிடுகிறார்கள். அவர்கள் ஜெபத் தைப் பற்றிப் பெரிதாக ஒன்றும் கண்டு கொள்வதில்லை. பொதுவாக அவர்கள் தேவனுடைய பிரமாணங்களில் சில வற்றை விட்டுவிடுவதினால் பாவம் செய்கிறார்கள். துரதிஷ்டவசமாக, பலர் ஒரு சோம்பேறி உறுப்பினரால் ஒட்டு மொத்த சபையையும் சோம்பேறி சபை யென்று தவறாகத் தீர்த்துவிடுகிறார்கள்.

சோம்பேறிக் கிறிஸ்தவர்களின் மிகச்சிறந்த தன்மைகளில் ஒன்று ஆராதனைக்கு தாமதமாக வரும் பழக்கம் தான். அவர்களுடைய தாம தமான வருகை ஆராதிக்கிற மற்றவர் களையும், பாதிப்புக்குள்ளாக்குகிறது. இதே மக்கள் கால்பந்து போட்டியின் தொடக்கத்தைக் காணத் தவறுவ தில்லை. சோம்பேறியான மார்க்கம் செத்த மார்க்கமாயிருக்கிறது. என் சகோதரரே, *ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியை களில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந் தால் தன்னில் தானே செத்ததாயிருக் கும்* (யாக். 2:14,17). ஒவ்வொரு தாலந்தும், ஒவ்வொரு வாய்ப்பும், பொறுப்பை சுமந்து வருகிறது. *எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனி டத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்* (லூக். 12: 48). நன்மை செய்ய அறிந்தி ருந்தும் எந்த நன்மையும் செய்யாத வர்கள் நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவார்கள்.

*எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்* (கொலோ. 3:24). இது, கர்த்தருக்காகச் செய்யப்படுகிற எதுவும் மனப்பூர்வமாக செய்யப்பட வேண்டும் என்பதை எந்த ஆதாரமும் இல்லாமல் நம்பச் செய்கிறது. ❖

# தேவனுடைய கரத்தில் வைத்து விடுங்கள்



## LAY IT IN GOD'S HAND

***Betty Tucker***

பொதுவான ஆராதனையில் பின்வரும் எளிய வார்த்தைகளால் தன் ஜெபத்தை முடித்த ஒரு சீன சகோதரனை நான் நினைவுகூறுகிறேன். " நாங்கள் எல்லா வற்றையும் உங்கள் கரங்களில் வைக்கிறோம் ". நிச்சயமாக இப்படிப்பட்ட ஜெபத்தில் தேவன் பிரியப்படுகிறார் என்று நான் நினைக்கிறேன்.

இது தேவனை நாம் நம் எஜமானென்றும், இப்பிரபஞ்சத்தை ஆளுகிறவ ரென்றும் ஒத்துக்கொள்வதையே அடையாளப்படுத்துகிறது. அவர் நட்சத்திரங்களை அதன் சுற்றுப் பாதையில் நிலைத்திருக்கச் செய்யும் வல்லமை பெற்றிருப்பதால் இவ்வுலகமானது பூரணமாக இயங்கிக் கொண்டிருக்கிறது (யோபு. 26:7).

எனவே, நம்முடைய சில விவகாரங்களை அவரால் எளிதாக வழி நடத்த முடியும், ஆகவே, இறுதியில் *சகலமும் நம் நன்மைக்கேதுவாக நடக்கிறது*.... (ரோமர் 8:28). அதனால் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளினால் வியாகுலப்படுவதால் நம் நேரத்தை ஏன் செலவிட வேண்டும்?

## எல்லாவற்றையும் தேவனிடத்தில் விட்டுவிட குறிப்பான தருணங்கள்

1. நம் நண்பர்கள் நம்மைக் கைவிடும் போது அல்லது நம்மை காட்டிக் கொடுக்கும் போது நம்மை ஒருபோதும் கைவிடாத நண்பர் நமக்குண்டு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (1 சாமு. 12:22).

2. நம் தேவைகள் சந்திக்கப்பட எப்போதுமிருக்கின்ற பணப்பற்றாக்குறையால் நாம் சிரமப்படும் போது, நாம் பராமரிக்கப்பட நம்மால் தேவனை நோக்கிப் பார்க்க முடியும். காட்டு புஷ்பங்களுக்கு அவர் உடைகளை உடுத்தும்போது (லூக். 12: 27,28), அவருடைய பிள்ளைகளாகிய நம் தேவைகளை சந்திக்காமலிருப்பாரா?

3. வாழ்க்கை பரபரப்பாக மாறி சூழ்நிலைகள் நம்மை அழுத்தும் போது, *நாம் அமைதியாய் அமர்ந்திருந்து அவரே தேவனென்று அறிந்து கொள்ளலாம்.* (சங். 46:10).

4. நாம் மிக மோசமான வியாதியையோ, மரணத்தையோ எதிர்கொள்ளும் போது, நம்பிக்கையுடன் பரலோகத்தை நோக்கிப்பார்த்து நாம் மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியிலும் பாதுகாப்பாய் நடத்தப்பட நம்மை உண்டாக்கினவர் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் (சங். 23).

எரேமியா தீர்க்கதரிசி நம் பரம தகப்பனிடமிருந்து ஓர் அருமையான வாக்குத்தத்தத்தைப் பதிவு செய்திருக்கிறார். அது இன்றும் நன்றாகவே இருக்கிது. "*என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப் பேன்*" (எரே. 33:3).

1 பேதுரு 3:12யை வாசியுங்கள். அதில் அநேகமாக நாம் இரண்டாவது வாக்கியத்தை எப்படியோ தவற விட்டு விடுகிறோம் என்பது போல் தான் தெரிகிறது. ...*அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது* நீதிமான்களின் ஜெபத்தைத் தேவன் கேட்கிறார் என்பதை அறிந்து கொள்வது ஆறுதலாக இருக்கிறதல்லவா?.

இதே விதமாக தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தை ஏசா. 65:24ல் நாம் காண முடியும். இந்த வார்த்தைகளைக் கேட்ட போது அந்த வயதான தீர்க்கதரிசியின் இருதயம் எப்படியாக பரவசமடைந்திருக்கும். ....அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போது நான் கேட்பேன். தேவன் தம்முடைய ஜனங் களின் தேவைகளையும் விருப்பத்தையும் அறிந்திருக்கிறார். நாம் ஜெபித்து முடிப்ப தற்கு முன்பாகவே அவர் பதிலளிக்க ஆரம்பித்து விடுகிறார்.

## தேவன் எப்படி பதில் அளிக்கிறார்?

சில வேளைகளில் தேவன் நம் விண்ணபங்களுக்கு "ஆம்" என்று பதிலளிக் கிறார். சாலொமோன் ஞானத்தைக் கேட்டார் (2 நாளா. 1:10). தேவன் அந்த விண்ணப்பத்திற்கு பதில் அளித்து ஐசுவரியத்தையும், கனத்தையும் சாலொமோன்

மீது குவித்தார். அப்படிப்பட்ட ஞானம் அதற்கு முன்பு யாருக்குமிருந்ததில்லை. அதற்கு சமமான ஞானமும் இதுவரை யாருக்கும் கொடுக்கப்படவில்லை.

சில வேளைகளில் தேவன் நம் விண்ணப்பங்களுக்கு "இல்லை" என்று சொல்லிவிடுகிறார். பவுல் பரிசுத்தமும், தேவ பக்தியும் நிறைந்த விசுவாசியாக இருந்தார். அவர் தன் சரீரத்திலிருந்த முள்ளினிமித்தம் அதை நீக்கிப்போடும்படி தேவனிடத்தில் மூன்று முறை ஜெபித்தார் (2 கொரி. 12: 7,8). தேவன் இல்லை என்று சொன்னபோது இந்த அன்பான சிலுவையின் போர்ச் சேவகருடைய மனப்பான்மையைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுகிறோம். வசனம் 9,10ல் அவர் இவ்விதமாகச் சொல்ல நாம் கேட்கிறோம். இந்த பெலவீனங்களினால், நான் பலமுள்ளவனாக வளர்ந்தால், இன்னும் நான் பலமாக வளரும்படி, அதிகமான முட்களை எனக்குத்தாரும். உங்கள் விசுவாசம் நிரூபிக்கப்படும்படி, அதிகமான சோதனைகளுக்காக, உபத்திரவங்களுக்காக எப்போது ஜெபித்தீர்கள்?.

அதன் பின்பு, தேவன் "காத்திரு" என்று சொல்லும் நேரங்களுமுண்டு. வழக்கமாக நம் மனதுக்குள் வரும் முதல் உதாரணம் மோசே தான். மோசே வாலிபனாக இருந்த போதே ஜனங்களை எகிப்திலிருந்து விடுவிக்க விரும்பினார். தேவனுடைய பராமரிப்பு மூலமாக, அவர் மலைகளுக்கு ஓடும்படி நிர்பந்திக்கப் பட்டார். அங்கே அவர் ஆடுகளை மேய்த்துக் கொண்டு இடையனுடைய ஏகாந்த வாழ்க்கை வாழ்ந்தார். மோசேக்கு இன்னும் வயதாக வேண்டும், அவர் இன்னும் வளர வேண்டும், கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை தேவன் அறிந்திருந்தார். ஒரு நாள் தேவன் எரிகிற முட்செடியிலிருந்து மோசேயிடம் பேசினார். பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்களை வழிநடத்த இந்த வயதான மேய்ப்பனுக்கு சரியான நேரம் வந்து விட்டது. மோசே நாற்பது வருஷம் காத்திருந்தார், இப்போது ஆயத்தமாகிவிட்டார்!

வேதாகமத்தில் நாம் அதிகமாக ஜெபத்தைப் பற்றி கற்றுக் கொள்ளுகிறோம். 1தெச. 5:17ல் *இடைவிடாமல் நாம் ஜெபிக்க வேண்டுமென்று* புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம். நாம் விரும்பும்போதெல்லாம் தேவனுடைய சிங்காசனத்தைக் கிட்டிச் சேரும் சிலாக்கியம் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட அருமையான காரியமாகும்.

உங்கள் சொந்த ஜீவியத்திலே பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் சம்மந்தமாக அநேக உதாரணங்களை மேற்கோள் காட்ட முடியும். நீங்கள் விண்ணப்பம் *பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை* என்று யாக்கோபு சொல்கிறார் (யாக். 4:2).

இந்த பரபரப்பான இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது மிகவும் சுலபமான அணுகுமுறையாக இருக்கிறது. ஆனால், நம் தேவைகள் சந்திக்கப்பட தேவனிடத்தில் ஊக்கமாக ஜெபிக்க அந்த சீன சகோதரனிடமிருந்து கற்றுக் கொண்டு, அதன் பிறகு எல்லாவற்றையும் அவருடைய கரங்களில் வைத்துவிடலாம். அப்போது நம் பாரங்கள் நீக்கப்பட்டு, நம் காயங்கள் ஆற்றப்படும்.

❖

# ஏலியின் குமாரர்கள்

## ELI'S SONS

*Owen Cosgrove*

இஸ்ரவேலின் பதினான்காம் நியாயாதிபதியாகிய ஏலி ஒரு மிகச் சிறந்த தேசியத் தலைவர். ஆனால், அவருடைய குமாரர்கள் சொல்லமுடியாத அளவுக்கு ஒழுக்கக் கேடானவர்களும், துன்மார்க்கமானவர்களுமாயிருந்தார்கள். 1 சாமு. 2:22,36 வசனங்கள், அவர்கள் தேவனுடைய வழிகளை எப்படி அவமதித்தார்கள் என்றும், நீதியுள்ள தேவன் அவர்கள் மீதும், அவர்கள் சந்ததியார் மீதும் சாபத்தை எப்படி ஒட்டுமொத்தமாக வைத்தார் என்பதையும் பற்றிச் சொல்கிறது.

கடைசியாக தேவன் சாமுவேலிடம் இவ்விதமாகச் சொன்னார். *அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்* (1 சாமு. 3:13) என்று.

எனக்கு 22 வயது இருக்கும்போது, “வாலிபப் பிள்ளைகள் மற்றும் அவர்களை வளர்க்கும் விதம்” என்பது பற்றி ஒரு தொடர் பிரசங்கம் செய்யும்படி ஒரு சபையில் என்னை அழைத்தார்கள்.

ஆனால், பெற்றோர்களே நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லப் போகிறேன், கர்த்தருடைய வார்த்தை அதை ஆதரிக்கும் என்று நம்புகிறேன். பிள்ளைகள் உங்களுக்குச் செவி கொடுக்க நீங்கள் அவர்களுக்குப் போதித்தால் நலமாயிருக்கும். இல்லையென்றால் அவர்களுக்கு கடினமான வாழ்க்கை காத்திருக்கிறது. நீங்கள் இக்காரியத்தைச் சீக்கிரமாகவே துவங்கி அவர்களிடம் அன்பாகவும், நியாயமாக வும் இருந்தால் நலமாயிருக்கும்; ஆனால், “வேண்டாம்” என்பது பற்றி அவர் களுக்குப் போதிப்பதில் ஒரே மாதிரியாக இருங்கள்.

அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பயப்படுகிறார்கள், அவர்கள் பிள்ளைகளிடத்தில் “இல்லை” என்று சொன்னால் அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதாலும் மகிழ்ச்சியாக இருக்கமாட்டார்கள் என்பதாலும், தங்களை மன்னிக்க மாட்டார்கள் என்பதாலும் பயப்படுகிறார்கள்.

ஆனால், அதிகமாக செல்லம் கொடுக்கப்பட்டு சிரமப்படுத்தப்படாமல் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தான் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள். சில குழந்தைகள் தொடர்ச்சியாக உட்காரவும், அமைதியாகயிருக்கவும், மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடாமலிருக்கும்படியும் சட்டத் திட்டங்களுக்கு கீழ்ப்படியும்படியும் போதிக்கப்படுவதில்லை. பிள்ளைகள் தங்கள் விருப்பம் போல் நடக்க அனுமதிக்கும் பெற்றோர்கள், அவர்களை காட்டுமிரண்டித்தனமாக நடக்க அனுமதிக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களைக் கட்டுப்படுத்த முயல்பவர்களை எதிர்க்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்களை பெரும் பிரச்சினைக்குத் தயார்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பது நிச்சயம்.

எபிரெய ஆசிரியர் நம்மை நேசித்து, நம்மை சிட்சித்த பெற்றோர்களை நாம் கனப்படுத்துவதைப் பற்றிப் பேசுகிறார் (எபி. 12:4,13). பள்ளிக் கூடத்தில் எனக்குப் பிடித்தமான ஆசிரியர்கள் தான் நாங்கள் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், இன்னும் அநேகக் காரியங்களையும் கற்றுக்கொடுத்தார்கள். அவர்கள் நம்முடன் விளையாடுபவர்களாகவோ, நம் நண்பர்களாகவோ இருக்க முயற்சி செய்ததில்லை. அவர்கள் நமக்கு எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும், எப்படி வாழ வேண்டுமென்றும் நமக்குப் போதிக்க முயற்சி செய்தார்கள்.

*சில குழந்தைகள் பிறந்த சில வாரங்களுக்குள்,* மாதங்களுக்குள் மற்றவர்களைக் கட்டுப்படுத்துகிறவர்களாகி விடுகிறார்கள், குழந்தைகளின் பெற்றோர்கள் அவர்களைத் தடுத்துத் திருப்ப பயப்படுகிறார்கள். இறுதியாக, அதன் சோககரமான முடிவு எல்லோருக்கும் துக்கத்தை ஏற்படுத்தும். இதன்மூலம், “அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்கவில்லை”. என்ற வார்த்தை அடிக்கடி நம் மனதிற்குள் வந்து போகும். ❖

## பிள்ளை வளர்ப்பு



பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி. 22:6).

பிள்ளையைத் தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் தான் அவன் சாகான். (நீதி. 23:13)



# ஒரு பெண்ணின் மதிப்பு...
# அவளுடைய இல்லத்தின் உபசரிப்பில்

## THE WORTH OF A WOMEN...
## IN THE HOSPITALITY OF HER HOME

***Betty Burton Choate***

*அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு.* (எபி. 13:2). வரலாறு முழுவதுமாக, உபரிசப்பு என்பது கனம் மற்றும் தன்னலமற்ற தன்மையின் அடையாளமாகக் கருதப்பட்டு வருகிறது.

ஒரு நாள் ஆபிரகாமின் கூடாரத்தின் வழியாய் மூன்று மனிதர்கள் கடந்து சென்றார்கள். அவர்களைச் சந்திக்க ஆபிரகாம் ஓடிப்போய் அவர்களிடம் தன் மரத்தின் நிழலில் தங்கி இளைப்பாறும்படி கெஞ்சினான். அதன் பின்பு, சாராளிடம் அவர்களுக்குச் சீக்கிரமாய் அப்பம் தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டான். அவரே மந்தைக்கு ஓடிப்போய், ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, வேலைக்காரன் கையிலே கொடுத்தான். அவன் அதை உரித்து, சுத்தம் செய்து, சீக்கிரமாய் சமைத்தான். ஆபிரகாம் வெண்ணெயையும், பாலையும், சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைத்து அந்த மனிதர்கள் சாப்பிடும் போது அவர்கள் அருகே அந்த மரத்தடியில் நின்று கொண்டிருந்தான் (ஆதி. 18).

அந்த முக்கியமான நாளில், ஆபிரகாம் மனுஷர் தோற்றத்தில் வந்த கர்த்தருக்கும், தேவதூதர்களுக்கும் விருந்து உபசரிப்பவராக இருந்தார் (ஆதி. 18:13; 19:1). வெகு நாட்களுக்கு முன்பு ஆபிரகாமும், சாராளும் பெற்றிருந்த அதே உபசரிப்பின் இருதயத்தை கிறிஸ்தவர்களும் பெற்றிருக்க வேண்டுமென்று புதிய ஏற்பாட்டில் எபிரெய எழுத்தாளர் கிறிஸ்தவர்களை வலியுறுத்தினார்.

*மற்றுமொரு சூழ்நிலையில் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலிசா, சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிற போதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்; அவள் தன் புருஷனை நோக்கி: இதோ நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மேல் வீட்டில் ஒரு சிறிய அறை வீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்து விளக்கையும்*

*வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும் போது அங்கே தங்கலாம் என்றாள் (2 இராஜ. 4:8,10).* வேலை முடிந்தது. எப்போதெல்லாம் எலிசாவும் அவனுடைய வேலைக்காரனாகிய கேயாசியும் அந்த வழியாக வந்தார்களோ அப்போதெல் லாம் அந்த மேல் அறையில் தங்குவார்கள்.

ஒரு தீர்க்கதரிசியாக எலிசாவின் வாழ்க்கை எளிதாக இருக்கவில்லை. சூனேமியாள் எலிசாவின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்படவில்லை என்பதை கவனித்தாள். அவ்வப்பொழுது பாகாலின் ஆசாரியர்களிடமிருந்தும், இஸ்ரவேலின் அரசியல் எதிரிகளிடமிருந்தும் எலிசாவின் உயிருக்கு ஆபத்து வந்ததை அவள் அநேகமாக அறிந்திருக்கலாம். இது 2 ராஜா 6:1,23ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதே அதிகாரத்தில் சீரியாவின் ராஜா எலிசாவைக் கொல்ல திட்டமிட்டான்.

ஆனால், சூனேமியாள் அன்பான இருதயம் எலிசாவின் கஷ்டத்தை இலகுவாக்க அசைந்தது. எலிசா அந்த வழியாக கடந்து வருகிறபோதெல்லாம் அவருக்கு ஆகாரம் செய்து கொடுத்து, அவருடைய வசதிக்காக தட்டு முட்டு சாமான்களையெல்லாம் வாங்கிக் கொடுத்து தன்னுடைய உபசரிப்பை வெளிப் படுத்தியிருக்கிறாள்.

இந்த சூனேமியாள் தேவ பக்தியுள்ளவளாகவும், உபசரிக்கிறவளாகவும் மாத்திரம் இருக்கவில்லை. ஆவியினால் ஏவப்பட்டு ராஜாக்கள் புத்தகத்தின் ஆசிரியர் அவளை கனம் பொருந்திய ஸ்திரீ என்று குறிப்பிடுகிறார். என்ன ஒரு பாராட்டு! அவைகள் நற்பண்புகளுடன் கூடிய ஒரு நபரைப் பற்றி விவரிக்கிறது. இன்று தேவனுடைய குடும்பத்தில் இப்படிப்பட்ட பெண்களை நாம் வளர்க்க வேண்டும்.

அந்த சூனேமியாளிடமிருந்து நாம் வேறெதை கற்றுக் கொள்கிறோம்? அவள் தாழ்மையுள்ளவளாக இருக்கிறாள். அவள் செய்த உதவிகளுக்கு கைமாறாக தான் செய்ய வேண்டியதென்ன என்று எலிசா தன் வேலைக்காரனை அனுப்பி, அவளை அழைப்பித்த போது, எலிசாவின் அறைக்குள் நுழையத் துணியவில்லை. மாறாக, மிகுந்த தாழ்மையுடன் வசாற்படியிலே நின்றிருக்கிறாள். அவளுடைய குணாதி சயத்தில் எவ்வளவு தாழ்மையையும், ஞானத்தையும் நாம் காண்கிறோம்.

இங்கே நாம் இந்த பெண்ணுக்கு தேவன் பேரில் இருந்த நம்பிக்கை யையும், தேவனுடைய மனிதனாகிய எலிசாவின் வல்லமையின் பேரிலிருந்த நம்பிக்கையையும் காணலாம். எலிசாவின் தீர்க்கதரிசனத்தின்படியே அந்தப் பெண்ணுக்கு ஒரு மகன் பிறந்தான் (2 ராஜா 4:17). ஆனால், அவன் திடீரென வியாதிப்பட்டு மரித்துப்போனான். அப்போது அந்த சூனேமிய ஸ்திரீ என்ன செய்தாள்? தனக்கு நேர்ந்த சோக சம்பவத்தைக் குறித்து அழுது புலம்பி, துக்கித்துக் கொண்டிருந்தாளா? இல்லை. அவளுடைய கணவன் கூட தேவனு டைய மனுஷனை எதிர்பாராத பயணத்தினால் சந்திக்க வேண்டியதென்ன என்று கேட்டபோது, *எல்லாம் சரிதான்* என்று மிக எளிய முறையில் பதிலளித்தாள் (2 ராஜா 4:23). அவள் ஒரு மாபெரும் விசுவாசமுடைய ஸ்திரீயாக இருந்தாள்.

இன்று கிறிஸ்தவ ஸ்திரீகளுக்குள் தேவ பக்தியுள்ள வாழ்க்கையின் வல்லமை நம்மைச் சுற்றிலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். மற்றவர்கள் நம்மில் கனம் பொருந்திய தன்மை, உபசரிப்பு, சுயநலமற்றத் தன்மை, தாழ்மை, விசுவாசம் போன்ற தன்மைகளைக் கண்டால் தேவனுடைய வழிக்கு இழுக்கப் படுவார்கள்.

## கிறிஸ்தவ இல்லம்

# தேவனில்லாமல் வளருதல்

# GROWING UP WITHOUT GOD

*Charles E. Cobb*

இந்தக் கட்டுரையில் புள்ளி விவரங்களை குவியல்களாகத் தருவது எங்கள் நோக்கமல்ல. அப்படித் தருவது பிரயோஜனமானதாக இருந்தாலும் கூட அது எங்கள் நோக்கமல்ல. மாறாக, தேவன் இல்லாமல் வளருகிறவர்களைப் பற்றி வாசகர்களுக்கு சில ஆலோசனைகளை முன் வைக்கிறேன்.

தேவனை நோக்கிய ஆழ்ந்த மரியாதை தான் இவ்வுலகை ஸ்திரப்படுத்தும் மிகப்பெரிய சக்தியாக உள்ளது. தெருக்களில் புகைபிடித்துக் கொண்டு, மதுபானம் குடித்துக் கொண்டு, ஆயுதங்களையும், கத்திகளையும், துப்பாக்கிகளையும் பிடித்துக் கொண்டு சுற்றித் திரியும் இளைஞர்களைப் பார்க்கும் போது என்ன ஓர் அவமானம், பரிதாபம்! அவர்களுக்கு தேவனைப் பற்றி குறைவாகத்தான் தெரியும் அல்லது எதுவுமே தெரியாது. அவர்களுடைய வாழ்க்கை முற்றிலும் ஒழுங்கற்ற நிலையில் இருக்கிறது. அவர்கள் வறுமையில் வாழ்கிறார்கள். அவர்கள் பணக்காரர்களையும், நன்றாய் இருப்பவர்களையும் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். அவர்கள் பாலியல் சம்மந்தமான காரியங்களைக் கற்றுக் கொண்டு தங்கள் பொறுப்புகளைப் பற்றி யோசிப்பதற்கு முன்பாகவே அதை நடைமுறைப் படுத்துகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் பள்ளிக்கூடத்திற்கு வற்புறுத்தலினாலேயே செல்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பான பாலுறவு வைத்துக் கொள்வது எப்படி என்று கற்றுக்கொடுக்கப் படுகிறது. ஆனால், ஒழுக்கத்தைப் பற்றியோ, தேவனைப் பற்றியோ, கட்டுப்பாடுகள் பற்றியோ எதுவுமே கற்றுத்தரப்படுவதில்லை.

பள்ளிக் கூடங்கள் அசுத்தம், காமத்தைத் தூண்டும் பேச்சு, வன்முறை, திருட்டு, ஏமாற்று, புண்படுத் தும் வம்பளப்பு மற்றும் அவதூறு போன்றவற்றால் நிறைந்திருக்கிறது. சிறு பிள்ளைகள் தேவனில்லாமல் வளருகிறார்கள். நம் குழந்தைகள் தேவனில்லாமல் தொடர்ந்து வளரும் போது, சட்டம், ஒழுங்கு போன்றவைகளெல்லாம் அவர்களுக்கு நகைச்சுவையாகி விடும். குற்றவாளிகள் சமுதாயத்தை ஆளுவார்கள். அக்கிரமம் முடிசூட்டப்பட்ட ராஜாவாக மாறி விடும். கிறிஸ்தவர்கள் ஆதி அப்போஸ்தலர்களைப் போல, சீஷர்களைப் போல மரண பரியந்தம் துன்பப்படுத்தப்படுவார்கள். நரகம் தன் எல்லைகளை விரிவாக்கும்.

நிச்சயமாகவே, வளரும் குழந்தைகளுக்கு நாம் செய்யும் அருமையான காரியம் விலையுயர்ந்த ஆடைகளையோ, வாகனங்களையோ, பைக் போன்ற ஆடரம்பரப் பொருள்களையோ வாங்கிக் கொடுப்பதல்ல. மாறாக, அவர்களை தேவனிடம் அறிமுகப்படுத்தி, வேதாகமத்தை அவர்களுக்குப் போதிக்க வேண்டும். குழந்தைகள் நேராக வளர்ந்து, நித்தியத்திற்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே (பிரசங்கி. 12:13).* ❖

# சமய ஒற்றுமை சாத்தியமே!

## *Religious Unity is Possible!*

*E.Z. Selvanayagam*

மக்களை நல்வழிப்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு பல சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால், சமயச் சண்டைகள் பெருகினவே தவிர, வேறே பெரிய நன்மைகள் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற நிலைக்குச் சமயங்கள் இடையூறாகவே இருக்கின்றன.

ஆனால், அவ்வப்பொழுது சமய ஒற்றுமை வேண்டும் என்று மேடை போட்டுப் பேசுகிறார்கள், கூட்டம் போடுகிறார்கள், குழு அமைக்கிறார்கள் பயன் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில், ஒற்றுமை ஏற்படுவதற்கு எந்த அடிப்படையை ஆதாரமாகக் கொள்வது என்பதைத் தீர்மானிக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். வேரை வெட்டியெறியாமல் கிளைகளை நறுக்குகிறார்கள்.

### சமய ஒற்றுமை ஏற்பட சில யோசனைகள் :

1. முதலாவது, உலகமெங்கும் வாழுகிற அனைவருக்கும் ஒரே கடவுள் தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சீரியா நாட்டவர்கள் ஒவ்வொரு இடத்துக்கும் ஒவ்வொரு கடவுள் இருக்கிறதாக எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதாவது, சமவெளிப் பிரதேசத்துக்கு ஒரு கடவுள், மலைப்பாங்கான இடங்களுக்கு வேறொரு கடவுள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள் (1 ராஜா 20:28) நம்முடைய தமிழ்நாட்டிலே கூட ஒவ்வொரு இலாக்காவுக்கும் ஒரு கடவுள் இருப்பதாக நம்புகிறார்கள். ஆக்க ஒரு கடவுள், அழிக்க வேறொரு கடவுள், காப்பதற்கு ஒரு கடவுள், கல்விக்கு, செல்வத்துக்கு என்று பல கடவுள்கள் இருப்பதாக எண்ணி அவர்களை பூஜித்து வருகிறார்கள். கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் பவுல் அப்போஸ்தலன் கண்ட காட்சி என்ன? பல விக்கிரகங்கள்! ஆகவே, அதை விக்கிரகங்கள் நிறைந்த பட்டணம் என்று வர்ணிக்கிறார். (அப். 17:16) ஆனால், இஸ்ரவேல் நாட்டு மக்கள் மட்டும் தங்கள் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கடவுள் என்று நம்பியிருந்தார்கள். (உபா. 6:4) இந்த ஒரே கடவுள் கொள்கையை இயேசுவும் அவருடைய சீஷர்களும் போதித்தார்கள். (மாற்கு 12:29,30; 1 கொரி. 8:6; எபே. 4:6).

அந்த ஒரே கடவுள் கொள்கை சிந்திக்கிற மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறது. "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" (அப். 17:26) என்கிற

வசனத்தில் அது பலமாய் நிரூபிக்கப்படுகிறது. மனிதன், என்ன உணவைச் சாப்பிட்டாலும், எந்த சீதோஷண நிலையில் வாழ்ந்தாலும், எந்த நிறத்தவனாயிருந்தாலும், எம் மொழி பேசுபவனாக இருந்தாலும் அவர்களுடைய இரத்தம் சிவப்பாகவும், மற்ற விலங்குகள், பறவைகள் நீர்வாழ் உயிர்கள் ஆகியவை களின் இரத்தத்திலிருந்து வேறுபட்டும் இருக்கிறதை நாம் காண்கிறோம். பல கடவுள்கள் மனிதனையும், உலகத்தையும் படைத்திருந்தால் வெவ்வேறு விதமான நிறத்திலும், தன்மையிலும் இருந்திருக்கும். ஆகவே "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையை அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டால் ஒழிய சமய ஒற்றுமை ஏற்பட முடியாது.

### உலக மக்கள் அனைவரும் ஒரே உபதேசத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்

ஒரே கடவுளை ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறிக் கொண்டு தங்கள் மனம் போல் கொள்கைகளை வகுத்துக் கொண்டு ஒருவரோடொருவர் இணக்கமில்லாமலும், முரண்பட்டும் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திப் பிரிவினை உண்டாக்குகிறார்கள். அப்படிப்பட்ட சுயநலமிகளையும், கள்ள போதகங்களையும் அடையாளம் கண்டு கொண்டு சத்தியத்தைத் தேடி வாசித்து அதில் நிலை நிற்க வேண்டும். எபிரெயர் நிருப ஆசிரியர் (1 தெச. 5:21; அப். 17:17). " பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய்த் திருவுளம் பற்றினார் " என்கிறார் (எபி. 1:1,2) அதன் கருத்தைச் சிந்திப்போம். தேவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவைக்கு ஏற்ப பரிசுத்த ஆவியினால், பரிசுத்த மனிதரை ஏவி, தேவனுடைய திட்டத்தை மனிதருக்கு வெளிப்படுத்தினார். (2 பேதுரு 1:21) ஆனால், இப்பொழுது அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு பேசுகிறார். நான் சுயமாய்ப் பேசவில்லை, " நான் பேச வேண்டியது இன்னது என்றும், உபதேசிக்க வேண்டியது இன்னது என்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால், நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்" என்கிறார் இயேசு. அதாவது, இயேசு கிறிஸ்துவின் போதனை தேவனுடைய போதனையே.

அவர் இவ்வுலகுக்கு வந்த வேலை முடிந்த பின்பு பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவினிடத்திற்குச் சென்று அவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். அப்படிச் செல்லுவதற்கு முன்பு தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, அதிகாரம் கொடுத்தார் (மாற்கு. 16:15,16). அவர்களுடைய போதனைகளை இயேசு அங்கீகரிக்கும் வகையில், " உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான். உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான் " என்கிறார் (லூக். 10:16) மேலும், அப்போஸ்தலர்கள் பேச வேண்டியவைகளை அவர்களுக்கு வெளிப்படுத்த அவர் சத்திய ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்தார்

(யோவான் 16:7). " சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் ".

மேலும், பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்கிறார் (2 தீமோ. 3:16). ஆகவே, உபதேசங்கள் அப்போஸ்தலர்களாலும், பரிசுத்த ஆவியாலும், இயேசு கிறிஸ்துவினாலும் போதிக்கப்பட்டிருந்தாலும் அதன் "மூலம்" தேவனே. எனவே, பரிசுத்த வேதாகமம் கூறுகிற அனைத்து உபதேசங்களும் மெய்யான ஜீவனுள்ள தேவன் மனுக்குலம் அனைத்துக்கும் கொடுத்தவைகள். அவைகளை யன்றி வேறே உபதேசம் கிடையாது என்கிற எண்ணம் விசுவாசிகளுக்கு ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.

**மார்க்க விஷயத்தில் யாருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதில் ஒரு தெளிவு வேண்டும்.**

ஒரு சிலர் என்னுடைய மனச் சாட்சியே எனக்கு வழிகாட்டி, அதன்படி தான் செய்வேன் என்பர். இன்னும் சிலர் பெற்றோர்களின் முடிவு தான் சரி என்பர். வேறு சிலர் சமுதாயம், அதன் கட்டுப்பாடு இவைகள் முக்கியம் என்பர். இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தால் சமய ஒற்றுமை நிலவுவது எங்ஙனம்? ஒற்றுமை வேண்டும் என்றால் ஒரு பொது அதிகாரத்தை ஏற்றுக்கொண்டாக வேண்டும். அந்தப் பொது அதிகாரம் எதுவாக இருக்க முடியும்? இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகு சீஷர்களிடம் "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத். 28:18) அதை பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலன் பவுல் மூலமாக ஆமோதிக்கிறார். " ஆதலால் தேவன் எல்லா வற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக் குறித்து "தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது" என்கிறார். (2 பேதுரு 1:3) இப்படியிருக்க ஒருவன் தான் விரும்புகிறதையே விசுவாசிப்பேன் என்று அடம் பிடித்தால் பிரிவினை தவிர்க்க முடியாதது ஆகிவிடுமே.

**இன்னும் ஒரு சிலர் பழைய ஏற்பாடும் தேவனால் கொடுக்கப்பட்டது தானே, அதையும் நாம் கடைப் பிடிக்க வேண்டும் என்று கூறுவர்.**

இது எபிரெயர் நிருபத்துக்கு முரண்பாடானது. பழைய ஏற்பாட்டில் தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாகப் பேசினார். இப்பொழுது (கடைசிக் காலத்தில்) தமது குமாரன் மூலமாகவும், அவருடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும் பேசுகிறார்

என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். இதோ, இன்னும் கூட சில ஆதாரங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசேயருக்கு எழுதும்போது, "நமக்கு எதிரிடை யாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவில் இராதபடி எடுத்து, சிலுவையின் மேல் ஆணி அடித்து முடிவுக்கு கொண்டு வந்தார் என்று கூறுகிறார்" (கொலோ. 2:14) மேலும், எபிரெய நிருப ஆசிரியர் புதிய உடன்படிக்கையை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக பழைய உடன்படிக்கை அப்புறப்படுத்தப்பட்டது என்கிறார் (எபி. 9:15; 17,7; 18,10:9).

அப்படியிருக்கும் போது ஒருவன் பழைய பிரமாணம் முழுவதையுமோ அல்லது அதில் ஏதாவது ஒரு பகுதியையோ கைக்கொள்ள வேண்டும் என்று விரும்பினால் அவன் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தவன் ஆவான் (கலா. 5:4) ஆகவே, நாம் சமய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்றால் இயேசு கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் உபதேசிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

**பொதுவான இரட்சிப்பை அடைவது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.**

அப்போல்ஸ்தலனாகிய யூதா என்பவர் நம்முடைய பொதுவான இரட்சிப்பைக் குறித்துச் சொல்லும் போது, "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக" (யூதா 3) என்கிறார். தேவன் இரட்சிப்பின் திட்டத்தை ஆளுக்கொரு விதமாய் வெளிப்படுத்தவில்லை. மார்க்கப் பிரிவினை வாதிகள் இரட்சிப்பு பற்றிப் பலவிதமாய்ப் போதிக்கிறார்கள். அது வேதாகமத்துக்குப் புறம்பானது. ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனு டைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று யோவான் 3:5ல் வாசிக்கிறோம். மேலும், இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை என்று வர்ணிக்கப்படும் மாற்கு 16:15,16 கூறுவதாவது... " நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ". அதாவது, சுவிசேஷம் அனைத்து நாடுகளிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும். மக்கள் ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிய விரும்பினால் அவர்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்க வேண்டும். அது எப்படி என்பதை அப்போஸ்தலர்கள் பின்னர் பல இடங்களில் விளக்கிச் சொல்லுகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகோஸ்தே பண்டிகை நாளில் எருசலேமில் கூடியிருந்த மக்கள் அப்போஸ்தலரைப் பார்த்து ... நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்கு அளிக்கப்பட்ட பதில் நீங்கள் மனந் திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 2:37,38) சுவிசேஷகன் பிலிப்பு சமாரியாப் பகுதியில் பிரசங் கித்தார். வசனத்தை ஏற்றுக்கொண்ட ஆண்களும், பெண்களும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (குழந்தைகள் அல்ல) (அப். 8:5,12) சத்தியத்தை ஏற்றுக் கொண்ட எத்தியோப்பிய மந்திரி கேட்ட கேள்வி: " இதோ தண்ணீர் இருக்கிறதே நான்

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தடை என்ன? (அப். 8:36) பதில் : நீர் முழு *இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை*" என்று கூறப்பட்டது.

ஆக, மேற்சொன்ன அனைவருக்கும் இரட்சிப்பு ஒரே விதமான முறையில் தான் வந்தது. இன்றைக்கும் அதே இரட்சிப்பின் திட்டம் தான் தேவனால் அங்கீகரிக்கப்படும். எல்லாக் காலத்திலும், எல்லா மனிதருக்கும் இது ஒன்றே வழி (ரோமர் 3:23,24; 6:3) மக்கள் சுவிசேஷ உரையைக் கேட்டனர், விசுவாசித்தனர், மனந்திரும்பினர், அறிக்கை செய்தனர், ஞானஸ்நானம் பெற்றனர். சுலபமான முறை; குழப்பத்திற்கு இடமேயில்லை. எத்தனை பேர் வசனத்தை ஏற்றுக் கொண்டார்களோ அத்தனை பேரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (அப். 2:41) அதனுடைய பலன்களை கலா. 3:26,27ல் வாசிக்கிறோம். " நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர் களே ".

ஏனெனில், " உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என்றுள்ளது. இது தான் பொதுவான இரட்சிப்பு. எல்லாருக்கும் ஒரே சுவிசேஷம், ஒரே சுவிசேஷம், ஒரே ஞானஸ்நானம் எல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்று. இந்த நிலையை எல்லாரும் ஏற்றுக்கொண்டால் தான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையில் நிலவிய ஒற்றுமையின்மை யைக் கண்டித்து வேதனையோடு கேட்ட கேள்விகளை ஜெபத்துடன் வாசியுங்கள். " உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்கிறேன்".

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப் பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள் (1 கொரி. 1:12,13) எபேசியர் நிருபத்தின் 4ம் அதிகாரம் சொல்லுகிற ஏழு ஒன்றுகளைக் கவனியுங்கள். 1. ஒரே நம்பிக்கை 2. ஒரே சரீரம் (சபை) 3. ஒரே ஆவி 4. ஒரே கர்த்தர் 5. ஒரே விசுவாசம் 6. ஒரே ஞானஸ்நானம் (தெளிப்பது ஞானஸ்நானமல்ல) 7. ஒரே தேவன். சகோதரர்களே, இவைகளையெல்லாம் சிந்தியாமலும் நடைமுறைப்படுத்த மனமில்லாமலும் வெறுமனே ஒற்றுமை! ஒற்றுமை! என்று கூறுவது ஊரை ஏமாற்றுவதற்குத் தான். உருப்படியாக ஒன்றும் நடைபெறாது. தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் கனம் பண்ணி, இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவருடைய உபதேச சட்டங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து இயேசுவின் இறுதி ஜெபத்தை நடைமுறைப்படுத்த தேவன் நம்மை வழி நடத்துவாராக! ❖

செயலில் கிறிஸ்தவம்

# அழகான பாதங்கள் (ரோமர் 10:15)

# Beautiful Feet (Romans 10:15)

*Richard E. Trull, Jr.*



*நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்.* நான் இறங்கி வந்த அழுக்கான பாதையின் அடியிலிருந்து மேலே மலையைப் பார்த்தேன். கீழே இருக்கும் ஆற்றில் இறங்குவதற்கு வளைந்து செல்லும் வழியாக மக்கள் சாரை சாரையாக இறங்கினார்கள். அநேக பாதங்கள் அந்த தண்ணீரைக் கலக்கியதால் அந்தப் புதரில் தூசி படிந்திருந்தது. அந்தக் கூட்டத்தில் ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் இருந்தார்கள். அந்த நாள் அங்கே வந்திருந்த திரளான பிள்ளைகளுடைய பெற்றோர்களின் வாழ்க்கையில் ஒரு சிறப்பு நாளாக இருந்தது.

இந்தக் கிறிஸ்தவர்கள் 1983ம் ஆண்டில் தொடங்கப்பட்ட *ஆண்டுல்லா* சபையின் அங்கத்தினர்கள். நான் கென்யாவுக்கு வந்ததிலிருந்து, அந்த சபையோடு இணைந்து வேலை செய்தேன். அந்த ஆண்டுல்லா சபையானது பல வருடங்களாக தற்சார்புடைய சபையாக இருந்து வருகிறது. எங்கள் உதவி இல்லாமலேயே தாங்களாகவே ஆராதனை ஏறெடுக்கிறார்கள். நான் அவ்வப்போது அவர்களை சந்தித்து அந்த சபையின் முன்னோடிகளுக்கும், அருகிலுள்ள சபையின் முன்னோடிகளுக்கும் வேதபாட வகுப்புகளை நடத்தி வருகிறேன். அந்த முன்னோடிகள் அருகாமையிலுள்ள கிராமங்களில் ஓரிரு சபைகளைத் தொடங்கியிருக்கிறார்கள்.

இக்குறிப்பிட்ட நாளில் கென்யாவில் நானிருந்த முதல் வருடத்தை சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தேன். அந்த சபையிலிருந்த இளம் கிறிஸ்தவர்களுடன் அநேக நாட்களை நான் செலவழித்தேன். அந்த கிராமத்தை நான் தெரிந்து கொண்டு, சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு அவர்களோடு இணைந்து வேலை செய்தேன்

1984, 1985 வது வருடங்களில் வறட்சியின் நிமித்தமாக பஞ்சம் தலைவிரித்தாடிய போது அந்தக் கிராமத்திற்கு நாங்கள் உணவு நிவாரணங்களை வழங்கினோம். ஒரு மாத அளவு ஆரோக்கியமாக வாழ்ந்து பின்பு அந்தக் குறுகிய கால அளவில் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு எடை குறைந்திருந்த கிறிஸ்தவர்களின் காட்சி என் நினைவில் நிற்கிறது. இறந்து போன மக்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு

குப்பைத் தொட்டிகளின் உதவியால் தூக்கிச் செல்லப்பட்டது என் நினைவுக்கு வருகிறது.

1984ம் ஆண்டில் சபையில் தவழும் பிள்ளைகளைக் கொண்ட பல இளம் தம்பதியினர் இருந்தார்கள். *இத்தனை வருடங்களில்* அந்தச் சிறு பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். அவர்கள் சரீரப்பிரகாரமாக மாத்திரம் வளரவில்லை. ஆவிக்குரிய சூழலிலும் வளர்ந்து விட்டார்கள். அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழத் தெரிந்து கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி போதிக்க விரும்பிய பெற்றோர்களால் வளர்க்கப்பட்டவர்கள்.

சிறுபிள்ளைகள் ஒவ்வொரு வாரமும் ஞாயிறு பள்ளியில் பங்கு பெற்று வந்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்து பற்றிப் போதிக்கப்பட்டது. அது அளவிட முடியாத ஆசீர்வாதமாகும்.

இப்போது நான் வேகமாகப் பாயும் நீரோடையின் நடுவில் இருக்கிறேன். அந்த அழுக்கான பாதையிலிருந்து இறங்கி வந்து ஆண்டவராகிய இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதற்கு ஆயத்தமாக இருந்த சிறுபிள்ளைகளுடைய வெறுங் கால்களைப் பார்க்கிறேன். ஜனங்கள் மற்றும் பிள்ளைகளுடைய வாழ்க்கையை மாற்றும் தேவனுடைய வல்லமையைப் பார்த்து ஆச்சரியப்படுகிறேன்.

ஆற்றங்கரையின் இருபக்கங்களிலும் அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். என்னுடைய பார்வையில் அந்தப் பாதங்கள் அழகானவைகள். அந்தப் பாதங்கள் தான் தங்கள் குழந்தைகளை ஜீவனுள்ள தேவனிடத்தில் கொண்டு வந்த பாதங்கள். அந்த நாளில் அந்தக் குழந்தைகள் கிறிஸ்துவுக்குள் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு தண்ணீரிலிருந்து எழுந்து வந்ததை நாங்களெல்லாரும் கண்டோம். உண்மையாகவே, அந்தப் பாதங்கள் அழகானவைகள் தான்! ❖

## தொடக்கங்கள்

ஜலத்தினாலும், ஆவியினாலும் புதிய பிறப்பினால் எழுந்த ஒருவர்
கிறிஸ்துவை நோக்கிய சிந்தையோடு புது சிருஷ்டியாகிறார்.
அவருடைய வெளிச்சத்தின் பிரகாசம் ஒளிர்கிறது.
அன்பு ஆத்துமாவை மூடுகிறது.

பூரணமான வழியில் பிறருக்கு உதவும் உத்வேகம்
அவருடைய வார்த்தையை பிறரிடம் பகிர்ந்து கொள்ளத் தூண்டுகிறது.
புல்வெளிகள் பசுமையாகி, தூய நீரோடைகளிலிருந்து
ஜீவத்தண்ணீர்கள் ஊற்றெடுத்து வருகின்றன.

அன்பான மேய்ப்பன் தம் கரங்களை விரித்து
தம்முடையவர்களை வழிநடத்தவும், பாதுகாக்கவும்
அவர்களை அணைத்துக் கொள்கிறார்.
நெடுஞ்சாலை வெளிச்சம் மேலான இடத்திற்கு நம்மை வழிநடத்துகி[றது]
இறுதியில், புதிய நித்திய உலகத்தில் ஓர் ஒளிமயமான எதிர்காலம்.



# ஊழியம் என்பது நம்முடைய விருப்பத்தின்படியானதல்ல !

# Evangelism Is Not An Option !

*Rod Kyle*

இயேசு தம்முடைய சீஷர்களிடம் உலகெங்கும் போய் நற்செய்தியைப் போதிக்கும்படி கட்டளையிட்டார். அந்தக் கட்டளையானது அப்போஸ்தலர் 1:8-ல் வாக்குதத்தமாக உருவானது. ஆனால், அது இன்று நமக்குப் பொருந்துமா? அது நம்முடைய விருப்பத்திற்குட்பட்டதா?

வேதவாக்கியங்களில் *நீங்கள்* போய் கிறிஸ்துவைப் பற்றி போதிக்க வேண்டுமென்று வெளிப்படையாக எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆனால், உட்பொருளாகக் கொடுக்கப்படுகிறது (மத் 28:20) கொடுக்கப்பட்டிருக்கிற உதாரணங்கள் நாம் அதில் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்கின்றன. (அப். 8:4) இதை யார் மறுக்கக் கூடும்?.

ஒருவேளை இதை ஏற்றுச் செயல்படுத்துவதற்குக் கடினமான கட்டளையாக இருந்தாலும், யாரால் இதை நிராகரிக்கக்கூடும்? போங்கள் என்கிற கட்டளையைக் குறித்த சில உண்மைகளை நாம் உணர்ந்தால் அது நமக்கு உதவியாக இருக்கலாம்.

அப்போஸ்தலர்கள் கூட அதில் தடுமாறியிருக்கிறார்கள். அவர்கள் உலகமெங்கும் போவதற்கு முன்பு எருசலேமில் சுமார் பதினேழு வருடங்கள் இருந்தார்கள். அவர்கள் முதலில் இயேசுவாலேயே பயிற்றுவிக்கப்பட்டார்கள். லூக்கா 6:40; யோவான் 15:37 அதாவது, அவர்களை உலகத்திற்குள் அனுப்புவதற்கு முன்பாக இயேசு அவர்களைப் பயிற்றுவித்தார்.

உண்மையாகவே, போய் ஊழியம் செய்வது சோர்வை ஏற்படுத்துகிற வேலை தான். இன்று உலகில் எழுநூறு கோடி மக்கள் வாழ்கிறார்கள். சிறு பிள்ளைகளைத் தவிர்த்துவிட்டு, மீதம் இருப்பவர்களில் இப்போது இயேசு வந்தால் எத்தனை பேர் பரலோகம் போவார்கள்?. மிகப்பெரும்பாலோர் போகமாட்டார்கள்.

மற்றவர்களுக்குப் போதிக்க நமக்கு உதவியாயிருக்கும் வளங்கள்,

சாதகங்கள் என்ன? (எபி. 13:10,5,6) வசனங்கள் கர்த்தர் நமக்குச் சகாயர் என்பதை அறிவிக்கிறது. ஏசாயா 55:11 தேவனுடைய வார்த்தை எப்போதுமே நமக்கு விளைவுகளை ஏற்படுத்தும். விசுவாசத்தோடு செயல் படும்போது, எண்ணற்ற சகோதரர்கள் இந்த ஆச்சரியமான வார்த்தைகள் உண்மை யென்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அநேகக் கிறிஸ்தவர்கள் மற்றவர்களைத் தொடர்பு கொண்டதின் விளைவாக, பிறரோடு பகிர்ந்து கொண்டதின் விளை வாக அதிகமான ஆத்துமாக்கள் மன மாற்றமடைந்ததற்குச் சாட்சிகளாயி ருக்கிறார்கள். விளையச் செய்கிறவர் தேவனே (1 கொரி. 3:6) ஆனால், நாம் வேலை செய்தாக வேண்டும். நம்மில் அநேகர் இந்த உண்மைகளை கண்டு பிடிக்க வேண்டும். நம்மிடம் நேரம், வளங்கள், வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், நம்மிடம் விருப்பம் இருக்கிறதா?

"எனக்கு நேரமில்லை", "இந்த ஆத்தும ஆதாயத் திட்டங்களெல்லாம் வேலைக்கு ஆகாது", அல்லது "நல்ல இருதயம் உள்ளவர்கள் குறைவாக இருக்கிறார்கள்" என்றெல்லாம் நம்மு டைய இருதயத்திலும், மனதிலும் சொல்லக்கூடாது. இப்படிப்பட்ட காரண காரியங்கள் நம்முடைய பாவச் செயல் களையும், செயல்படாத தன்மையையும் நியாயப்படுத்தவே உதவி செய்யும்.

ஆதி சீஷர்கள் தேவன் தங்கள் மூலமாக கிரியை நடப்பிக்க அனுமதித் தார்கள். ஏறத்தாழ கி.பி. 60ல் பவுல் ரோமாபுரிக்கு வந்த போது சபை முன்பே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது (அப். 28:15) ரோமாபுரியில் மண்ணில் புதைந்த கல்லறைத் தோட்டத்தில் அதாவது, கி.பி. 33 - 300 கால அளவிலான கல்லறை களைப் பார்க்கும் போது சுமார் நான்கு இலட்சம் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு சந்ததியிலும் வாழ்ந்திருப்பதை நம்மால் கணக்கிட முடியும். இது உண்மையாக இருக்குமானால், அது வெற்றியாகும். இப்படிப்பட்ட ஊழியச் செயல் இப்போது நடக்குமா?

நாம் எஜமானுடைய திட்டத்தின் படி வேலை செய்தால், அவருடைய கற்பிக்கும் முறையில் பயிற்றுவிக்கப் பட்டால், நம்முடைய இழந்து போன நண்பர்களிடம் அன்பாகவும், தைரிய மாகவும் பேசினால், நம்மை நாம் நோக்கமுடையவர்களாக மாற்றிக் கொண்டால், அவரை நம்பி அவருக்குள் நிலைத்திருந்தால் அது நிச்சயம் நடக்கும் (யோவான் 15:3,4). இழந்து போன ஆத்துமாக்களைக் குமாரனுக்காக ஆதாயப்படுத்தும் போது நாம் கனி களைக் கொடுப்போம்! ஆகவே, பிரதான கட்டளை என்பது நாம் செய்யலாம், செய்யாமலிருக்கலாம் என்பது போன்ற தல்ல. ❖

*நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனா யிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (2 தீமோ. 4 : 5)*

## பார்வையாளர்களின் முக்கியத்துவம்

**பார்வையாளர்கள்** சபை கூட்டங்களில் பார்வையாளர்கள் தான் மிக முக்கிய மானவர்களாக இருக்கிறார்கள்.

**பார்வையாளர்கள்** அவர்கள் நம்மைச் சார்ந்திருக்கவில்லை; நாம் தான் அவர்களைச் சார்ந்திருக்கிறோம். ஏனென்றால், சபை அங்கத்தினர்களெல்லாம் ஆரம்பத்தில் பார்வையாளர்களாக இருந்தவர்கள் தான்.

**பார்வையாளர்கள்** அவர்கள் நம் ஐக்கியத்திற்கு இடையூறாக இருப்பதில்லை, ஆனால், ஐக்கியத்தை மேலும் இனிமையாகவும், நோக்கமுடையதாகவும் மாற்றுகிறார்கள்.

**பார்வையாளர்கள்** அவர்கள் உள்ளே வரும் போது நமக்கு உதவி செய்கிறார்கள், நாம் அவர்களுக்கு சேவை செய்வதினால் எந்த உதவியும் செய்வதில்லை.

**பார்வையாளர்கள்** அவர்கள் வெறும் புள்ளி விவரமல்ல. அவர்கள் நம்மைப் போல உணர்வுள்ள மாம்சத்தையும், இரத்தத்தையும் உடைய மனிதர்களாயிருக்கிறார்கள்.

**பார்வையாளர்கள்** அவர்கள் நம்மிடம் தேவைகளுடனும், விருப்பங்களுடனும் வருகிறார்கள். அவைகளை சந்திப்பது நம் கடமையாகும்.

**பார்வையாளர்கள்** அவர்கள் நம்மால் கொடுக்க முடிந்த மிகச் சிறந்த மரியாதை கலந்த உபசரிப்புக்கு பாத்திராயிருக்கிறார்கள்.

**பார்வையாளர்கள்** அவர்கள்தான் நம் சபைக்கும், ஒவ்வொரு சபைக்கும் உயிரோட்டமுள்ள இரத்தமாயிருக்கிறார்கள்.

**அவர்கள் இல்லையென்றால் நம் கதவுகளை நாம் மூட வேண்டிய தாயிருக்கும். அதை ஒரு போதும் மறந்து விட வேண்டாம். இயேசு எல்லா ஜனங்களுக்காகவும் வந்தார்.**

**ஆகையால், பார்வையாளர்கள் எல்லோருக்கும் ராஜ வரவேற்பைக் கொடுக்க முயற்சி எடுப்போம்!**

# வரங்கள் சில வேளைகளில் நிபந்தனைக்குட்பட்டதாயிருக்கின்றன

# *Gifts Are Sometimes Conditional*

*G.F. Raines*

**தே**வனுடைய புத்தகம் சொல்கிறது, "*தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தை எல்லாம் கொடுத்தார்...* யோவான் 21: 43-45; நெகே 9:7,8; ஆனால், அவர்கள் அந்த தேசத்தை மிகுந்த உபத்திரவங்கள் மூலம் சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய தாயிருந்தது" (உபா. 1:8).

கர்த்தர் யோசுவாவை நோக்கி, "*... இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும், யுத்த வீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன்...*" (யோசு 6:2) என்று சொல்லியிருந்தார். ஆனாலும், எபிரெயர்கள் எரிகோ பட்டணத்தின் மதில்களை ஏழுநாள் சுற்றி வரும் வரை அந்த தேசத்தை சுதந்தரிக்க அனுமதிக்க வில்லை. (எபி. 11:30)

நம் அனுதின ஆகாரம் தேவனிடத்திலிருந்து வரும் ஈவாயிருக்கிறது (மத் 6:11); ஆனால், பவுல் தெசலோனிக்கேயரிடம் இவ்விதமாகச் சொன்னார். "*ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே*" என்று (II தெச. 3:10).


இரட்சிப்பும் தேவனிடத்திலிருந்து வரும் ஈவாக இருக்கிறது (ரோமர் 6:23), ஆனால், *தேவனுக்குப் பயந்து நீதியைச் செய்கிறவர்களே அவருக்கு உகந்தவர்கள்* (அப். 10:34,35) நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வல்லமையான மலைப்பிரசங்கத்தில் எவ்வித சந்தேகமுமின்றி, தெளிவாக இப்படி அறிவித்தார். *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை* (மத். 7:21).

*காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்* (கலா. 4:5); அவரே தேவனுடைய நித்திய நோக்கத்தின் நிறைவேறுதலாக, மனிதனுடைய மீட்பிற்கான தேவனுடைய முடிவில்லா, முழுமையான திட்டமாயுமிருக்கிறார் (எபே. 3:8-11). *தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி என்று வாசிக்கிறோம்* (எபி. 5:8,9).

ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பது சம்மந்தமாக குறிப்பிட்ட தகவலுக்கு தயவு செய்து மாற்கு 16:16; யோ 3:5; அப் 2:36-47) 8:26-40; 22 :11-16; எபே 1:7; ரோ 6:1-5; கலாத்தியர் 3:6-29; பேதுரு 1:5-11 போன்ற வசனங்களை வாசியுங்கள். ❖

இரட்சிப்பு

# பரலோகம் போவது பற்றி



# On Going To Heaven

*Maxie B. Boren*

ஒருவரால் புகழ் இல்லாமலே யே பரலோகம் போக முடியும். அது போல பணம் இல்லாமல், சமுதாய ஏணியில் உயர்ந்த இடத்தில் இல்லாமல், சரீரப்பிரகாரமான திறமையோ, அழகோ இல்லாமல் கூடப் போக முடியும். மக்கள் பெரிதாக நினைக்கின்ற பல காரியங்களில்லாமலேயே நாம் பரலோகம் போக முடியும்.

ஆனால், இயேசு கிறிஸ்து இல்லாமல் யாருமே பரலோகம் போக முடியாது! *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை* (அப். 4:12). *நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்* (யோவான் 14:6) என்று இயேசு சொல்லியிருக்கிறார். மறுபடியும் இயேசு *நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்...* என்று இயேசு சொல்லியிருக்கிறார் (யோ. 10:9).

இயேசுவின் பிறப்புக்கு முன்பாகவே, தேவ தூதன் அவரைப் பற்றி இவ்விதமாகச் சொன்னார். *அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்* (மத். 1:21). இந்த ஒரே காரணத்திற்காகத்தான் இயேசு இந்த உலகத்திற்கு *வந்தார். இழந்து போனதைத் தேடும்படியாக! இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே தாம் வந்ததாக இயேசு சொன்னார்* (லூக். 19:10).

தேவன் இயேசுவின் மீது இவ்வுலகத்தின் பாவங்களை வைத்து, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு *பாவ மறியாத அவரை நமக்காக பாவமாக்கினார் (2கொரி. 5:21). சகல அக்கிரமங்களினின்றும் நம்மை மீட்கும்படிக்கு அவர் அப்படிச் செய்தார் (தீத்து. 2:14); அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி அவர் அப்படிச் செய்தார் (கலாத். 1:4). அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார் (எபி. 9:26). அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதியதில் ஆச்சரியம் எதுவுமில்லை. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது (1தீமோத். 1:15).*

நாம், பரலோகத்திலிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலி. 3:20). அவர் நம்மை அவரோடு சேர்த்துக்கொள்வார், அப்போது அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே நாமும் இருப்போம் (யோவான் 14:3). ❖

# பேதுரு தண்ணீரின் மேல் நடத்தல்

## Peter Walking on Water

*O.P. Baird*

Matthew 14 : 1-36 (மத்தேயு 14 :1-36)

இயேசுவின் ஊழிய நாட்கள் முழுவதும் தேவனுடைய வல்லமை இயேசுவில் கிரியைச் செய்ததை நாம் காண முடியும். இத்தகைய இரண்டு சம்பவங்கள் மத்தேயு பதினான்காம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அங்கே சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிற படி திரளானக் கூட்டம் அதாவது, ஸ்திரீகளும், பிள்ளைகளும் சேர்க்கப்படாமல் ஐயாயிரம் புருஷர்கள் இயேசுவிடம் வந்தவர்கள், அவர் அவர்களுக்கு போதித்தார் (வச. 13,14) வியாதியஸ்தர்களைச் சுகமாக்கினார் (மாற்கு 6:34). அந்த நாளின் சாயங்கால வேளையில் இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்தார் (15-21). *போஷித்த பிறகு அவர் ஜனங்களை அனுப்பி விட்டு தம்முடைய சீஷர்கள் படகில் ஏறி தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார்* (வசனம் 22,23).

இந்த அற்புதம் ஜனங்களை அதிகமாகக் கவர்ந்தபடியால் அவர்கள் இயேசுவை ராஜாவாக்க பலவந்தம் பண்ணி பிடித்துக் கொண்டு போக மனதாயிருந்தார்கள் (யோவான் 6:15). இயேசுவின் வல்லமையும் இங்கே, மக்களுடைய தேவைகளைப் பற்றிய அவருடைய அக்கறையும் மக்களை அதிகமாகக் கவர்ந்திருக்கிறது. அவர் நம் தேவைகளை சந்திக்க வல்லவராயிருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தைகளினால் நம் ஆவிக்குரிய சுகத்திற்கும், வளர்ச்சிக்கும் தேவையான ஆகாரத்தைக் கொடுக்கிறார்.

சீஷர்கள் கடலைக் கடந்த போது, பலத்த காற்று வீசியது. அப்போது படகுகள் அலைகளினால் அடிபட்டது. *இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின் மேல் நடக்கிறதைச் சீடர்கள் கண்டு கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றார். (வச. 25-28) இயேசுவும் வா என்று பதிலளித்தார்.* நிச்சயமாகவே பேதுருவால் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு தண்ணீரில் நடக்க முடியாது, ஆனால் அவருக்கு இயேசுவின் மேல் உறுதியான விசுவாசம் இருந்தபடியால் அப்படி நடப்பதற்கு இயேசுவால் வல்லமையைக் கொடுக்க முடியும் என்பதை விசுவாசித்தார்.

இயேசு பேதுருவிடம் "வா" என்று அழைப்பு விடுத்தார். இயேசுவின் அழைப்பு அவருக்குச் செவி கொடுக்கும் எல்லோருக்கும் பொருந்துகிறது. அவருடைய அழைப்பு, *வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் ; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் ; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்று. (மத். 11:28-30).* அந்த அழைப்புக்கு பதில் கொடுக்கிறவர்களுக்கு இயேசு தம்மோடு நடப்பதற்கு வல்லமையைக் கொடுக்கிறார்.

இயேசுவின் கட்டளையின்படி பேதுரு படகிலிருந்து இறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். பேதுருவுக்கு முன்பாக இயேசு இருக்க, தேவனுடைய வல்லமை அவருக்குள்ளிருக்க பேதுருவின் விசுவாசம் ஒவ்வொரு அடியிலும் அதிகரித்திருக்க வேண்டும்; ஆனால் அவர் தன் கண்களை இயேசுவிடமிருந்து விலக்கி அச்சுறுத்திய அலைகளைப் பார்த்தார். அப்போது பயந்து மூழ்கத் தொடங்கினார். உலகத்தில் நம்மை சிக்க வைக்கின்ற, அச்சுறுத்துகின்ற காரியங்கள் பல இருக்கின்றன. ஆனால், நம்மைத் திசை திருப்புகின்ற காரியங்களிலிருந்து நம்முடைய இருதயத்தை விலக்கி இயேசுவில் நம் சிந்தையைச் செலுத்த வேண்டும்.

பேதுரு மூழ்கத் தொடங்கிய போது *ஆண்டவரே என்னை இரட்சியும்* என்று கூப்பிட்டார் (வசனம் 30). உடனே இயேசு கையை நீட்டி பேதுருவைப் பிடித்தார். அதன்பின்பு பேதுருவை இயேசு மென்மையாகக் கடிந்து கொண்டார். *அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்* என்றார். வாழ்க்கைக் கவலைகளில் சில வேளைகளில் நமக்கும் அப்படிப்பட்ட கடிந்து கொள்ளுதல் தேவைப்படுகிறதா? இதே பேதுரு தான் பின்பு *அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் என்று எழுதினார் (பேதுரு 5:7).* பேதுரு தொடர்ந்து அந்த அலைகளைப் பார்த்து கொண்டிருந்தால், அலைகளுக்கடியில் மூழ்கிப் போயிருப்பார், ஆனால், யாரிடம் திரும்ப வேண்டும் என்பதை அறிந்திருந்தார். இயேசு நம்மைத் தூக்கி எடுத்து நம் விசுவாசத்தைப் பலப்படுத்த ஆயத்தமாக இருக்கிறார்.

பேதுரு, தைரியமாக பயணத்தைத் தொடங்கி மிகுந்த வெட்கத்துடன் திரும்பவும் படகுக்குள் ஏறினது போல் தெரிகிறது. ஆனால், பேதுரு தான் வைத்திருந்த விசுவாசத்தின்படி செயல்பட்டார் இயேசு அவருடைய விசுவாசத்தை கனப்படுத்தி, அவருக்கு வெற்றியைக் கொடுத்தார். பேதுரு பூரணமாக இல்லாதது போல, நாமும் பூரணமாக இல்லை. நாம் மூழ்கும் போது அவரிடத்தில் திரும்பினால் கிறிஸ்து நம்மை உயர்த்துவார் இயேசு கிறிஸ்துவும், பேதுருவும் படகில் ஏறினபோது, உடனே படகு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது (யோவான் 6:21). நாம் கிறிஸ்துவின் மேல் கண்களை வைத்து, விசுவாசத்தில் அவரைப் பின் பற்றினால், வாழ்க்கைப் புயல்களில் நாம் சிக்கித் தவிக்கும்போது பாதுகாப்பாக அந்த மேலான தேசத்தின் பரலோக துறைமுகத்திற்கு நம்மைக் கொண்டு வருவார். ❖

தேவனை எல்லாவற்றிலும் **முதலில்** வைப்பவன் தேவன் தன்னோடிருப்பதைக் **கடைசியில்** காண்பான்.

# நம்ப முடியாத் தேவன்

# An Unbelievable God

*David Deffenbaugh*

## Isaiah 1:1-20 ஏசாயா 1:1-20

எதிர்காலத்தைப் பற்றிய எதிர் பார்ப்பு பிரகாசமாக இல்லை. தீட்டப் படுகின்ற சித்திரம் இருளாகவும், நம்பிக்கையற்றதுமாயிருக்கிறது. காரியங்கள் இதை விட எப்படி மோசமாக இருக்க முடியும்?

ஏசாயா புத்தகத்தின் தொடக்கம் உற்சாகப்படுத்துவதாக இல்லை. தேவன் தம் ஜனங்களை தாம் வளர்த்த பிள்ளை களாக விவரிக்கிறார். ஆனால், இப்போ தோ அவர்கள் தேவனுக்கு விரோத மாகக் கலகம் பண்ணுகிறார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும். ஆனால், தம்முடைய ஜனங் களோ உணர்வில்லாமல் இருக்கி றார்கள் என்று தேவன் குற்றம் சாட்டு கிறார் (வசனம் 3). மேலும், *தேவன் பாவ முள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரம் சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும் கேடு உண்டாக்குகிற புத்திரரு மாயிருக்கிறார்கள்; கர்த்தரை விட்டு, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபம் உண்டாக்கி, பின்வாங்கிப் போனார்கள்* என்று சொல்கிறார் (வசனம் 4). மேலும், தேவன் அவர்களின் சரீரம் நோய்வாய் பட்டதென்றும் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமே யில்லை. அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது என்றார். தேவன் அவர்களுடைய நிலைமையை மறைக்க விரும்பவில்லை (வசனங்கள் 5,6)

ஆ! என்ன ஒரு வேதனையான காட்சி இது! கர்த்தர் இந்தக் கால கட்டத்தில் தம் ஜனங்களிடம் அதிக நன்மையைக் காணவில்லை. இதன் பொருள் அவர்கள் பக்தியாயிருக்க வில்லை என்பதல்ல. பின்பு இதே அதிகாரத்தில், அவர்கள் பலிகளுடனும், காணிக்கை, தூபங்கள் மற்றும் ஜெபத் துடன் தம்மிடம் வருவதைக் குறித்து தேவன் பேசுகிறார். ஆயினும், அவர் களின் பாவத்தினிமித்தம், அவர்களு டைய ஆராதனை தேவையில்லை யென்கிற அளவுக்கு தேவன் வந்து விட்டார். அதில் தாம் பிரியப்பட வில்லை என்று தேவன் சொல்கிறார். தேவனால் அதைத் தாங்க முடியவில்லை, அவர் சோர்வடைந்துவிட்டார், தேவன் வெறுத்துவிட்டார். *என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன். நீங்கள்*

*மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்* (வசனம் 10-15) என்று சொன்னார். இதைத் தங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

உண்மையாகவே, ஆச்சரியமான பகுதி இப்போது தான் வருகிறது. பூமியிலிருந்து இப்படிப்பட்ட துன்மார்க்க மக்களை முற்றிலும் அகற்றுவதற்குப் பதிலாக, தேவன் அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். *உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றி விட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்* (வசனம் 16). அவர்கள் மாற வேண்டிய சில காரியங்களைப் பட்டியலிட்டு விட்டு, அதன் பின்பு இவ்விதமாகச் சொல்கிறார். " *வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேறென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்* " (வசனம் 18). இது முற்றிலும் நம்ப முடியாததாயிருக்கிறது.

உண்மையாகவே, தேவன் நம்பிக்கைக்குரியவர். அவருடைய இரக்கம், காருண்யம் மற்றும் நீடிய பொறுமை போன்றவைகள் மனித புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. தேவன் மிக மோசமான பாவிகளுக்குக் கூட நம்பிக்கையின் வாய்ப்புகளைக் கொடுக்கிறார். காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணம் போன்ற பாவங்களைக் கூட தேவனால் மன்னிக்க முடியும். உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் சுகமில்லையென்றாலும் தேவன் சுகமாவதற்கு வாய்ப்புகளைக் கொடுக்கிறார்.

தேவன் ஏசாயா மூலமாக அன்று சொன்னவைகள் இன்றும் உண்மையாயிருக்கிறது. தேவனுடைய நம்ப முடியாத அன்பை அனுபவிப்பதற்கு நாம் மனம் பொருந்திச் செவி கொடுக்க வேண்டும் (வசனம் 19). அப்படி இல்லையென்றால் நம் மறுப்பு கலகமாகக் கருதப்படும் (வசனம் 20). *கிறிஸ்து தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரா கிறார்* (எபி. 5:9). நம் பாவங்களையும், உலகத்திலுள்ளவர்களின் பாவங்களையும் எண்ணிப் பார்த்தால் நமக்கு நம்ப முடியாத தேவன் இருப்பதை அறிந்து கொள்வது நன்மையாக இருக்குமல்லவா?

❖

**நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.**

**(ஏசாயா 1:17)**

# என் முழங்காலில் பயணம்

கடந்த இரவு கடலின் குறுக்கே
ஒரு தேசத்திற்கு பயணித்தேன்
அங்கே படகினாலோ, விமானத்தினாலோ செல்லவில்லை
என் முழங்கால்களினால் பயணித்தேன்.

பாவத்தின் இருளான ஆழத்தில் அங்கே
திரளான மக்களைப் பார்த்தேன்
அந்த அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த
அங்கே நான் போகும்படி இயேசு என்னிடம் சொன்னார்.

ஆனால் நான் ஆண்டவராகிய இயேசுவே
இப்படிப்பட்டவர்களோடு என்னால் வேலை செய்ய முடியாது என்றேன்
அவர் உடனே உன் முழங்காலால் பயணிப்பதன் மூலம்
உன்னால் முடியும் என்று பதிலளித்தார்.

மேலும் அவர், நீ ஜெபி நான் தேவையை சந்திப்பேன்
நீ கூப்பிடு, நான் செவி கொடுப்பேன்
தூரத்திலும், அருகிலும் உள்ள எல்லா இழந்து போன
ஆத்துமாக்களைக் குறித்தும் அக்கறையாயிரு என்றார்.

நான் முயற்சித்தேன் ; ஜெபத்தில் முழங்கால் படியிட்டேன்,
சில சுகமான நேரங்களை கைவிட்டேன்
நான் முழங்காலில் பயணித்த போது
கர்த்தர் என் வலது பக்கத்தில் இருப்பதை நான் உணர்ந்தேன்

நான் ஜெபித்தபோது மனிதர்கள் இரட்சிக்கப்படுவதையும்
அழிந்து போன ஆத்துமாக்கள் சுகமாக்கப்படுவதையும் கண்டேன்
களத்தில் பிரயாசப்படும்போது தேவனுடைய வேலைக்காரர்களின்
பலம் புதுப்பிக்கப்படுவதைக் கண்டேன்.

நான் அவரிடம், ஆம் ஆண்டவரே, எனக்கு வேலை இருக்கிறது
உம்மையே நான் பிரியப்படுத்துவேன்
என் முழங்காலால் பயணிப்பதினால் நான்
மகிழ்ச்சியாய்ப் போய் உம் அழைப்புக்குச் செவி கொடுப்பேன் என்றேன்.

**- Raymond Jackson**



# எஸ்தர்

# Esther

**Frank Chesser**

ஒவ்வொரு காலகட்டமும் அசாதாரண மக்களை உள்ளடக்கியுள்ளது. எஸ்தர் அப்படிப்பட்ட ஒரு பெண்ணாக இருக்கிறாள். பெர்சியாவின் ராணியாவதற்கு முன்பு அவளுக்கு எதிராக நான்கு முக்கியமான சூழ்நிலைகள் இருந்தன.

முதலாவது, எஸ்தர் தன்னுடைய சிறுவயதிலேயே பெற்றோர்களை இழந்து விட்டாள். ஒரு பெண் தன்னுடைய இளவயதில் பெற்றோர்களை இழந்து போவதென்பது தாங்க கொண்ணா துயரத்தை ஏற்படுத்தும் ஒன்று. மொர்தெகாய் எஸ்தரை தன் மகளைப் போல வளர்த்திருந்தாலும் சொந்த வீட்டில் பெற்றெடுத்தவர்களோடு வளர்கின்ற சந்தோஷத்திற்கு அது ஈடாகாது.

இரண்டாவது, அவள் அந்நிய மத நம்பிக்கையுள்ளவர்களோடு வளர்க்கப்பட்டாள். எஸ்தர் பெர்சியாவில் இருப்பதற்கான காரணமே அவளுடைய முன்னோர்களின் விக்கிரக ஆராதனை தான். தேவன் பாபிலோனியர்கள் மூலமாக யூதாவின் மீது நியாயத் தீர்ப்பைக் கொண்டு வர அதுதான் காரணமாக அமைந்தது. பின்பு பாபிலோனியர்களை பெர்சியர்கள் மேற்கொண்டார்கள். எஸ்தரின் பெர்சிய சூழ்நிலையின் தன்மை ஆமானின் கற்பனைக்கெட்டாத திட்டத்திற்கு ராஜாவின் பதிலில் தெரிகிறது. ஆமான் ஒட்டுமொத்த யூத இனத்தையும் அழிக்கும்படி தனது திட்டத்தை ராஜாவிடம் கொண்டு சென்ற போது, ...... அந்த ஜனத்துக்கு *உன் இஷ்டப்படி செய்யலாம்* என்று ராஜா சொன்னார்

(எஸ்தர் 3:11). உடனடியாக ஆணைகள் பல்வேறு மாகாணங்களுக்கு அனுப்பப் பட்டது. *சிறியோர், பெரியோர், குழந்தை கள், ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடு களுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப் பட்டது* (எஸ்தர். 3:13). *அதன் பிறகு ராஜாவும், ஆமானும் குடிக்கும்படி உட்கார்ந்தார்கள்* (எஸ்தர். 3:15).

மூன்றாவது, அவளுக்கு சாதாரண வாழ்க்கை மறுக்கப்பட்டது. ஒவ்வொரு யூதப் பெண்ணின் மூன்று குறிக்கோள் திருமணம், குடும்பம் மற்றும் தனக்கென்று ஒரு சொந்த வீடு போன்றவைகளாகும். பெண்மையின் அந்த சந்தோஷங்களைக் குறித்து எஸ்தர் கனவு கண்டிருப்பாள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக ராஜாவின் அந்தப் புரத்தில் வைக்கப்பட்டிருந்தாள். அந்நிய சமுதாயத்தில் ராஜாவின் அந்தப்புரத்தில் இருக்கும் பெண் கற்புடன் இருப்பது வழக்கத்தில் இல்லாத ஒன்றாக இருந்தது. ஆனால், எஸ்தர் ராணியாக இருந்தாலும் கூட ஒரு சந்தர்ப்பத்தில் மொர்தெகாயிடம், தான் முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வர வழைக்கப்படவில்லை என்று சொன்னாள் (எஸ்தர் 4:11).

நான்காவது, எஸ்தர் தன்னு டைய கற்பை புறஜாதி ராஜாவினிடத்தில் தியாகம் செய்யும்படி நிர்பந்திக்கப் பட்டாள். எஸ்தரைப் போன்ற ஓர் இளம் பெண்ணுக்கு, கற்பு என்பது விலை மதிப்பில்லா பொக்கிஷமாகும். அதை அவள் தான் விரும்பிய மனிதனுக்கு திருமணத்தின் போது கொடுப்பதற்காக மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பாள். இதற்கு மாறாக, இவள் வீட்டிலிருந்து வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப் பட்டு, ஏதோ ஒரு ஜடப் பொருளைப்போல தான் முன்பின் பார்த்திராத, தனக்கு அன்பில்லாத ஒரு மனிதனிடம் கொடுக் கப்பட்டாள்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்ட ஒருவர் சாதாரணமாக எப்படிப்பட்ட நபராக இருப்பார்? உலகத்தின் மீது கோபம் கொண்ட பெண்ணாக, கோபமும், கசப்பும் நிறைந்த ஆவியையுடைய பெண்ணாக; வாழ்க்கையில் ஏமாற்றமடைந்த பெண்ணாக; எல்லோரையும், எல்லா வற்றையும் பற்றிய எதிர்மறையான எண்ணமுடைய பெண்ணாகத் தான் இருப்பாள்.

அதை விட மோசமானது வாழ்க்கைப் பாதையின் மறுபக்கத்தில் எஸ்தர் எதிர்கொண்ட சோதனைகள். எஸ்தர் உலகின் மிக வல்லமையான தேசத்தின் ராணியாகி விட்டாள். அகாஸ்வேரு அவளுக்கு ராஜ்யத்தின் பாதியைக் கொடுப்பதாகச் சொன்னான். (எஸ்தர் 5:3) ஆமானின் மரணத்தைத் தொடர்ந்து, அவனுடைய திரளான செல்வம் எஸ்தருக்குக் கொடுக்கப்பட்டது (எஸ்தர் 8:1). ஆகவே, எஸ்தர், மனிதன் எப்போதுமே போராடி வருகிற வல்லமை, திரளான செல்வம், உலகப் புகழ் போன்ற அழிவு சக்தியை ஏற்படுத்த வல்லவைக ளோடு அனுதினமும் வாழ்ந்து வந்தாள். இப்படிப்பட்ட செல்வாக்கில் வளர்ந்த ஒருவர் அகந்தை, தான் என்ற கர்வம், இளக்காரம் போன்றவைகளைக் குணங்களாக்கிக் கொள்வார். ஆனால், அதற்கு மாறாக, எஸ்தரின் மிகச் சிறந்த குணாதிசயத்தைக் கவனியுங்கள்.

முதலாவது, அவள் தாழ்மையும், கீழ்ப்படிதலுமுள்ள ஆவியை

வெளிப்படுத்தினாள். ராஜ்யம் முழுவதிலும் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட பெண்கள் சூசான் அரண்மனையில் திரண்டார்கள். அந்த அரண்மனையிலிருந்து தான் அகாஸ்வேரு ராஜா அந்தப் பெண்களில் ஒருத்தியை பெர்சியாவின் ராணியாகத் தெரிந்தெடுப்பான். அங்கே கூடி வந்திருந்த பெண்கள் ராஜ்யத்தின் மிக அழகானவர்கள். அதில் சமுதாயத்தின் உயர்மட்டத்திலிருந்து செல்வாக்காக வளர்க்கப்பட்டவர்கள், குறைவில்லாமல் வளர்க்கப்பட்டவர்கள் தான் வந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெரும்பாலும் இப்படிப்பட்டப் பெண்கள் மாயை, அகந்தையோடு திறமைசாலிகளாயுமிருப்பார்கள். ராஜாவோடு இரவைக் கழிப்பதற்கு முன்பாக ஒவ்வொரு பெண்ணும் தன் கோரிக்கையை வைத்து தான் விரும்பியதைப் பெற்றுக்கொண்டார்கள் (எஸ்தர் 2:13). *மாறாக, எஸ்தர் ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை* (எஸ்தர் 2:15).

இரண்டாவதாக, எஸ்தர் மிக அழகான தோற்றத்தை உடையவளாக இருந்தாள். *எஸ்தருக்குத் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது* (2:15). இவைகளெல்லாம் தேவனுடைய வழி நடத்துதல் தான். தேவனுடைய வழி நடத்துதலுக்குக் கூட ஏதோ ஒன்று இருந்தால் தான் கிரியை நடப்பிக்க முடியும்.

மூன்றாவது, எஸ்தர் மரியாதையும், கீழ்ப்படிதலுமுள்ள ஆவியை வெளிப்படுத்தினாள். ராஜகிரீடம் தலையில் சூட்டப்பட்ட பிறகும் கூட வசனம் இவ்விதமாகச் சொல்கிறது... *எஸ்தர் மொர்தெகாய் இடத்திலே வளரும் போது அவன் சொற்கேட்டு நடந்தது போல, இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்து வந்தாள்* (2:20). எஸ்தர் வல்லமை பொருந்திய பெர்சியாவின் ராணியாக இருந்தாள். அவள் அதிகாரம், செல்வம், புகழ் போன்றவற்றைப் பெற்றிருந்தாள். அவளுக்கு மொர்தெகாயை மறப்பதென்பது அப்பொழுது எளிதாக இருந்திருக்கும். மொர்தெகாயை அவமதிப்புடன் பார்ப்பது கூட அங்கே சுலபமாக இருந்திருக்கும். ஆனால், எஸ்தரை நாம் அவ்விதமாகச் சொல்ல முடியாது.

நான்காவது, எஸ்தர் தன் உயிரை தன் ஜனங்களுக்காகத் தியாகமாகக் கொடுக்க முன்வந்தாள். *இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்* (எஸ்தர் 4:16). எஸ்தர் தன் அதிகாரம், பதவி, செல்வம் மற்றும் புகழ் போன்றவற்றை மாத்திரம் விட்டுக்கொடுக்க முன்வரவில்லை, தன் உயிரைக் கூட தியாகமாகக் கொடுக்க முன் வந்தாள்.

ஒருவர் தனக்கு நேர்ந்த துயரங்களிலிருந்து மீண்டு, புறஜாதிச் சூழ்நிலைகளிலிருந்து மேலெழுந்து, கடுமையான துன்பங்களை மேற்கொண்டு உலகத்திற்கு ஆசீர்வாதமாக இருக்க முடியும் என்பதற்கு எஸ்தர் ஓர் உயிருள்ள சாட்சியாக இருக்கிறாள். ❖

# வெற்றியான தோல்வி

## A Successful Failure

*Kevin L. Moore*

அப்போஸ்தலனாகிய பவுலுடன் பயணித்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? நம்மில் பலர் வாழ் நாளின் ஓர் வாய்ப்பாகவே இதைக் கருது வோம். எருசலேமிலிருந்த ஒரு தகப் பனில்லாத வாலிபனுக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. மரியாளின் குமாரனாகிய மாற்கு என்னும் பேர் கொண்ட யோவா னுக்கு (அப். 12:12) இந்த மேன்மையான ஊழியக்காரரோடு செல்லும் மற்றும் பணிபுரியும், கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது (அப். 13:5).தனக்குக் கிடைத்த இந்த அருமையான சிலாக்கியத்தை முழுமையாகப் பயன்படுத்தாமல், யோவான் மாற்கு ஊழியத்திலிருந்து பாதியிலேயே வெளியேறி வீடு திரும்பி விட்டான் (அப். 13:13) இது வீட்டைக் குறித்த கவலையினால் சென்றாரா, வேலை கடினமாக இருந்ததென்று நினைத்தாரா அல்லது வேறு ஏதாவது காரணங்கள் இருந்ததா என்று தெரிய வில்லை. ஆனால், பவுலின் மனதில் யோவானின் சாக்கு போக்குகள் நியாயப் படுத்த முடியாதவைகளாகவே இருந்த தென்று வெளிப்படையாகவே தெரிகிறது (அப். 15:38). எப்படியிருந்தாலும், மாற்கு என்னும் பேர் கொண்ட யோவான் ஊழியத்தை விட்டு ஓடி, தோல்வியைத் தழுவினான்.

ஊழியப் பணியின் ஆரம்பத்தில் வெற்றி கிடைக்காத போதிலும், மாற்கு என்னும் பேர் கொண்ட யோவான் சீப்புருவிலும், பிற இடங்களிலும் ஊழியம் செய்வதற்காகவும் பர்னபாவுக்கு உதவி செய்வதற்காகவும் அவரோடு போனான் (அப். 15:39) பின்னாளில், பவுல் மாற்கு வை தன் உடன் ஊழியர் என்றும் (யூதா 24). மேலும் (கொலோ. 4:10,11) வசனங் களில், தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என் உடன் வேலையாள் என்றும் சொல்கிறார். உண்மையில், இந்த வாலிபனைப் பற்றி பவுல் சிறப்பாகச் சொல்லுகிறார். .... *ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன் என்றெல்லாம்* (தீமோ. 4:11) இந்த மாற்றம் எப்படி வந்தது? தோல்வி போல் தெரிந்ததை வெற்றியாக மாற்றியது எது? இவைகளைக் கவனியுங்கள்.

பர்னபா, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானிடம் கோபப்படவோ அல்லது ஓடிப்போனவன் என்று நிரந்தர மாக முத்திரைக்குத்தவோ முயலாமல். பர்னபா மாற்குவிற்கு இரண்டாவது வாய்ப்புக்கொடுக்க முன்வந்தார் (அப். 15: 37). பர்னபா இதேவிதமான ஆதரவை


ஏழைகளுக்கும் கொடுத்துள்ளார். (அப். 4:37) அதுபோல சவுலுக்கும் (அப். 9:27), அந்தி யோகியா சபைக்கும் (அப். 11:22, 24) இழந்து போனவர்களுக்கும் (அப். 13:1,5) செய்துள்ளார். எனவே, அப்போஸ் தலர்கள் பர்னபாவை ஆறுதலின் மகன் என்று அழைத்ததில் ஆச்சரியம் எதுவு மில்லை (அப். 4:36). தோல்வியடைந்த வர்களை மறுபடியும் முயற்சி செய்ய ஊக்கப்படுத்துவதற்கு இன்று சபையில் அநேக பர்னபாக்கள் தேவைப்படு கிறார்கள்.

மேலும், மாற்கு என்னும் பேர் கொண்ட யோவான் ஊழியத்தை விட்டு விட்டு ஓடுபவராக எப்போதும் இருக்க விரும்பவில்லை. அவர் ஒருமுறை தோல்வியுற்றார். ஆனால், மறுபடியும் முயற்சி செய்வதற்கு தைரியமும், தீர்மானமும் அவரிடத்தில் இருந்தது. வீட்டுச் சூழலில் வசதியாக இருந்து கொண்டு தான் ஊழியக்காரனாயிருக் கும்படி உத்தேசிக்கப்படவில்லை என்கிற எண்ணத்தை ஏற்றுக்கொள்வது யோவானுக்கு எளிதாக இருந்திருக்கும். ஆனால், யோவான் மாற்கு, மற்று மொரு முயற்சி மேற்கொண்டு வெற்றி யடைந்தான். யோவான் மாற்கு போல தோல்வியினால் துவண்டு போகாத மனம் கொண்டவர்கள் இன்றைக்கும் சபைக்குத் தேவை.

*கடைசியாக, பவுல் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானைப் பற்றி ஆரம்பத்தில் தனக்கிருந்த எண்ணம் தவறானது என்பதை ஒத்துக் கொண்டார்.* அதற்குப் பின்பு மாற்கு வைப் பற்றி தன் மனநிலையை மாற்றிக் கொண்டதாகவும் கூறுகிறார். குறுகிய மனப்பான்மையுடைய மனிதனாக இருந்திருந்தால், பெருமையுடைவராயி ருந்து மன்னிக்கும் மனப்பான்மை இல்லாதவராக பவுல் இருந்திருப்பார். ஆனால், பவுல் எதைப் பிரசங்கித்தாரோ அதையே நடைமுறைப்படுத்தினார். எனவே தான் இவ்விதமாக எழுதினார், "*உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையை யும் தரித்துக் கொண்டு; ஒருவரை யொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங் கள்*" (கொலோ. 3:12,13) என்று. பவுலைப் போல தாழ்மையுள்ள, மன்னிக்கும் ஆவியுள்ளவர்கள் இன்று சபையில் அதிகம் தேவை.

கிறிஸ்துவின் சேவையில் நீங்கள் தோல்வியடைந்து விட்டதாக கருதுகிறீர் களா? அப்படித் தோல்வியுற்றவராக யாராவது ஒருவரை உங்களுக்குத் தெரியுமா? யோவான் மாற்குவின் வாழ்க்கையிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுவோம். "ஒருமுறை தோல்வி என்பது" எப்பொழுதும் தோல்வி என்றாகி விடாது. யோவான் மாற்குவின் உறுதி யையும், பர்னபாவின் ஆறுதலையும், பவுலின் மன்னிப்பின் குணத்தையும் நாம் வளர்த்துக் கொண்டால், நாம் எல்லாருமே, " தோல்வியுற்ற வெற்றி யாளர்களாக " இருக்க முடியும். ❖

# பிலேயாமைப் பற்றிச் சொல்லுங்கள்



# Tell Me About Balaam

*Leon Cole*

பிலேயாம் வேதாகமத்தின் ஒரு முக்கிய கதாப்பாத்திரமல்ல. பிலேயாமின் பெயர் வெளி. 2:14ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் அவனுடைய மாதிரியின்படி நடப்பதை நாம் தவிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிலேயாமைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் பழைய ஏற்பாட்டிலுள்ள எண்ணாகமம் 22-24 அதிகாரங்களுக்குச் செல்ல வேண்டும்.

பிலேயாம் கனம், ஐசுவரியம், பலன் ஆகியவைகளை மனதில் சுமந்து கொண்டு கழுதையின் மீது தன் பயணத்தைத் தொடங்கினான். ராஜா மோசேயை யும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தேவனுடைய ஜனங்களையும் சபித்தால் அவைகளெல்லாவற்றையும் கொடுப்பதாக ராஜா வாக்களித்தான்.

எப்படிப் பார்த்தாலும், பிலேயாமின் கழுதை நன்கு பயிற்சி பெற்ற மிருகமாக இருந்தது. ஆனால், அது வழியை விட்டு வயலிலே விலகிப் போனதற்கான வெளிப் படையான காரணம் எதுவும் தெரியவில்லை. பிலேயாம் கழுதையை அடித்தான். மறுபடியும் விலகிச் சென்றது. அங்கே, பிலேயாம் வந்த பாதையிலே கழுதையை வழி நடத்த முயற்சித்தான். பின்பு அவர்கள் பாதையில் குறுகலான இடத்திற்கு வந்தார்கள். அப்போது கழுதை பயந்து பாதையை விட்டு வெளியேற முயற்சித்தது. அத்தோடு பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று. அவன் திரும்பவும் அதை அடித்தான்.

அதன்பின்பு திடீரென பிலேயாம் கழுதையை எது தடுத்தது என்பதைக் கண்டான். கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக் கொண்டு வழியின் நடுவிலே நின்றார். கழுதை தூதனைப் பார்த்து, வழியை விட்டு விலகாதிருக்குமானால், பிலேயாம் ஒரு செத்த மனிதனாகத் தான் இருந்திருப்பான்.

ஆனால், ஒரு ராஜாவைப் பார்க்க பயணித்த பிலேயாமுக்கு ஏன் இத்தனை எதிர்ப்புகள்? 2 பேதுரு 2:15,16 வசனங்கள் இதற்கான பதிலைக் கொடுக்கிறது. "*செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது". பிலேயாமின் பிரச்சனை பேராசையாக இருந்தது. தேவ தூதனுடைய வார்த்தையின் படி, பிலேயாமின் வழி கர்த்தருக்கு முன்பாக மாறுபாடாக இருந்தது (எண். 22:32).*

" பிலேயாமின் வழிமுறையை " நாம் எல்லாவிதத்திலும் தவிர்ப்போம். நாம் பேராசை உள்ளவர்களாய் நடந்து, நம்முடைய வாழ்க்கையைச் சாபமாக்காமல், "ஆசீர்வாதத்தின் வழிகளாக்க" முயற்சிப்போம். *பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று நம் ஆண்டவர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள்* (லூக்கா 12:15). ❖

---

**ஆ**பிரகாம் லிங்கன் ஒரு நாள் தன் நண்பருடன் ஒரு குறுகிய பாதையில் சென்று கொண்டிருந்தார், அது குறுகிய பாதையாக இருந்தபடியால் ஒவ்வொருவராக செல்ல வேண்டிய தாயிருந்தது. அப்படிச் சென்று கொண்டிருக்கும் போது அவர்களுக்கு முன்பாக இன்னொரு மனிதன் வந்து கொண்டிருந்தார். அந்த மனிதன் வழி விடாத காரணத்தால் ஆபிரகாம் லிங்கன் ஓரமாக நின்று அந்த மனிதன் போகும்படி வழி விட்டார். அப்போது ஆபிரகாம் லிங்கனின் நண்பர் கடுங்கோபமடைந்தார், அவர் ஆபிரகாம் லிங்கனிடம் ஜனாதிபதி அவர்களே, நீங்கள் அப்படி செய்திருக்கக்கூடாது. நீங்கள் அந்த நபரை ஓரமாக நிற்கச் செய்திருக்க வேண்டும் என்று கூறினார்.

பல அமெரிக்க சந்ததியினர் வழிவழியாக ஆபிரகாம் லிங்கனிடம் அன்பு காட்ட காரணமாக இருந்த அந்த எளிய ஞானத்தைக் கொண்டு அவர், நான் ஓரமாக நின்றிருக்கா விட்டால் அங்கே ஒரு " மோதல் " ஏற்பட்டிருக்கும் என்று சொன்னார்.

மேற்சொல்லப்பட்ட சம்பவத்திற்கும் கிறிஸ்து மனிதனோடு இடைபட்டதற்கும் ஒற்றுமை இருக்கிறது என்று நம்புகிறேன். உலகத்தை உண்டாக்கின தேவன், மனிதன் தம்மில் அன்பு கூர்ந்து, தம்மில் நிலைத்திருக்க வேண்டுமென்று நாடினார். மனிதன் பிடிவாதமாக தன்னுடைய வழியில் நடந்தான்.

ஆனால், கிறிஸ்து நாம் இரட்சிக்கப்படும்படியாக தம்மைத்தாமே தாழ்த்தி சிலுவையில் மரிக்க முன் வந்தார். நம் பிடிவாதமான கலகத்தையும் தாண்டி அவர் நம்மீது அன்பு கூர்ந்த படியால் தேவனுக்கு ஸ்தோத்திரம் !


நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8).

---

# சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வன் இரட்சிக்கப்பட்டது போல நாமும் இன்று இரட்சிக்கப்பட முடியுமா?

## *Can we be saved today in the same way that the thief on the cross was saved?*

***John Thiesen***



சிலுவையில் அறைப்பட்டிருந்த கள்வன் தவறான செயல்பாட்டிற்காக குற்றம் சாட்டப்பட்டிருந்தான். ஆனால், அவனுடைய மனமாற்றம் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வழி வகுத்தது. அவ்விதமான மனமாற்றம் நமக்கும் இருந்தால்தான் நம் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற முடியும். அதே நேரத்தில், அந்தக் கள்வன் இரட்சிக்கப்பட்ட விதத்திலேயே நாமும் இரட்சிக்கப்பட முடியாது. அந்தக் கள்வனுடைய இரட்சிப்பு அவரவர் தம்தம் சிலுவையிலே தொங்கிக் கொண்டிருந்த போது நம் ஆண்டவர் தனிப்பட்ட விதத்திலே நேரடியாக மன்னிப்பை வாய் மொழிந்தார். இயேசு தம்முடைய ஊழியத்தின் போது அடிக்கடி மக்களை மன்னித்தார். ஆண்டவருடைய தனிப்பட்ட ஊழியத்தில் பயன்பெற்ற மற்றுமொரு பயனாளி இந்தக் கள்வன்.

சிலுவைக்கு முன்பு கிறிஸ்து தாம் விரும்பிய நிபந்தனைகளின்படி மனிதர்களை மன்னித்தார். ஆனால், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்த போது, உடன்படிக்கை அல்லது ஏற்பாடு என்றழைக்கப்படும் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அது முதல் எவ்வித பட்சபாதமுமின்றி எல்லோரும் அவருடைய உடன் படிக்கையின் நிபந்தனைகளுக்குட்பட வேண்டும். கிறிஸ்துவின் உடன் படிக்கை சிலுவைக்கு முன்பு அவர் உயிரோடிருக்கும்போது அமுலுக்கு வரவில்லை. ஆனால், இப்போது அது அமுலில் இருக்கிறது. அதற்கு இப்போது பெலன் உண்டு என்று எபிரெய எழுத்தாளர் சுட்டிக்காட்டுகிறார் (எபி. 9:15-17).

### சில காரியங்கள் நமக்கும் கள்வனுக்கும் பொதுவாக இருக்கிறது.

அந்தக் கள்வன் ஆண்டவரிடத்தில் வரும் எல்லோருக்கும் அவசியமாயிருக்க வேண்டிய சில மனப்பான்மைகளைப் பெற்றிருந்தான். உதாரணத்திற்கு, சிலுவையில் இயேசு நடந்து கொண்ட விதம் அவனை இயேசு தான் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கிறிஸ்து என நம்பச் செய்திருக்கிறது. எனவே தான், அவன் இயேசுவிடம்,

"*ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்*" என்று மன்றாடினான் (லூக்கா 23:42). அவனுடைய விசுவாசத்தை இயேசு பார்த்து, "*இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்*" என்று சொன்னார் (43) இன்று நாமும் இதே முடிவுக்கு வந்து இயேசுவே ஆண்டவரென்று அறிக்கை செய்தால் தான் இரட்சிக்கப்பட முடியும்.

அந்தக் கள்வனுடைய மனந்திரும்புதல் மற்றுமொரு கள்வன் இயேசுவை இகழ்ந்த போது அவனை கடிந்து கொண்டதில் வெளிப்படையாகிறது. இதற்கு முன்பு அந்தக் கள்வன் மற்ற கள்வனோடு சேர்ந்து களவில் ஈடு பட்டான். ஆனால், இப்போதோ அவனைக் கடிந்து கொள்கிறான், *நீ இந்த ஆக்கினைகுட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று கடிந்து கொண்டான்* (லூக்கா 23:40,41). அந்தக் கள்வன் இப்போது தான் முன்பு செய்த பாவங்களுக்காக வெட்கப்படுகிறான், அதற்காக வருத்தப்படுகிறான். இன்று நாம் மன்னிக்கப்பட வேண்டுமென்றால், நாமும் பாவத்தைக் குறித்து அந்தக் கள்வன் சிந்தித்த விதமாகச் சிந்திக்க வேண்டும்.

**அந்தக் கள்வனுடைய இரட்சிப்பில் இருந்து நம்முடைய இரட்சிப்பு எங்கே வேறுபடுகிறது?**

கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் மற்றும் மனந்திரும்புதலைப் பொறுத்த வரை நம் இரட்சிப்பிற்கும், கள்வனுடைய இரட்சிப்பிற்கும் வேறுபாடு எதுவுமில்லை, ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதில் தான் வேறுபாடு இருக்கிறது. இது கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு நடைமுறைக்கு வந்த கிறிஸ்துவின் உடன்படிக்கையின் நிபந்தனைகளில் ஒன்றாகும். அப்போதிலிருந்து இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி சொன்னார். "*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்*" (மாற்கு 16:15,16). அந்தக் கள்வன் மேற்சொல்லப்பட்ட நிபந்தனைக்கு உட்பட்டவனல்ல. ஏனென்றால், அவர்கள் சிலுவையில் இருந்த போது இயேசு அந்தக் கட்டளையைக் கொடுக்கவில்லை.

## கள்வர்களுக்குச் செவி கொடுத்தல்

மூவர் அழுதுகொண்டே தொங்கினார்கள்
அவர்கள் பாதங்கள் வழியாக
கண்ணீர் சிந்தி கொண்டிருந்தது
ஆனால், ஒருவர் இரத்தத்தை சிந்தினார்

மூவர் பேசிக் கொண்டே தொங்கினார்கள்
ஒருவர் வலியில் கதறினார்
மற்றவர் மூன்றாவது மனிதனுடைய
அறிந்து கொள்ளுதலைத் தேடினார்

மூவர் ஜெபித்துக் கொண்டே தொங்கினார்கள்
ஒருவர் சபித்துக் கொண்டிருந்தார்
மற்றொருவர் மன்றாடிக் கொண்டிருந்தார்
மூன்றாமவர் அழைக்கப்பட்டார்

மூவர் மரித்துக் கொண்டே தொங்கினார்கள்
ஒருவர் வீணாய்ப் போன தன் உடலில்
அக்கினியை ருசி பார்த்தார்
இன்னொருவர் மூன்றாவது நபரால்
தூக்கிச் செல்லப்பட்டார்

# உண்மையாகவே ஞானஸ்நானம் அவசியமா?

# Is Baptism Really Required?

*Wayne Jackson*

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று வேதாகமம் மிக எளிமையான முறையில் சொல்லும் போது, இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என்று ஏன் சிலர் வற்புறுத்துகிறார்கள்? (அப். 2:21). இது சிலருடைய கேள்வி.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வதும், ஞானஸ்நானம் பெறுவதும் தனித்தனியான கடமைகள் என மேலே கேட்கப்பட்ட கேள்வி யூகிக்கச் செய்கிறது. ஆனால் அப்படி அல்ல. கீழ்க்காணும் காரியங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

1. வெறுமனே கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வது இரட்சிப்பை ஏற்படுத்தாது என்பது வெளிப்படையாகிறது. *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத். 7:21)* என்று இயேசு தாமே அறிவித்திருக்கிறபடியால், தெளிவாகவே கிறிஸ்துவை தொழுது கொள்ளுதல் என்பது வாய் ரீதியான வேண்டுகோள் என்பதை விட அதிகமான காரியங்களை உள்ளடக்கியது என்பது புலப்படுகிறது.

2. அப்போஸ்தலர் 2ல் *கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் இரட்சிப்பை வாக்குத்தத்தம் பண்ணின அதே அப்போஸ்தலன் இவ்விதமாகவும் கட்டளையிட்டார்: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* (அப். 2:38). 2:21 ல் உள்ள இரட்சிக்கப்படுவான் என்கிற சொற்றொடர் 2:38 ல் உள்ள பாவமன்னிப்புக்கு இணையாக இருப்பதால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பது மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தை உள்ளடக்கியதாயிருக்கிறது.

3. பின்பு புதிய ஏற்பாட்டிலிருந்து கிடைக்கும் சாட்சி பாவ மன்னிப்பைப் பெறும் பொருட்டு ஞானஸ்நானத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கும் ஒருவர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறார் என்பதைத் தெளிவாக்குகிறது. அப். 22:16ஐ கவனியுங்கள். மனந்திரும்பிய சவுலுக்கு அனனியா இவ்விதமாக அறிவுறுத்துகிறார்: *இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்று.*

கடந்த கால பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற விரும்பும் யாவரும் மீட்பின் சுவிசேஷத் திட்டத்திற்கு கீழ்ப்படிவதன் மூலமாக கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வார்கள். வேறெந்த வழியிலும் ஒருவர் பாவமன்னிப்பைப் பெற முடியாது. ❖

## வேதாகமக் கேள்விகள்

# நமக்காகப் பரிந்து பேசுகிறது யார்? மத்தியஸ்தம் செய்வது யார்?

# *Who Intercedes and Mediates for Us?*

*T. Pierce Brown*

**1** தீமோ. 2:5, தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியஸ்தர் ஒருவரே என்று இயேசு கிறிஸ்து சொல்லுகிற படியால், நமக்காக வேண்டுதல் செய்கிற வர் யார் என்ற கேள்வி சிலரால் கேட்கப் படுகிறது. (ரோமர் 8:26) பரிசுத்த ஆவி யானவர் நமக்காக வேண்டுதல் செய் கிறார் என்று சொல்வதன் பொருள் என்ன? இங்கே கேள்வி என்னவென் றால் "மத்தியஸ்தர் ஒரே ஒருவர் என்றால் இரண்டு பேர் என்பது எப்படி?" ஒன்றுக்கு மேலான மத்தியஸ்தர் இருப்பது தெரிய வருமானால், இன்னொருவர் அதாவது ஒரு பிரசங்கியோ, பாதிரியோ அல்லது போப்போ கூட ஒருவராக இருக்கலாம்.

இங்கே பிரச்சினை என்ன வென்றால், ஒன்றுக்கொன்று வேறுபடு கின்ற காரியங்களுக்கு இடையேயான வித்தியாசத்தைக் காணத் தவறுவது தான். "வேண்டுதல்" செய்வதென்பது enteuxis என்கிற கிரேக்க வார்த்தையி லிருந்து வருகிறது. அதன் பொருள் "முறையிடுவது" என்பதாகும். இந்த முறையிடுதல் ஒருவருக்கு ஆதரவாக வோ, எதிராகவோ இருக்கும். அப் 25: 24ல் யூதர்கள் பவுலுக்கு விரோதமாக அபயமிட்டதை நாம் வாசிக்கிறோம். ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26). கிறிஸ்து நமக் காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8: 34, எபி. 7:25) நாம் ஒருவருக்கொருவர் வேண்டுதல் செய்வது (1 தீமோ 2:11; 4,5). ஒருவருக்கொருவர் "வேண்டுதல்" செய்கிற காரியத்தில், தேவன் எந்த இடத்திலும், எண்ணிக்கை பற்றி பேசுவதில்லை.

ஆயினும் "மத்தியஸ்தர்" என்கிற வார்த்தை, Mesites என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததாகும். சொல் அர்த்தரீதியாக அதன் "பொருள் நடுவில் நின்று பேச்சுவார்த்தை நடத்துபவர்". அதாவது இருவருக்கிடையில் ஏற்படும் வேறுபாடுகளைக் களைந்து ஒப்புரவாகு தலை ஏற்படுத்தும் ஒருவர் என்று பொருள்படும். கிறிஸ்து நமக்கு மத்தியஸ் தராயிருப்பது போல் யாருமே நமக்கு இருக்க முடியாது. மனிதனுக்கு தேவ னோடு இருக்கும் உறவின் சிறப்புத் தன்மை காரணமாக சிறப்பான மத்தி யஸ்தர் நமக்குத் தேவைப்படுகிறார். பாவத்தின் காரணமாக மனிதன் தேவ னிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டான். அதற்கு விலை கொடுக்கப்பட வேண்டிய தாயிருந்தது. செலுத்தப்பட்ட பலி மனிதன் தேவனிடம் ஒப்புரவாகும்படி செய்தது. மோசே நியாயப்பிரமாணத்திற்கு மத்தி யஸ்தராக இருந்தபோதிலும் கூட, கிறிஸ்து மத்தியஸ்தராக இருந்து நிறை வேற்ற வேண்டியிருந்ததை நிறை வேற்றவில்லை.

தொழிலாளர்களுக்கும், நிர்வா கத்திற்கும் இடையிலுள்ள பிரச்சனை யில் மத்திய அரசாங்கத்தின் மத்தியஸ்தர் தொழிலாளர் சார்பாக சிலகாரியங்களை நிர்வாகத்திற்கு கொடுக்கலாம். அது போல நிர்வாகம் சார்பாக சில காரியங்களை தொழிலாளர்களுக்குக் கொடுக்கலாம்.

அந்நபர், அங்கே வேண்டுதல் செய்யலாம் அல்லது செய்யாமல் போகலாம். அப்படிச் செய்தால், அது மத்தியஸ்தம் சம்பந்தப்படாத ஒரு வேலை. புதிய உடன் படிக்கையின் *மத்தியஸ்தராக* கிறிஸ்து (எபி. 9:15) பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஒரே தரம் பிரவேசித்து மனிதனுக்கும், தேவனுக்கும் ஒப்புரவாகுதலைச் சாத்தியமாக்கினார் (எபி. 9:24,25). ஆனால், ஒருவரால் தேவனிடம் மனிதன் சார்பாக ஒரு மத்தியஸ்தர் இல்லாமலேயே வேண்டுதல் செய்ய முடியும்.

இது ஒரே பாடத்தின் சற்று வித்தியாசமான நிலையாக இருந்த போதிலும், கூட ரோமர் 8:26 ல் பேசப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்வதென்பது, ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலி ருக்கிற தனிப்பட்ட நபரின் ஜெபத்தின் மூலமாக அவர் நமக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்வதைத்தான் குறிக்கிறதென்று தெரிகிறது. ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். பரிசுத்த ஆவி வேண்டுதல் செய்வது எப்படி செய்யப் பட்டாலும் கூட 1 தீமோத். 2:5-ல் சொல்லப்பட்டிருக்கிற இயேசுவின் செயல்பாடும் அல்லது மத்தியஸ்த பணியும் ஒன்றாகாது.

இந்த ஆழமான பாடத்தைப் பற்றி இன்னும் விளக்கமான கட்டுரை எழுதப்பட முடியுமென்று உணர்கிறேன். அதன் மூலம் இன்னும் அதிகமான கேள்விகளுக்கு பதிலளித்து ஆழமாக ஆராய முடியும். ஆனால், வேண்டுதல் செய்வதற்கும், மத்தியஸ்தம் செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தை ஓரளவுக்காகிலும் நாம் அறிந்து கொள்வதற்கு குறைந்தபட்சம் இது உதவியாயிருக்கும். அதிலும் குறிப்பாக கிறிஸ்து நமக்காகச் செய்யும் மத்தியஸ்தம் தனித்துவம் வாய்ந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு. ❖

## தனிப்பட்ட ஊழியத்தில் உங்களை எப்படி ஈடுபடுத்திக் கொள்ள முடியும்?

1. கிறிஸ்தவத்தைக் குறித்து நண்பரிடம் விவாதியுங்கள்.
2. யாருக்காவது ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் குறித்த கைப்பிரதியைக் கொடுங்கள்.
3. கிறிஸ்தவராயிருப்பதினால் உண்டாகும் சந்தோஷத்தைப் பிறரிடம் சொல்லுங்கள், காட்டுங்கள்
4. உங்களோடு ஆராதிக்க யாரையாவது அழையுங்கள்.
5. சமுதாயத்தில் புதிதாய் வந்திருக்கிறவர்களைப் போய் சந்தித்து, ஆராதனைக்கு அழையுங்கள்.
6. புதிய அங்கத்தினர்களை உற்சாகப்படுத்துங்கள்.
7. உங்களோடு வேதபாட வகுப்புக்கு ஒரு நண்பரை அழைத்து வாருங்கள்.
8. சபை செயல்பாடுகளில் சக கிறிஸ்தவர்கள் ஈடுபடும்படி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
9. குடும்பத்தில் மரணம் ஏற்பட்டாலோ, நோய்வாய்ப்பட்டாலோ போய் விசாரியுங்கள்.
10. வியாதியஸ்தர்களையும், சிறையில் உள்ளவர்களையும், போய் சந்தியுங்கள்.
11. பலவீனமான அங்கத்தினரிடம் உற்சாகமான வார்த்தைகளைப் பேசுங்கள்.

-Jimmy Ferguson.

**வேதாகமக் கேள்விகள்**

# இயேசு கிறிஸ்துவுக்குள் நம் உறவு

# Our Relationship in Jesus Chris.


***Dillard Thurman***

"இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளி. 7:14)

| இயேசு கிறிஸ்து | சபை | ஒரு கிறிஸ்தவன் |
|---|---|---|
| தலையாயிருக்கிறார் (எபே. 1:22,23) | சரீரமாயிருக்கிறது (கொலே. 1:18) | அங்கமாயிருக்கிறான் (1 கொரி. 12:27) |
| இரட்சகராயிருக்கிறார் (1 யோ. 4.14) | இரட்சிக்கப்பட்டவர்களாலானது (எபே. 5:23) | இரட்சிக்கப்பட்டவனாயிருக்கிறான் (ரோ. 8:24) |
| மீட்பராயிருக்கிறார் (தீத்து. 2:14) | மீட்கப்பட்டவர்களாலானது (1 பேதுரு 1:18) | மீட்கப்பட்டவனாயிருக்கிறான் (எபே. 1:7) |
| கழுவுகிறவராயிருக்கிறார் (எபே. 5:26) | கழுவப்பட்டவர்களாலானது (1 கொரி. 6:11) | கழுவப்பட்டவனாயிருக்கிறான் (வெளி. 1:5) |
| சுத்திகரிக்கிறவராயிருக்கிறார் (எபே. 2:11) | பரிசுத்தமாக்கப்பட்டவர்களாலானது (1 கொரி. 1:2) | பரிசுத்தவானாயிருக்கிறான் (பிலிப். 1:1) |
| தேவனுடைய சுதந்தரராயிருக்கிறார் (ரோ. 8:16) | உடன் சுதந்தரர்களாலானது (ரோ. 8:17) | தேவனுடைய சுதந்தரமாயிருக்கிறான் (கலா. 3:69) |
| ராஜாவாயிருக்கிறார் (1 தீமோ. 6:15) | ராஜ்யமாயிருக்கிறது (எபி. 12:28) | பிரஜையாயிருக்கிறான் (எபே. 2:19) |
| மேய்ப்பராயிருக்கிறார் (யோ. 10:11) | மந்தையாயிருக்கிறது (யோ. 10:11) | மந்தையில் இருக்கிறான் (அப். 20:28) |

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்;
பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17)

# கிறிஸ்து, நம் ஆடையாயிருக்கிறார்



# Christ, Our Clothing

*E. Claude Gardner*

## I முன்னுரை

A. *உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவை ஆடையாக உடுத்துக் கொண்டீர்களே (கலா. 3:27)* (குறிப்பிட்ட மொழிபெயர்ப்பு)

B. கிறிஸ்து என் எல்லாமுமாயிருக்கிறார்

C. வேதாகமத்தில் ஆடைகள் என்ற சொல் அர்த்த ரீதியாகவும், உருவக நடையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

## II விவாதம்

A. ஆடை உடுத்துவதன் மூன்று வகையான நோக்கம் - கிறிஸ்துவும் அவ்விதமாகவே இருக்கிறார்

1. <u>அழகிற்காக</u> மற்றும் நம்மை அதிக எடுப்பாகக் காட்டுவதற்காக

a. லூக்கா 12:27,28

b. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும் (வெளி. 3:5)

c. கிறிஸ்துவால் நம் வாழ்க்கையை அழகாக்க முடியும் (2 கொரி. 5:7; தீத்து. 3:3,7)

2. <u>பாதுகாப்பிற்காக</u>

a. இயேசு நம்மைப் பாதுகாக்கிற நம் மேய்ப்பராயிருக்கிறார் (சங். 23; யோ. 10:11, 27-29)

b. ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோ. 8:1; 1 யோ. 1:7).

3. <u>நம் நிர்வாணத்தை மறைப்பதற்காக</u>

a. ஆதாமும், ஏவாளும் (ஆதி. 3:7)

b. அவமானமான நம் பாவங்களை மூடுவதற்கு இயேசு வந்தார் (1 யோவான் 4:9,10; எபி. 8:12)

B. கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள் அல்லது ஆடையாக உடுத்திக் கொள்ளுங்கள்.

1. புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் (ரோமர் 13:14; எபே. 4:4; கொலோ. 3:10)

2. இதன் பொருள் கிறிஸ்துவின் குணாதிசயங்களை நாம் தரித்துக் கொள்ள வேண்டும் (பிலி. 2:5; 1 யோவான் 2:6).

3. அனலுமில்லாமல், குளிருமில்லாமல் வெதுவெதுப்பான நிலையில் இருப்பவர்கள் நிர்வாணிகளாயிருக்கிறார்கள் (வெளி. 3:14,17)

C. கிறிஸ்துவை நாம் எப்போது தரித்துக்கொள்கிறோம்? எப்போது நாம் ஆடை உடுத்திக் கொள்கிறோம்?

1. விசுவாசத்தினால் மாத்திரம் நாம் கிறிஸ்துவை ஆடையாக உடுத்திக் கொள்வதில்லை.

2. பவுல் கலா. 3:26,27 வசனங்களில் போதித்திருக்கிறபடி: ஞானஸ்நானத்தின் போது நாம் கிறிஸ்துவை ஆடையாக உடுத்திக்கொள்கிறோம்.

## III முடிவுரை :

A. "ஞானஸ்நானமில்லாமலேயே நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று நான் அறிவேன் என்று ஒருவர் சொல்வது கிறிஸ்துவை ஆடையாக அணிந்து கொள்ளாமலேயே ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்வது போன்றதாகும்.

B. "உலகத்தை சுவிசேஷமயமாக்க நாம் கிறிஸ்துவை ஆடையாக அணிந்து கொள்ள வேண்டும்". அதாவது, கிறிஸ்துவின் குணாதிசயங்களை நாம் அணிந்து கொள்ள வேண்டும். ❖

## நீங்கள் பிரசங்கத்தை எப்படி விரும்பினீர்கள்?

இது ஒரு பரிச்சயமான கேள்வி. எந்த வழிமுறைகளை வைத்து நாம் ஒரு நல்ல பிரசங்கத்தைத் தீர்மானிக்கிறோம்? ஒரு பிரசங்கம் கீழ்க்கண்டவாறு இருந்தால் வெற்றிகரமான பிரசங்கமாயிருக்குமென்று ஓர் ஆலோசனையாகச் சொல்கிறேன்.

1. தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருந்தால்
2. அன்புடன் பிரசங்கிக்கப்பட்டால்
3. தேவையை சந்திக்கும் விதத்தில் ஆயத்தமாக்கப்பட்டிருந்தால்
4. எல்லோரும் புரிந்து கொள்ளும்படி பேசப்பட்டால்
5. தேவனை மகிமைப்படுத்தினால்
6. மக்கள் சிந்திக்கத்தக்க சவால்விட்டால்

பிரசங்கங்கள் மக்களின் மகிழ்ச்சி மற்றும் அங்கீகாரத்தை அடிப்படையாக வைத்து அளவிடப்படக்கூடாது, ஆனால், அவர்களுடைய பரிசுத்த ஜீவியம், தேவ பக்தியுள்ள செயல்பாடு, உண்மையான கிறிஸ்தவ அர்ப்பணிப்பு போன்றவற்றால் அவர்கள் அளிக்கும் பதிலை அடிப்படையாக வைத்து அளவிடப்பட வேண்டும்.

பவுலின் எச்சரிப்பு இன்றும் உண்மையாயிருக்கிறது " நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே " (கலா. 1:10).




# என் குடும்பத்திற்கு நான் எதைக் கொடுப்பேன்

## What Shall I Give My Family?

***Ken Tyler***

**நோக்கம் :** ஒவ்வொரு குடும்பத்திற்கும் எது தேவை என்பதை வலியுறுத்துவது.

**I** வேதாகமம் (உபாகமம் : 6:12; சங். 19:7; ரோ. 1:16; யோ. 12:48; யாக். 2:12

A. குடும்பங்கள் வேதாகமம் இல்லாதபடியால் வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கின்றன (சங். 119:105).

1. காலம் கடந்து போவதற்கு முன்பாக நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

2. உங்கள் குடும்பத்தில் வேதாகமம் எவ்வளவு முக்கியமானது?

**II சபை** (மத்தேயு 6:33; 1 கொரி. 14:12)

A பெரும்பாலான மக்கள் நேர்மையுள்ளவர்களாக இருந்தால் தங்களுக்கு சபை அதிக முக்கியமானதல்ல என்று சொல்லத்தக்கவர்களாகத்தான் வேண்டும்.

1. தேவன் உலகத்தை இரட்சிப்பதற்கு சபை ஒரு வழியாக இருக்கிறது. (எபே. 5:23; அப். 8:4)

## III நேரம் நான் என் மகனுக்கு என்னத்தைக் கொடுப்பேன்?

ஒரு சிறு பையனுக்கு நீங்கள் எதைக் கொடுப்பீர்கள்?
கவர்ச்சிகரமான விளையாட்டையா, பளபளப்பான பொம்மையையா,
விளையாட்டுக் கத்தியையா, குறுக்கெழுத்துப் பெட்டகத்தையா
வளைவு தடத்தில் ஓடும் ரயிலையா?
படங்கள் நிறைந்த புத்தகத்தையா, செல்லப் பிராணியையா,
இல்லை, இப்படிப்பட்ட காரியங்களுக்கு இன்னும் அதிக காலம் இருக்கிறது.
அவனுக்கென்று ஒரு நாளைக் கொடுங்கள்
அந்த சிறு விளையாட்டுகள் அதிகமாகி விட்டன, பொம்மைகள் அழிந்து போகின்றன ஆனால், உங்கள் மகனுக்கு ஒரு நாளை நீங்கள் கொடுத்தால் அவன் ஒருபோதும் உங்களை மறக்கமாட்டான்.

A குடும்பம் கவனக்குறைவால் அழிக்கப்படுகிறது

1. சரியான குடும்பத்தைக் கட்டுவதற்கு நேரம் எடுக்கும் (உபா. 6:6,7)

2. உங்கள் குடும்பம் ஒன்றாகச் சேர்ந்து எவ்வளவு நேரத்தை செலவு செய்கிறது?

## IV உண்மைத் தன்மை (எபே. 5:22 25,33; எபே. 6:14)

A. குடும்பத்தில் உண்மைத் தன்மை என்பது சமுதாயத்தில் மறக்கப்பட்ட நற்பண்பாயிருக்கிறது.

1. நாம் குடும்பத்திற்கு கொடுக்க வேண்டிய அர்ப்பணிப்பை நம்முடைய சூழ்நிலை அழிக்க நாம் அனுமதிக்கக்கூடாது.

2. உங்கள் குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட நேரத்தை செலவு செய்கிறீர்களா?

**முடிவுரை :** ஒவ்வொரு குடும்பமும் உபா. 6:10,12 க்கு செவிக் கொடுக்க வேண்டும். உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் எதைக் கொடுக்கிறீர்கள்? ❖

முன்பெல்லாம் பெற்றோர்களுக்கு நிறையப் பிள்ளைகள் இருந்தார்கள். இப்போதோ, பிள்ளைகளுக்குப் பல பெற்றோர்கள் இருக்கும் நிலை காணப்படுகிறது.